Registered as a News Paper in Sri Lanka

දිනමුරසු වාරමලර්

பக்கம் 24 ரூபா 20.00


நவ. 23-29, 2006

# வாரமலர் தினமுரசு


THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 688



## இலங்கைப் பிரச்சினையில் இந்தியாவின் பிந்திய நிலைப்பாடு!



அசத்தல் தொடர் ஆரம்பம்!



புரட்சித் தலைவர் பிடல் காஸ்ட்ரோ!

"பட்ஜட்" பார்வை

கமலின் புதிய அவதாரம்!



## பிரபாகரனும் பிறந்த நாள் உரையும்!



## பிரமுகர்களைக் குறிவைக்கும் கொலையாளிகள்!

# ஆன்மீகம்



## அறநெறி மனிதனை மகாத்மாவாக்கிறது

ஆன்மாக்களை தூய்மைப்படுத்துவதே ஆன்மீகக் கொள்கை என்பதற்குச் சான்றுகள் பல கூறலாம். அதில் ஒருசிலவற்றை இங்கே குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும் என்று நினைக்கின்றேன். ஆயிரக்கணக்கான சட்ட, சமய நூல்களைக் கற்றுத் தெரிந்தவர்தான் காந்தியடிகள். ஆனால், அவரைப் போன்று இன்னும் எத்தனையோ, சட்டமேதைகள், சமயவாதிகள் இல்லாமலில்லை. இருந்தும், 'மகாத்மா'என்றதோர் பட்டம் சட்டம் படித்த எல்லோருக்கும் கொடுக்கப்படவில்லையே! ஏனெனில் காந்தியடிகளின் ஆன்மீகக் கொள்கையில் உன்னதமானதோர் லட்சியம் இருந்தது. அது என்ன? என்ற கேள்வி எழுமாயின், ஒரேயொரு குறள் நெறியைப் பின்பற்றியதே அந்த நெறி 'உள்ளத்தால் பொய்யா தொழுகின் உலகத்தார் உள்ளத்துள் எல்லாம் உளன்' என்பதே. உள்ளத்தில் கபடமற்ற தன்மை, மற்ற உயிர்களுக்குத் தீங்கு விளைவிக்க ஒருபோதும் எண்ணாத கருணை, ஒருவேளை அப்படி நினைத்தாலும் அதை வெளிப்படையாகக் கூறி அதற்கு மன்னிப்பு வேண்டி நிற்கும் பெருந்தன்மை. இத்தகைய அறநெறியே ஒரு சாதாரண மனிதனின் ஆன்மாவை மகாத்மா ஆக்கியது. ஆன்மீகத்தின் அடிப்படை இதைத்தான் வேண்டி நிற்கின்றது என்பதை ஆன்மீகம் பற்றிய ஆய்வாளர்களும், வலியுறுத்தியுள்ளனர் என்பது தெளிவு.

**என். எஸ். ராஜா, தம்பலகமம்.**

## அறுவடை

"அநியாயத்தை உழுது, தீவினையை விதைத்தவர்கள் அதையே அறுக்கிறார்கள்."

"தேவனுடைய சுவாசத்தினாலே அவர்கள் அழிந்து, அவருடைய நாசியின் காற்றினாலே நிர்மூலமாகிறார்கள்."

ஆம், சகோதர, சகோதரிகளே! (யோபு -4:8-9)

நிலத்தை உழுது நெல்லை விதைப்பவர்கள், பயிரை அறுவடை செய்கிறார்கள். ஆனால் அநியாயத்தை உழுது தீவினையை விதைப்பவர்களோ அதையே அறுவடை செய்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் தேவனுடைய சுவாசத்தினாலே அழிந்து, அவருடைய நாசியின் காற்றினாலே நிர்மூலமாகிறார்கள். இதைத்தான் புனிதவேதாகமம் சொல்கிறது.

ஒவ்வொருவரும் தான் செய்யும் காரியங்களுக்கு ஏற்ப பலனை அனுபவித்தாக வேண்டும். அது நல்வினை என்றால் நல்லதே நடக்கும். தீவினையென்றால் தீயதே நடக்கும். வயலில் விளையும் நெல்லை அறுவடை செய்வது போல வாழ்க்கையில் நாம் விதைத்த நல்வினை - தீவினை என்பவற்றுக்கு அறுவடை நிச்சயம் உண்டு. ஆகவே, நியாயத்தை உழுது, நல்வினையை விதைப்போமாக!

**ஆர். தவமணிதேவி, வத்தளை**

## நெருக்கடியான வாழ்க்கைக்குக் காரணம் யாது?

மனிதனுக்கு நெருக்கடியான வாழ்க்கை ஏற்படுவதற்குப் பல்வேறு காரணங்கள் உள்ளன. அவற்றுள் ஒன்று தாய், தந்தையரைக் கொடுமைப்படுத்துவதாகும். அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

'பெற்றோரைக் கொடுமைப்படுத்துவதைத் தவிர்த்து மற்ற பாவங்களுள் தான் நாடியவற்றை அல்லாஹ் மன்னித்து விடுகின்றான்.' பெற்றோரைக் கொடுமைப்படுத்தியவனின் தண்டனையை அவனின் மரணத்திற்குள்ளாக இவ்வுலகிலேயே அல்லாஹ் துரிதமாகக் கொடுத்துவிடுகின்றான்.

அறிவிப்பாளர் : 'லரத் அபி பக்ரா (ரலி);

நூல் : பைஹக்கி.


'...எவர்கள் தங்கள் பெற்றோரைச் சபிக்கின்றார்களோ...அவர்களை அல்லாஹ் சபிக்கின்றான்' என்று அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

அறிவிப்பாளர் :- அலி (ரலி)

நூல் :- புகாரி, முஸ்லிம் (அதபுல் முப்ரது)

**-முஹம்மது ஹஸனி, கல்முனை - 07**

## கவிதைப் போட்டி இல.685




### பரிசுக்குரிய கவிதை

### பசி

நித்தமும் யுத்தத்தால்
செத்தவர்கள்
உத்தமராய் உறங்குகிறார்கள் -
ஆனால்
அநாதைகள் எங்களை
அரவணைப்பார் இன்றி
பசியில்
கைநீட்டி நிற்கிறோம்
எட்டிப் பார்ப்பார் இன்றி......!

*- ப. பிரபாகரன், தெல்தோட்டை*

## கவிதைப் போட்டி இல.688



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 28.11.2006.

கவிதைப் போட்டி இல.688
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

### ஏது முக்கியம்?

எமக்கு!
நாளைய உலகம்
நம் கையில் என்பது
முக்கியமல்ல!
இன்றைய உணவு
யார் கையில் என்பதே
முக்கியம்!

*- பா.ஜனனி, வவுனியா.*

### வயிற்றுக்கு என்ன வழி?

உறவுகள் பிரிஞ்சதை
மனசு தாங்குது!
உணவு பிரியிறதை
பாழாய்ப்போன
வயிறு
தாங்காதாமே!

*- இரா.தாரணி, நுவரெலியா.*

### கையேந்தும் நிலை!

தமிழனாய்ப் பிறந்துவிட்டாய் இப் பாரினிலே
உன் வயிற்றுப் பசியைப் போக்க எல்லோரிடமும்
கையேந்தும் நிலைதான் இந்த நிலை என்று
மாறுமோ?

*பாலராணி, மன்னார்.*

### காரணம்!

இதற்கெல்லாம்
காரணம்,
பசி!
நாட்டில் இந்த
நிலைமைக்கு
யுத்தமே காரணம்.

*- ஜிந்து, கிண்ணியா– 5*

### போரினால்...!

காசுக்குப் போய்விட்டது
மானம்!
அரைக் கச்சம்
சுருங்கிவிட்டது
பிணியால்!
முழுதும் இழந்தாச்சு

போரால்!
முச்சந்தியில் கை
ஏந்துகிறோம்
பசியால்!!!

*–நா.ஜெயபாலன், பிபிலை.*

### சுதந்திரம் வேண்டும்

வறுமைப் பிடியிலிருந்து விடுதலை வேண்டும்!
பசித் தீயிலிருந்து விடுபட வேண்டும் - என்று
கையேந்தினோம்....!உனக்குக் கேட்கவில்லை!
சமாதானம் வேண்டும் எமக்குச் சுதந்திரம்
வேண்டும்
என்று கையேந்துகிறோம்!
அதாவது கேட்கிறதா?

*– M.M. இஸட் சுஹதா, பாணந்துறை.*



# உங்கள் பக்கம்

## பாதுகாப்பு யாரிடம்?

அண்மையில் வத்தளைப் பகுதியில் நடைபெற்ற ஒரு கொள்ளைச் சம்பவம் காவல்துறை மீது நம்பிக்கையீனத்தை ஏற்படுத்துகிறது.

கணவன் அயல்நாட்டில் உழைத்துத் தேடிய விலையுயர்ந்த பொருட்களை தன் மனைவிக்கு அனுப்பி வைத்திருந்தார். அந்தப் பெண்மணியோ, தன் வயதான தாயுடனும், முறையே 12, 10 வயதுடைய தன் இரு புதல்வர்களுடனும் வசித்து வந்தார். ஒரு நாள் இரவில் கொள்ளையர்கள் சிலர் வீட்டுக்குள் புகுந்து வாள், கத்தி, துப்பாக்கி கொண்டு அவர்களை மிரட்டி அனைத்துப் பொருட்களையும் சூறையாடிச் சென்றுவிட்டனர்.

செய்வதறியாது அஞ்சி நடுங்கிய அப்பெண்மணி, விடியும் வரை காத்திருந்து மறுநாள் காலையில் பொலிஸ் நிலையம் சென்று முறையிட்டுள்ளார். ஆனால் காவல் துறையினர் அவரது முறைப்பாட்டைத் தட்டிக்கழித்து விட்டனர். அத்துடன் நில்லாது, அப்பெண்மணி சற்றுத் தொலைவிலுள்ள வேறொரு பொலிஸ் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார். முறைப்பாட்டை ஏற்றுக் கொண்ட பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த சில அதிகாரிகள் விரைந்து செயற்பட்டு சம்பந்தப்பட்ட கொள்ளையர் தலைவனைக் கைது செய்து விளக்கமறியலில் வைத்துள்ளனர். ஆனால், இரண்டொரு தினங்களில் எவ்வாறோ விடுவிக்கப்பட்ட அந்தக் கொள்ளையர் தலைவன், அந்தப் பெண்மணியின் வீடு தேடி வந்து, அவரை அடித்து, உதைத்து துன்புறுத்தியதுடன், 'இதை மீண்டும் பொலிஸில் சொன்னால் உன்னையும், உன் குடும்பத்தையும் கொலை செய்வேன்' என்று எச்சரிக்கையும் விடுத்துள்ளான்.

படுகாயமடைந்த அந்தப் பெண்மணி, இரு வாரங்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று தற்போது வீடு திரும்பியுள்ளார்.

இப்போது அவரது பிரச்சினை - அதே வீட்டில் தொடர்ந்து வாழ முடியுமா? அல்லது வீட்டைக் காலி செய்து வேறிடம் போவதா? என்பது தான்.

பொதுமக்களின் உயிருக்கும் உடைமைக்கும் பாதுகாப்புத் தர வேண்டிய காவல்துறை இலாகாவைச் சேர்ந்த அதிகாரிகள் குற்றவாளிகளைத் தப்பிச் செல்ல விடாது, தகுந்த தண்டனை பெற்றுக் கொடுப்பதன் மூலமாக மக்களையும், சட்டத்தையும் பாதுகாக்க முடியும்.

எனவே இதுபோன்ற சம்பவங்கள் இனியும் தொடராமல் தடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

*–போல் பெர்னாண்டோ, எண்டறமுல்லை.*

# வாசகர் சாலை

### தொடரட்டும் உனது சேவை!

வியாழன் தோறும் இல்லம்
வந்தடையும் இல்லத்தரசே! நீ சுமந்து
வருகின்ற விடயங்கள் அனைத்தும்
முத்துப் போன்ற பெறுமதி உடையன.
ஆசைக்கும் அறிவுக்கும்
உரித்துடையவனே! சிரிக்க வைப்பதிலும்
சிந்திக்க வைப்பதிலும் ஆற்றல்
பெற்றவனே! பத்திரிகை உலகில்
பரவலாகப் பேசப்படுவதும்
உனது பெயரே! சேவைக்குப்
பெயர் போனதும் நீயே!
இந்தப் புகழ் எப்போதும்
இருக்க எமது
வாழ்த்துக்கள்.

*–யோ.சாலினி வதனி, திருக்கோவில் – 03.*

### இளசுகளின் முரசே!

வியாழன் தோறும் வீர நடை போட்டு
வரும் தினமுரசே!
வாரமலர் எமக்காகத் தந்த அன்புப் பரிசே!
உனக்காக ஏங்குகின்றன பலகோடி இளசுகள்!
உன்னையே தேடுகின்றது என் மனசே!
குடும்பத்திற்கு பல் சுவை இதழ் நீ
கலைத்துறையில் நீ ஒரு சூப்பர் ஸ்டார் ரஜினி
சூடு, சுவை, சுவாரசியம் இதுவே உன் இரகசியம்
பல ஆக்கங்களோடு பல்லாயிரம் நெஞ்சங்களின்
மனதில் குடிகொண்டுவிட்டாய். உன்
வரவை எதிர்பார்க்கும் இரசிகர்களின்
எண்ணிக்கைதான் எத்தனை, எத்தனை.
அத்தனையும் அற்புதம். அதிலும் ஏதோ
ஒருவகை சுகம். உன் சேவை இன்றும்,
என்றும் என்றென்றும் வளமோடும்
சுவையோடும் முழங்க என் மனம் கனிந்த
இனிய வாழ்த்துக்கள் கோடி. வியாழன்
அன்று உன் மலர்தலுடன் வருவேன் நான்
உன்னை நாடி.

*–வீ.எல்.ரெஜினோல்ட், கொழும்பு – 02.*

### முரசுக்கென் பரிசு!

ஊமையான
உண்மைகளை
அறிந்த கணத்திலே
உடனே அதற்கு
உயிர் கொடுத்து
உலகத்திற்கு
ஒளியூட்டி
சுடர்விடுவதில்
தினமுரசு
முழுமதி போலவே!
அதனால் முரசுக்கு
என்
காஷ்மீர்
பூந்தோட்டத்தின்
வாசனை
வாழ்த்துக்களை
இமய மலைபோல்
கொட்டி எனது
பொற்கிளி வரிகளைப்
பரிசளிக்கிறேன்.

*-அ.கா.மு.றிஸ்வின், மூதூர் – 01.*

தினமுரசே! தனக்கென்று
தந்தேன் பல முத்தங்கள்
நீதித்துறை துணிவுடனே
உண்மை நிலைமைதளை
புவியெங்கும் அறியத்தரும்
உன் துணிவைப் போல் வேறோர்
பத்திரிகை காணேனென்பது
புகழாரம் அல்ல
உண்மை நிலைதன்னை
நீயன்றி யார் தருவார்?

*–செல்வி.ஜௌஸறா, பாண்டிருப்பு.*


மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்– உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:–1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):–011 4-513266
ஈ–மெயில்: (E-mail):–
murasu@sltnet.lk

# இது எப்படி?

யாழ்.இளைஞர்களுக்கு மட்டும் வெளிநாட்டு வேலை வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுக்கும் முகவர் நிறுவனமொன்று கொழும்பில் இயங்கி வருகிறது. இந்நிறுவனத்தில், உப முகவர்களிடம் யாழ். இளைஞர்களுக்கு மட்டும் வேலைவாய்ப்புப் பெற்றுக்கொடுக்கப்படுமென்று கூறுகிறார்களாம். இந்த இளைஞர்களுக்கு கொழும்பில் பொலிஸாரின் அத்தாட்சி அறிக்கையைப் பெறுவதற்கு தலா பத்தாயிரம் ரூபா வீதம் அந்த நிறுவனம் கையூட்டு வழங்குகிறது. சொகுசு வேலைகளுக்கென மத்திய கிழக்கு நாடுகளுக்கு அனுப்பப்படும் இளைஞர்களுக்கு அங்கு கடின வேலைகளே கொடுக்கப்படுகின்றன. இவர்கள் கஷ்டப்பட்டு திரும்பி வந்து சம்பந்தப்பட்ட முகவர் நிறுவனத்துடன் நியாயம் கேட்க முனைந்தால் 'புலியெனப்பிடித்து உள்ளே தள்ளிவிடுவோம்' என்றும் மிரட்டுகின்றனராம். இந்த நிறுவனத்தின் முக்கியஸ்தர் கேரளவாசி என்றும் கூறப்படுகிறது.

# ஐ.தே.க. பிளவுபடலாம்

ஐ.தே.க. உபதலைவர் கரு ஜெயசூரியா தலைமையில் இணைந்துள்ள ஐ.தே.க. அதிருப்தியாளர் குழுவின் நடவடிக்கைகள், கட்சி பிளவுபடுவதற்கு வாய்ப்பாக அமையலாமென்று அரசியல் விமர்சகர்கள் கருதுகின்றனர். 1990களில் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசாவுக்கு எதிராக ஐ.தே.கட்சிக்குள் எழுந்த உட்கட்சி மோதலை அவர் கெட்டித்தனமாகக் கையாண்டு முறியடித்தார். இதனால் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்ட லலித் அதுலத் முதலி, காமினி திசாநாயக்கா போன்றோர் புதிய கட்சியொன்றினை உருவாக்கியமை இங்கு குறிப்பிடத்தக்கது.

# யாழ்.குடா மக்களின் பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வு காணும் முயற்சிகளில் அமைச்சர் டக்ளஸ்

தற்போதைய போர்க்காலச் சூழ்நிலையில் அவலங்களையும் துயரங்களையும் சந்தித்து வாழும் யாழ்.குடாநாட்டு மக்களின் பிரச்சினைக்கு உடனடியாகவும் படிப்படியாகவும் தீர்வு காணும் நோக்குடன் யாழ்ப்பாணம் சென்றுள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அங்கு தங்கியிருந்து பல்வேறு முன்முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார். யாழ். மக்கள் எதிர்கொள்ளும் பாரதூரமான உணவுப் பொருள் தட்டுப்பாடு, மனிதாபிமானப் பிரச்சினைகள் குறித்து ஜனாதிபதியினது கவனத்திற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கொண்டு வந்திருந்தார். இது தொடர்பாக அறிக்கையொன்றினையும் அவர் ஜனாதிபதியிடம் சமர்ப்பித்திருந்தார். இதன் பலனாக ஏ-9 பாதையூடாக அத்தியாவசியப் பொருட்களை யாழ்ப்பாணம் கொண்டு செல்வதற்கு ஜனாதிபதி உரிய அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்தமை குறித்து யாழ்.குடா மக்கள் சார்பில் தனது நன்றியை அவர் ஜனாதிபதிக்குத் தெரிவித்துள்ளார்.

கடல் மார்க்கமாகவும் மேலதிகப் பொருட்களை யாழ்ப்பாணத்திற்கு எடுத்துச் செல்ல வேண்டுமென்றும் உரிய தரப்பினரிடம், யாழ்.மாவட்ட எம்.பி.என்ற வகையில் கோரிக்கைகளை விடுத்துள்ளார். அத்தியாவசியப் பொருட்கள் மக்களைச் சென்றடைவதில் இருக்கக் கூடிய தடைகளையும் கஷ்டங்களையும் நேரடியாகக் கண்டறிந்து அவற்றிக்குத் தீர்வு காணும் முகமாகப் பல்வேறு தரப்பினரைச் சந்தித்து கலந்துரையாடி உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார். யாழ்.கூட்டுறவுச் சங்கப் பிரதிநிதிகளை அழைத்து கலந்துரையாடிய அமைச்சர், கூட்டுறவுச் சங்க ஊழியர்கள் மேலதிக நேர வேலை செய்து மக்களுக்கு உதவ வேண்டுமென்றும், கியூ வரிசைகளில் மக்களைக் காத்திருக்க வைக்காமல் இயன்றவரை விரைவாகப் பொருட்களை வழங்குமாறும் அறிவுரைகள் விடுத்துள்ளார். இதே நேரம் யாழ். பேக்கரி உரிமையாளர்கள் சங்கப் பிரதிநிதிகளை சந்தித்துப் பேசி, பால் மற்றும் மாவுணவுப் பொருட்களை மக்களுக்கு இலகுவாகக் கிடைக்கச் செய்வதற்கான வழிவகைகளை ஆராய்ந்து உரிய நடவடிக்கை எடுக்கவும் அமைச்சர் திட்டமிட்டுள்ளார். யாழ். மாவட்டத்தில் நாளொன்றுக்கு மூன்று கட்டங்களாக வழங்கப்பட்டு வந்த மின் விநியோகம், கடந்த 18ஆம் திகதி முதல் மேலும் இரண்டு மணித்தியாலங்கள் நீடிக்கப்பட்டுள்ளது.

24 மணி நேரமும் மின்விநியோகத்தை வழங்குவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ள அமைச்சர், யாழ்.குடா மாணவர்கள் அரசாங்கப் பேரூந்துகளில் சனிக்கிழமைகளிலும் இலவசமாகப் பயணம் செய்வதற்கான அனுமதியைப் போக்குவரத்து அமைச்சுடன் பேசி ஏற்படுத்திக் கொடுத்துள்ளார்.

கைதடி முதியோர் இல்லத்தின் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகளுக்காக 54 இலட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளது. யுத்தத்தினால் விதவைகளாக்கப்பட்ட சுமார் நாலாயிரம் குடும்பப் பெண்களின் வாழ்க்கை நிலையினை மேம்படுத்தும் நோக்கில் தலா பத்தாயிரம் ரூபா வீதம் நிதியுதவிகள் வழங்கப்படவுள்ளன. இதன் முதற் கட்டமாக 1500 குடும்பப் பெண்களுக்கு மிக விரைவில் இந்த நிதியுதவிகளை வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதேவேளை வறுமை நிலையில் வாழுகின்ற 1350 குடும்பங்களுக்கு வீடமைப்பு உதவித் தொகையும் விரைவில் வழங்கப்படவுள்ளது. கடந்த 19ஆம் திகதி 'சொலிடார்' என்ற சர்வதேச தன்னார்வத் தொண்டர் நிறுவனத் தூதுகோஷ்டியொன்றைச் சந்தித்த அமைச்சர் அங்கு மேற்கொள்ளப்பட வேண்டிய பல்வேறு சேமநலத் திட்டங்கள் பற்றி கலந்துரையாடி யுள்ளார். கைதடி முதியோர் இல்லத்திற்குப் புறம்பாக மற்றுமொரு முதியோர் இல்லத்தை அமைத்தல், யாழ். போதனா வைத்திய சாலைக்கும் ஏனைய வைத்தியசாலைகளுக்கும் தேவையான உபகரண, தளபாடங்களை வழங்குதல், நலன்புரி நிலையங்களில் இடம்பெயர்ந்து வாழும் மக்களுக்கு போதிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதோடு, மீள்குடியேற்றத்திற்கான நட வடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பாகவும் இந்த தன்னார்வத் தொண்டர் நிறுவனப் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடியுள்ளார். தலா முப்பது இலட்ச ரூபா செலவில் இக் குறுகிய காலத் திட்டங்களை மேற்கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதேவேளை யாழ்ப்பாண நிலைமைகளைக் கண்டறிவதற்காக அங்கு சென்றுள்ள கொழும்பிலுள்ள உயர் ஸ்தானிகராலயப் பிரதிநிதிகளின் குழுவும் அமைச்சரைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளது.

கடந்த ஜூன் மாதம் யாழ்ப்பாணம் சென்றிருந்த அமைச்சர் தேவானந்தா மேற்கொண்ட நடவடிக்கைகளின் தொடர்ச்சியாகவே தற்போதைய சமூக மேம்பாட்டுத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.



யாழ். கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சந்தித்த போது...

# அமெரிக்காவிலுள்ள பேராசிரியர் கூல் இலங்கை திரும்பிவர விருப்பம்

புலிகளின் மரண அச்சுறுத்தல்களுக்குப் பயந்து இலங்கையை விட்டு தனது குடும்பத்தோடு வெளியேறிய யாழ்.பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் ரத்னஜீவன் கூல், தற்போது அமெரிக்காவில் ரெட்சல் பல்கலைக்கழகத்தில் வருகை தரும் விரிவுரையாளராகக் கடமையாற்றி வருகிறார். இப்பல்கலைக்கழகத்திலுள்ள மாணவர்களின் செய்திப் பத்திரிகையான 'முக்கோணம்' என்ற இதழின் நவம்பர் 17ஆம் திகதிய பதிப்பில் பேராசிரியர் ரத்னஜீவன் கூல் பற்றிய பல்வேறு விபரங்கள் வெளியிடப்பட்டிருந்தன. மின்சாரம் மற்றும் கணினிப் பொறியியல்துறை பேராசிரியர் ரத்ன ஜீவன் கூலுக்கு, பல வாரங்களாக விடுக்கப்பட்ட மரண அச்சுறுத்தலை அடுத்து, தான் இலங்கையை விட்டு வெளியேற முனைந்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார். தான் உபவேந்தராய் கடந்த மார்ச் முதலாம் திகதி நியமிக்கப்பட்டதையடுத்து பிரச்சினை உருவெடுத்ததாகவும், புலிகள் தன்னை இராஜினாமாச் செய்யுமாறு வற்புறுத்திய போது, தான் அதற்கு இணங்கவில்லையென்றும், "இராணுவ உளவாளி உபவேந்தராக நியமிக்கப்பட்டுள்ளார்" என்று புலிகளின் இணையத் தளத்தில் செய்திகள் வெளியிடப்பட்டதாகவும் அதில் அவர் குறிப்பிட்டுள்ளார்.


பல்கலைக்கழக செனட்சபையிலுள்ள 25 அங்கத்தவர்களில் 23 பேர் இந்துக்கள் என்றும் அவர்கள் கிறிஸ்தவரான தமக்கு வாக்களித்துள்ளனரென்றும் அவர் அதில் தெரிவித்துள்ளார். தற்போது, தான் நிரந்தர வேலையொன்றினைத் தேடிவருவதாகவும் தாம் அமெரிக்காவின் அகதி அந்தஸ்தைக் கோரவில்லையென்றும் கூறியுள்ள கூல், புலிகளின் எச்சரிக்கைகளுக்கு செவிசாய்க்க மறுத்த தனது சகாக்கள் பலர் புலிகளால் கடத்திச் செல்லப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். எது எப்படியிருப்பினும் தனது சொந்த நாடான இலங்கைக்குத் திரும்பிச் செல்லவே தான் விரும்புவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# இது ஜே.வி.பி.யின் கேள்வி

ஏ-9 பாதை நிரந்தரமாகத் திறக்கப்படாவிட்டால் யாழ்.மக்களுக்கான உணவுப் பொருட்களை விடுவிக்கப்படாத பகுதிகளுக்கூடாக எடுத்துச் செல்ல தாம் அனுமதிக்கப் போவதில்லையென்று புலிகள் இயக்கம் எச்சரிக்கை விடுத்திருக்கிறது. தற்காலிகமாகவாவது யாழ்.மக்களுக்கு எடுத்துச் செல்லப்படும் அத்தியாவசியப் பொருட்களைத் தடுக்க வேண்டாமென்று பல தன்னார்வத் தொண்டர் நிறுவனங்கள் புலிகள் இயக்கத்தைக் கோரியுள்ளன. "இன்று ஏ-9 பாதையைத் திறக்குமாறு கோரும் சர்வதேச சமூகம், 2002ஆம் ஆண்டுக்கு முன்னர் புலிகள் இயக்கம் இந்தப் பாதையை மூடிவைத்த போது ஏன் அந்த இயக்கத்துக்கு அழுத்தம் கொடுக்கவில்லை?" என்று ஜே.வி.பி.யின் அரசியல் கமிட்டி விடுத்த அறிக்கையில் கேள்வி எழுப்பியுள்ளது.

# சபாநாயகர் எச்சரிக்கை!

தமிழ் தேசியக் கூட்டமைப்பு எம்.பி.சிவாஜிலிங்கம் பாராளுமன்றத்தில் மேற் சட்டையைக் கழற்றி அநாகரிகமாக நடந்து கொண்டமை குறித்து சபாநாயகர் டபிள்யூ.ஜே.எம்.லொக்கு பண்டார கடந்த செவ்வாய்க்கிழமை பாராளுமன்றத்தில் தனது அதிருப்தியைத் தெரிவித்தார். இதே வேளை சபைக்குள் அமர்ந்து சத்தியாக்கிரகம் செய்யும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு எம்.பி.க்களின் நடவடிக்கைகளும் அதிருப்தியளிப்பதாக அவர் மேலும் சொன்னார். பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளை மீறி நடக்கும் சபை உறுப்பினர்கள் மீது இனிமேல் கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென்று சபாநாயகர் எச்சரிக்கை விடுத்தார்.



சபாநாயகர்
டபிள்யூ.ஜே.எம். லொக்கு பண்டார

# மாங்கேணியில் ஆர்ப்பாட்டம்

அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதியான மாங்கேணியிலுள்ள நலன்புரி முகாமில் தங்கியுள்ள ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் கடந்த 21ஆம் திகதி பிரிந்திருக்கும் தமது குடும்ப அங்கத்தவர்கள் தம்முடன் இணைந்து கொள்வதற்கு புலிகள் இயக்கம் அனுமதியளிக்க வேண்டுமென்று கோரி ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள். சம்பூர், வாகரை, கதிரவெளி போன்ற விடுவிக்கப்படாத பகுதிகளைச் சேர்ந்த சுமார் இருநூறு குடும்பங்கள் இங்கு வாழ்ந்து வருகின்றன. இக் குடும்பங்களைச் சேர்ந்த பலர் இன்னமும் விடுவிக்கப்படாத பகுதிகளிலேயே உள்ளனர். அவர்களை அங்கிருந்து வெளியே விடாமல் புலிகள் தடுப்பதோடு, வெளியேறியவர்கள் மீண்டும் தமது பகுதிகளுக்குள் திரும்பி வராவிட்டால் அவர்களின் உடைமைகள் பறிமுதல் செய்யப்படுமென்றும் புலிகள் இயக்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

# இந்தியாவின் நிலைப்பாடு

இந்திய வெளியுறவுச் செயலர் சிவ்சங்கர் மேனனின் கொழும்பு விஜயத்தையடுத்து இலங்கை அரசின் அவசர மனிதாபிமானப் பிரச்சினை தொடர்பான நிலைப்பாடுகளில் காத்திரமான மாற்றங்கள் ஏற்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது. இலங்கையின் ஐக்கியம், இறைமை, பிரதேச ஒருமைப்பாடு பேணப்படும் அதே வேளையில், சிறுபான்மை இன மக்களின் மனிதாபிமான உரிமைகள் பேணப்பட வேண்டுமென்பதே இந்தியாவின் நிலைப்பாடு என்று இந்திய வெளியுறவுத்துறை பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டார்.

# தோட்டத் தொழிலாளர்களின் சம்பளப் பிரச்சினை

பெருந்தோட்டத் தொழிற்துறை தொழிலாளர்களின் சம்பள உயர்வு தொடர்பான கூட்டு ஒப்பந்த முயற்சிகள் இழுபறிப்படுவதற்கு கம்பனிகள் மட்டுமல்ல தொழிற்சங்கங்களும் காரணமென்று ஹட்டனைச் சேர்ந்த தொழிற்சங்கப் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார். மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் நலன்களைப் பேணுவதற்குப் பதிலாக தமது அரசியல், தொழிற்சங்க நலன்களைப் பேண மலையகக் கட்சிகள் முனைவதே இதற்குக் காரணமென்றும் அவர் சொன்னார்.

# இணைத்தலைமை நாடுகளின் கூட்டத்தில் ஏற்பட்ட கருத்து முரண்பாடுகள்

வாஷிங்டனில் நடைபெற்ற இணைத் தலைமை நாடுகளின் மாநாட்டில் இலங்கைப் பிரச்சினை தொடர்பாக முரண்பட்டுக் கருத்துக்களைக் கொண்ட றிச்சர்ட் பௌசரும், நிக்கலஸ் பேர்ன்ஸூம் அமெரிக்கா சார்பில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. அமெரிக்க ராஜாங்கத் திணைக்களத்தின் அரசியல் விவகாரங்களுக்கான பிரதிச் செயலாளர் நிக்கலஸ் பேர்ன்ஸ் தலைமையிலான அமெரிக்கத் தூது கோஷ்டியில் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான உதவிச் செயலாளர் றிச்சர்ட் பௌசரும் கலந்து கொண்டார். நிக்கலஸ் பேர்ன்ஸ், புலிகள் இயக்கத்துக்கு எதிரான கடும் போக்குத் தன்மை கொண்டவர். றிச்சர்ட் பௌசர் இலங்கை இனப்பிரச்சினையில் மெத்தனக் கொள்கைகளைக் கடைப்பிடிப்பவர் என்று கூறப்படுகிறது. இலங்கையில் இறைமை, பிரதேச ஒருமைப்பாடு ஆகியவற்றைப் பாதுகாக்கும் நோக்கிலேயே இலங்கையில் அரசாங்கப் படைகள் மேற்கொள்ளும் இராணுவ நடவடிக்கை ஒரு சாதாரண இராணுவ விவகாரம் என்பது நிக்கலஸ் பேர்ன்ஸின் நிலைப்பாடு என்று கூறப்படுகிறது. ஆனால் றிச்சட் பௌசரைப் பொறுத்தவரை தமிழ் மக்களின் தாயகக் கோட்பாட்டை ஏற்றுக் கொள்வதன் மூலம் இன நெருக்கடிக்குத் தீர்வு காணலாமென்று கருதுபவர் என்று கூறப்படுகிறது.

இலங்கை நெருக்கடியில் ஐ.நா. சபை தலையிட வேண்டுமென்று இந்த மாநாட்டில் நோர்வே கோரிக்கை விடுக்குமென்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் இதற்கு எதிரான கருத்துக்களை அமெரிக்காவும் ஜப்பானும் எடுத்திருந்ததாகக் கூறப்படுகிறது. அண்மைய வன்செயல்களின் அதிகரிப்புக்கு இலங்கை ஆயுதப்படை காரணமல்லவென்பது இந்த இரு நாடுகளின் நிலைப்பாடாகும். இரு தரப்புகளுமே வன்செயல் அதிகரிப்புக்குக் காரணமென்பதும் அரசாங்கப் படைகள் இராணுவ நடவடிக்கைகளை நிறுத்த வேண்டுமென்பதும் நோர்வே, பிரிட்டன், ஜேர்மனி போன்ற ஐரோப்பிய ஒன்றிய அங்கத்துவ நாடுகளின் கருத்தாகும். "இலங்கையின் சமாதான முன்னெடுப்புகளை உந்தித் தள்ளுவதற்கு சர்வதேச சமூகம் கையாள வேண்டிய தந்திரோபாயம் குறித்துக் கலந்துரையாடும் பிரதான அரங்கமே இந்த இணைத் தலைமை நாடுகளின் கூட்டம்" என்று அமெரிக்க ராஜாங்கத் திணைக்களத்தின் பேச்சாளரான ரொம் கசே வாஷிங்டனில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் கூறினார்.

# தமக்காக உழைக்கும் தன்னார்வத் தொண்டர் நிறுவனங்கள்

நாடெங்கும், குறிப்பாக வடக்கு - கிழக்கில் எவருக்கும் பொறுப்புச் சொல்ல தேவையற்ற விதத்தில் மூவாயிரத்திற்கு மேற்பட்ட தன்னார்வத் தொண்டர் நிறுவனங்கள் இயங்கி வருவதாக எமக்குத் தகவல் கிடைத்துள்ளதென்று தன்னார்வத் தொண்டர் நிறுவனங்களின் செயற்பாடுகள் பற்றி ஆராய நியமிக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக் கமிட்டியின் தலைவரான எஸ்.எஸ்.விஜயரத்ன தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது:-

இவற்றில் பெரும்பாலானவற்றிற்கு அலுவலக முகவரியோ அல்லது அவர்கள் செயற்படும் பகுதியைப் பற்றிய தகவல்களோ கிடையாது. பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் தனிநபர் பிரேரணையூடாகவே இந்த தொண்டர் நிறுவனங்கள் கூட்டிணைக்கப்படுகின்றன. ஆனால் எந்தெந்த எம்.பிக்கள் இப் பிரேரணைகளைச் சமர்ப்பித்தார்கள்? எங்கெங்கு இந் நிறுவனங்கள் செயற்படுகின்றன போன்ற விபரங்கள் கிடையாது. 1982ஆம் ஆண்டின் கம்பெனிகள் சட்டத்தின் 17ஆம் பிரிவின் கீழ் சுமார் நாலாயிரத்திற்கு மேற்பட்ட தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. கணக்காய்வு மற்றும் விசாரணை நடத்துவதற்குத் தேவையான திட்டவட்டமான தகவல்களை இவை வழங்கவில்லை. அத்துடன் கம்பனிப் பதிவாளருக்கு பதில் சொல்ல வேண்டிய தேவை இந் நிறுவனங்களுக்குக் கிடையாது என்றும் தெரிய வருகிறது. நாட்டின் நடைமுறைச் சட்டத்தின்படி இங்கு இயங்கும் தன்னார்வத் தொண்டுநிறுவனங்கள் பற்றிய தகவல்கள் பாராளுமன்றம், வெளிவிவகார அமைச்சு, சமூக சேவைகள் அமைச்சு, பாதுகாப்பு அமைச்சு ஆகியவற்றிற்கு வழங்கப்பட வேண்டும். ஆனால் இவை பற்றிய விபரங்கள் சரிவரக் கிடைக்கவில்லையென்றும் அவர் சொன்னார்.

தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):-011 4-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@sltnet.lk

# முரசம்

## இரட்டை அணுகுமுறையும் இலங்கை இனப்பிரச்சனையும்

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.

**இணைத்தலைமை** நாடுகளின் கூட்டம் 20.11.2006 அன்று அமெரிக்காவில் நடைபெறுவதற்கு ஒரு நாள் முன்பதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, யாழ்ப்பாணத்துக்கு உணவுப் பொருட்கள் கொண்டு செல்ல ஏதுவாக ஒரு நாளைக்கு மட்டும் ஏ-ஒன்பது பாதையைத் திறந்து உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு அறிவித்திருந்தார்.

இந்த அறிவிப்புக் குறித்து கண்காணிப்புக் குழுவினரும், புலிகளும் தமக்கு எந்த முன் அறிவிப்பும் செய்யப்படவில்லை எனத் தெரிவித்திருந்தனர்.

உணவுப் பொருட்களை யாழ்ப்பாணத்துக்குக் கொண்டு செல்லப் பாதை திறக்கப்பட முடிவு எடுக்கப்பட்டது வரவேற்கப்பட வேண்டிய அதேவேளை, உரிய தரப்புகளுக்கு முன் அறிவிப்புச் செய்யப்பட்டு பாதை திறப்புக்கான நோக்கத்தை அரசு எட்டாதது கவலைக்குரியதாகும். புலிகளைப் பொறுத்தவரை தனியே உணவுப் பொருட்களை மட்டும் பாதையூடாகக் கொண்டு செல்ல அனுமதிப்பது, அவர்கள் பாதை திறப்பில் எடுத்துக் கொண்ட முயற்சியின் பயனைப் பெற முடியாததாகவே இருக்கும். ஆனாலும் மனிதாபிமானப் பிரச்சினை என்று வர்ணித்த மக்களின் உணவுப் பிரச்சினை இனி இலாபமீட்டும் பிரச்சினையாக மாற்றிக் கொள்வதற்கான தந்திரங்கள் குறித்து சிந்திக்கக் கூடும். ஆனாலும் தற்போது அரசு எடுத்திருக்கும் அதிரடி நடவடிக்கைக்குள் அகப்பட்டுவிடாமலும் இருப்பதை உறுதி செய்து கொள்வர்.

அரசின் நிலைப்பாட்டை புலிகள் எவ்வாறு கையாளப் போகிறார்கள் என்பது போக, யாழ்ப்பாணத்துக்குச் செல்லவுள்ள மக்கள் பாதை ஊடாக தங்களை அனுமதிக்குமாறு கேட்டால், அதை அரசுக்கு நிராகரிக்க முடியாமல் இருக்கும். தவிரவும் ஒரு நாள் மட்டும் பாதை திறப்பு என்பது நடைமுறையில் சிக்கல்களையே உருவாக்கும்.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் இந்தியாவிற்குப் பயணம் செய்து, தற்போதைய நாட்டின் நிலைவரம் தொடர்பாக எடுத்துக் கூறுவர். களநிலைமையை இந்தியா புரிந்து கொண்டுள்ளபோதும் தமிழ் நாட்டில் முதலமைச்சர் கருணாநிதியும், எதிர்க்கட்சித் தலைவி ஜெயலலிதாவும் இலங்கைப் பிரச்சினையில் காட்டி வரும் அக்கறையும், முன்வைக்கும் விமர்சனங்களும் இந்திய மத்திய அரசுக்கு ஒரு அழுத்தமாகவே மாறியுள்ளது. இந்த நிலையில் இந்தியா இலங்கை விடயத்தில் எவ்வாறு பங்களிப்புச் செய்வது என்பதை வசதியைப் பொறுத்து சிந்திப்பது புரிகிறது.

இந்தியாவின் தற்போதைய நிலையில் இணைத்தலைமை நாடுகள் கொண்டிருக்கும் பதற்றமும் கவனத்தில் எடுக்கப்படவேண்டியதாகும். இணைத்தலைமை நாடுகள் அவசரமாகக் கூடிப்பேசி விடுத்திருக்கும் அறிக்கையானது, இருதரப்பு மீதான அதிருப்தியையும், தமது தலையீடு தொடர்பான அக்கறையையும் வெளிக்காட்டி இருக்கிறது. இந்த நிலைப்பாடானது அரசையும், புலிகளையும் எந்த விதத்திலும் அழுத்தம் கொடுப்பதாக அமையாது. அதைவிடவும் இணைத்தலைமை நாடுகளின் நிலைப்பாடானது பயங்கரவாதத்தையும், இறைமையுள்ள அரசையும் சமாந்தரமாக கையாளுவதாக உள்ளது. இந்தப் போக்கு, தென் இலங்கை மக்களுக்கும், இலங்கையின் நேச நாடுகளுக்கும் அதிருப்தியளிப்பதாக இருப்பதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இதில் உண்மையும் இல்லாமல் இல்லை. பயங்கரவாதம் தொடர்பான சர்வதேசத்தின் இந்த இரட்டைப் போக்கானது ஒருபோதும் பிரச்சினைகளைத் தீர்க்க உதவாது என்பதை உலகம் புரிந்து கொள்ள வேண்டும். இந்தப் பிரச்சினையே இந்தியாவுக்கும் தற்போது பெரும் நெருடலாக உள்ளது. பயங்கரவாதத்தை ஒடுக்கவும் முடியாமல், இலங்கை அரசை வற்புறுத்தவும் முடியாமல் இருக்கும் இந்தியாவின் நிலை கவலைக்குரியது.

இதற்கிடையே யாழ். மக்களின் உணவுப் பிரச்சினை தொடக்கம் - அத்தியாவசியப் பிரச்சினை வரை அனைத்தையும் நேரடியாகக் கையாண்டு முடியுமான தீர்வுகளைக் காண்பதற்காக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தற்போது யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து செயலாற்றி வருகிறார். நெருக்கடி மிகுந்த காலகட்டத்தில் மக்களுடன் நின்று அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைத் தீர்த்துவைக்க அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா துணிந்து செயலாற்றுவது வரவேற்புக்குரியது.

ஆனாலும், சர்வதேசத்தின் அக்கறையையும், இந்தியாவின் நிதானத்தையும், தென் இலங்கை அரசியல் போக்கையும், எந்த வேளையிலும் வீணடித்துவிடக்கூடிய நடவடிக்கைகளை புலிகள் மேற்கொள்ளக்கூடும் என்ற முன்னெச்சரிக்கை எதிர்பார்ப்பும் நிலவுகிறது. அதாவது, புலிகளின் தலைவர் பிரபாகரனின் பிறந்த நாள் உரையில் மறைந்து கிடக்கும் சமிக்ஞையை சமாதான விரும்பிகள் மிகுந்த அவதானத்துடன் நோக்குவது நல்லது.

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.

# எக்ஸ்ரே ரிப்போர்ட்

# "பட்ஜட்" பார்வை

**இலங்கை** சுதந்திரம் பெற்ற பின்னர் சமர்ப்பிக்கப்பட்ட அறுபதாவது பட்ஜெட். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம் சமர்ப்பித்த இரண்டாவது பட்ஜெட். பத்து வருட கால அபிவிருத்தித் திட்டங்களை உள்ளடக்கி, ஒரேயொரு ஆண்டுக்கென சமர்ப்பிக்கப்பட்ட ஒரு பட்ஜட். இவ்வாறுதான் 2007ஆம் ஆண்டுக்கெனக் கடந்த 16 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட வரவு - செலவுத் திட்ட யோசனைகளுக்கு முகமன் கூறப்படுகிறது. ஆளும் கட்சியோடு சேர்ந்து எதிர்கட்சியான ஐ.தே.க.வும் பட்ஜட் யோசனைகளுக்கு ஆதரவாகக் கைகளை உயர்த்தவுள்ளது. இருந்தாலும் முன்னாள் பிரதி நிதியமைச்சரும்



பொருளியல், துறைப் பேராசிரியரும் ஐ.தே.க. எம்.பி.யுமான பந்துல குணவர்த்தன இந்த பட்ஜட்டைக் கேலி செய்துள்ளார். 'யானை உண்ட விளாம்பழம்" போல இந்த பட்ஜட் அமைந்திருக்கிறதென ஹாஸ்யமாகக் கூறியிருக்கிறார். அதாவது, தோலிருக்கச் சுளையை உண்பது போலவென்று வர்ணித்திருக்கிறார். விளாம்பழத்தை உண்ணும் யானைகள், அதன் உள்ளுடன்களை அப்படியே உறிஞ்சி எடுத்துவிட்டு கோதினை எச்சத்தோடு வெளியே தள்ளுவது வழமையென்று கூறப்படுகிறது. பந்துல குணவர்த்தனவின் பார்வையில் பட்ஜட் 'வெறும் கோது' என்பதுதான் அர்த்தம்.

பாராளுமன்ற சந்தர்ப்பவாத அரசியலைப் பொறுத்தவரையில் பட்ஜட்டைச் சமர்ப்பிக்கும் ஆளுந்தரப்பினர் அதனை அற்புதமெனப் புகழ்ந்து பாடுவதும், எதிர்த்தரப்பினர் 'வெற்று வேட்டு' எனக் கண்டிப்பதும் வழமையான நடைமுறைதான். நாட்டின் பொருளாதாரம், அபிவிருத்தி, சுபிட்சம் தொடர்பான பட்ஜட் யோசனைகளை, அரசியல் கண்ணாடிகளுக்கூடாகப் பார்ப்பதே, பெரும்பாலும் இக் கட்சிகளின் நடைமுறையாக இருந்து வந்துள்ளது என்பதனால் இதனை அப்படியே விட்டு விடுவோம்.

ஓர் இடைக்கால பட்ஜட் யோசனைகளுக்கான வரைமுறையொன்றினையும் ஜனாதிபதி சமர்ப்பித்துள்ளார். அதாவது, 2009ஆம் ஆண்டளவில் அரசின் வருமானத்தைக் கிட்டத்தட்ட 19 சதவீதமாக அதிகரிப்பதற்கும், பற்றாக்குறையை ஐந்து சதவீதமாகக் குறைப்பதற்கும், மொத்தத் தேசிய உற்பத்தியைப் பொறுத்து தேசியக் கடனை 85 சதவீதத்துக்குக் கீழே குறைப்பதற்கும் ஜனாதிபதி திட்டமிட்டுள்ளார். அடுத்த பத்து வருட காலங்களுக்கு வருடாந்தம் எட்டு சதவீத பொருளாதார வளர்ச்சியைப் பெறுவதற்கான யோசனைகளும் சமர்ப்பிக்கப் பட்டிருக்கின்றன. உள்நாட்டில் இறை வரி பெறும் திணைக்களங்களுக்குப் புத்துயிரளித்து, அதனூடாக 118 பில்லியன் ரூபா வருமானத்தைப் பெறவும் யோசனை தெரிவிக்கப் பட்டிருக்கிறது.

மின்சாரம், பெற்றோல், எரிபொருள் ஆகியவற்றுக்கான பெறுமதி சேர் வரி விலக்களிக்கப்பட்டிருப்பது அடிமட்ட, நடுத்தர வகுப்பு மக்களுக்கு நிம்மதியளிக்கும் என்பதில் ஐயமில்லை. இதேவேளை அரசாங்க ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியம் பெறுவோர்க்கான சம்பள அதிகரிப்பும் பாராட்டப்படக் கூடிய அம்சங்களாகும். வேலைவாய்ப்புகளை அதிகரிப்பதற்கென முன்வைக்கப்பட்டிருக்கும் யோசனைகளும் வரவேற்கக் கூடியதே. ஜலசக்தி - மின்சக்தித் திட்டங்கள், பெருந்தெருக்கள், வீரவில விமான நிலையம் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளுக்குப் பெருந்தொகைப் பணம் செலவழிக்கப் படவுள்ளது. இதுவும் வரவேற்கக் கூடியது. உட்கட்டமைப்பு வசதிகள் அதிகரிக்கப்படுவதானது, மக்களின் சுமைகளைக் குறைத்து, வாழ்வாதார வசதிகளை அதிகரிக்குமென்பதால் இதுவும் வரவேற்கக் கூடியதே. உட்கட்டமைப்பு திசை மார்க்கம் கொண்ட முதலாவது பட்ஜட் இது வென்றும் வர்ணிக்கப்படுகிறது. வறுமையைக் குறைத்து, பொருளாதாரத்தை ஸ்திரமாக்குவதற்காக மனிதவள அபிவிருத்திக்கும் உட்கட்டமைப்பு வசதிகள் ஊடாக வருவாயைப் பெருக்கிக் கொள்ளும் திட்டங்களும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இறை வரியூடாக 118 பில்லியன் ரூபாவை சம்பாதிக்க முடியுமென்று அரசு கோடிட்டுக் காட்டியிருக்கிறது. யோசனைகளும் திட்டங்களும் அற்புதமானவை. இந்த நாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட அத்தனை பட்ஜட்களுமே மக்களை மையமாக வைத்துத்தான் சமர்ப்பிக்கப்பட்டிருப்பதாக அவ்வப்போது பட்ஜெட்களைச் சமர்ப்பித்த அரசாங்கங்கள் மார்தட்டியிருக்கின்றன. உண்மையில் இந்த யோசனைகள் நடைமுறைப்படுத்தப் பட்டிருந்தால் இலங்கையின் பெரும்பாலான மக்கள் வறுமைக் கோட்டின் கீழ் வாழ வேண்டிய நிலையேற்பட்டிருக்காது. பிச்சைக்காரர்களுக்குக் கூட குதிரையில் சவாரி செய்வது போன்ற கனவுகள் காணமுடியும். ஆனால் நடைமுறையில் அவர்களால் 'ஜொக்கிகள்' ஆகிவிட முடியாது. சொல்லுக்கும் செயலுக்குமிடையில் வித்தியாசங்கள் இருக்கக்கூடாது. பட்ஜட் யோசனைகள் நிறைவேற்றப்பட்டால் மட்டுமே அது மக்களுக்கு நிவாரணமளிக்கக் கூடியதாக அமையும். வரி விதிப்பின் மூலம் 118 பில்லியன் ரூபாவைப் பெறலாமென்று அரசு கூறுகிறது. ஆனால் கோடிக்கணக்கான ரூபாய்களை அரசாங்க வங்கிகளில் கடனாகப் பெற்று அரசாங்கத்துக்கு 'டாட்டா' காட்டிய பணமுதலைகள் இன்னும் இந்த நாட்டில் சுதந்திரமாக உலாவுகின்றன. ஏற்றுமதி, இறக்குமதியில் மோசடி செய்தவர்கள், வரி ஏய்ப்பாளர்கள், சேமலாபநிதி செலுத்தத் தவறும் கம்பனி உரிமையாளர்கள் என்று இன்னும் பல பெருச்சாளிகள் சொகுசாக வாழ்கின்றனர். ரணில் விக்கிரமசிங்காவின் ஆட்சிக் காலத்தில் வங்கிகளில் கோடிக்கணக்காக கடன் பெற்றவர்கள், தமது கடன் தொகையை தள்ளுபடி செய்து கொண்டமையும் குறிப்பிடத்தக்கது. எனவே ஊழல் பெரிச்சாளிகளை ஓரங்கட்டுவதற்கான நடவடிக்கைகளை அரசு எடுக்கத் தவறினால், அதன் விழுப்புண்களை சுமக்க வேண்டிய அவலங்களும் மக்களின் தலையிலேயே வந்து விழும்.

பெரும்பாலான அபிவிருத்தித் திட்டங்கள் மேல் மாகாணத்திலேயே மேற்கொள்ளப்பட்டு வருவதாக தொடர்ச்சியாகக் குற்றங்கள் சாட்டப்பட்டு வருகின்றன. மேல் மாகாணத்தில் அபிவிருத்தித் திட்டங்கள் 40 சதவீதத்தால் அதிகரித்திருப்பதாகவும், ஏனைய மாகாணங்களில் 20 சதவீதத்தினாலேயே இந்த அதிகரிப்பு காணப்படுவதாகவும் உலக வங்கியின் வதிவிடப் பணிப்பாளர் திருமதி நௌகொ இசிஸி அண்மையில் சுட்டிக்காட்டியிருந்தார். இந்த சமத்துவமின்மையை நீக்குவதற்கு அரசு முன்வைத்திருக்கும் உட்கட்டமைப்பு யோசனைகள் ஓரளவுக்கு உதவுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. வெறுமனே நிவாரணங்களையும் மானியங்களையும் அதிகரிப்பதால் மட்டும் சாமான்ய மக்கள் எதிர்கொள்ளும் சுமைகளை இறக்கிவிட முடியாது. அதற்காக மானியம், நிவாரணங்களை வழங்க வேண்டாமென்று நாம் கூறவில்லை. ஒரு கடற்தொழிலாளிக்கு அன்றாடம் உலர் உணவுகளை வழங்குவதைவிட, அவனுக்கு ஒரு மீன்பிடி வலையையும் வள்ளத்தையும் வழங்கினால் அவன் எவரையும் சார்ந்து நிற்காமல், தனது குடும்பத்துக்கான வாழ்வாதாரத்தைத் தேடிக் கொள்வான்.

அரசின் வருமானத்திற்கும் செலவினத்திற்குமிடையிலான துண்டு விழும் தொகையை சமாளிப்பதற்கு அரசு வெளிநாடுகளிடம் கையேந்தும் நிலை ஏற்படக் கூடிய சாத்தியங்களும் தென்படுகின்றன. பாதுகாப்புக்கென 119 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. அதாவது கடந்த வருடம் பாதுகாப்புக்கென ஒதுக்கப்பட்ட தொகையை விட இது 45 சதவீத அதிகரிப்பு என்று கூறப்படுகிறது. இதற்காகத் தானோ என்னவோ தமிழ்ச்செல்வனும், பாராளுமன்றத்தில் சப்பாணிப் போராட்டம் நடத்தும் தமிழ் கூட்டமைப்பு எம்.பி.க்களும் இதனை யுத்த பட்ஜட் என வர்ணித்துள்ளனர். புலிகள் அன்றாடம் தாக்குதல்களை அதிகரித்திருக்கும் நேரத்தில் அரசாங்கம் பாதுகாப்புச் செலவினங்களைக் குறைக்குமென்று எவரும் எதிர்பார்க்க முடியாது. புலிகள் தாக்குதல்களை நிறுத்தினால் பாதுகாப்புச் செலவினத்தைக் குறையென்று கோருகின்ற உரிமை தமிழ்ச்செல்வனுக்கும் சம்பந்தனுக்குமுண்டு.

தமிழ் மக்கள் உட்பட இந்நாட்டு மக்கள் அனைவரும் சந்திக்கும் அவலங்கள், சோகங்கள், துயரங்களுக்கு இந்த இரண்டரை கால தசாப்தங்களுக்கு மேற்பட்ட யுத்தமே காரணம். வடக்கு, கிழக்கில் வளங்கள் நாசமாவதற்கும் அப்பகுதி மக்களின் வாழ்வு சீர்குலைவதற்கும் இந்த யுத்தமே காரணம். எனவே தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கும் அபிலாஷைகளுக்கும் கௌரவமான தீர்வொன்றியைக் காண்பதற்கு அரசும் புலிகளும் முன்வராதவரை இந்த ஒரு பட்ஜெட் அல்ல, ஓராயிரம் பட்ஜட்களைச் சமர்ப்பித்தாலும் கூட, மக்களின் வாழ்க்கையில் சுபிட்சத்தைத் தேடுவது கடினமான காரியமாகவே அமையும்.

துண்டு விழும் தொகையைச் சமாளிப்பதற்கு அரசு வெறுமனே நாணயத் தாள்களை அச்சிட்டு வெளியிடுமென்றால், பணவீக்கமே ஏற்படும். பணவீக்கம் விலைவாசிகளை அதிகரிக்கச் செய்யும். அது மீண்டும் மக்களின் தலைகளிலேயே சுமைகளாக ஏற்றப்படும். அந்நியச் செலாவணிக் கையிருப்பை அதிகரித்தல், கையிருப்பு ஒதுக்குகள் குறையாமல் பாதுகாத்தல், தேசிய உற்பத்திகளை ஊக்குவித்தல், இந்த நாட்டை அந்நியக் குப்பைகளின் சந்தையாக மாற்றாமல் தடுத்தல் போன்ற இன்னோரன்ன பல விடயங்களைக் காத்திரமாகக் கையாள்வதிலேயே இந்த பட்ஜட்டில் வெற்றி தங்கியுள்ளது. வெறும் வார்த்தைகளிலல்ல.

# பிரபாகரனும் பிறந்த நாள் உரையும்!

**ஓர்** உன்னத இலட்சியத்துக்காக, மக்களுக்காக தம் உயிர்களை அர்ப்பணிப்பவர்களையே தியாகிகளென்கிறோம். அர்த்தமற்ற மரணங்களெல்லாம் தியாகங்களாகி விடுவதில்லை. நாஸி இனவெறியர்களுக்கெதிராகத் தன் பேனா முனையைக் கச்சிதமாகப் பயன்படுத்திப் போராடிய செக்கோஸ்லவாக்கியப் பத்திரிகையாளன் யூலியஸ் பியூசிக், நாஸி வெறியர்களால் சிறையிலடைக்கப்பட்டு, கொடூரமாகச் சித்திரவதை செய்யப்பட்டுத் தூக்கிலிடப்பட்டுக் கொல்லப்பட்டான். கொடூரங்களுக்கு மத்தியிலும் அவன் மேலாதிக்க சக்திகளுக்கு அடிபணியவில்லை. விட்டுக்கொடுக்காமல் போராடி மரித்தான். அவன் எழுதிய 'தூக்குமேடைக் குறிப்பு' என்னும் நூல் பல்வேறு நாடுகளிலுள்ள விடுதலைப் போராளிகளுக்கு ஆதர்ஷமாக, உந்து சக்தியாகத் திகழ்ந்தது. அவனது தியாகம் உன்னதமானது. மகத்தான, வரலாறு மறக்காத பெருந் தியாகம். மற்றவனின் மாடி வீட்டுக்குள் களவெடுக்கப்போய், கால் இடறி வீழ்ந்து மரணிப்பவனையெல்லாம் தியாகியென்று சொல்ல முடியாது. கள்வர் கும்பலைப் பொறுத்தவரை வேண்டுமானால் அவன் தியாகியாக மதிக்கப்படலாம். இந்தப் பீடிகையோடுதான் 1990ஆம் ஆண்டிலிருந்து பிரபாகரன் வருடா வருடம் நிகழ்த்திவரும் பிறந்த தின உரையையும் பார்க்க வேண்டியுள்ளது.

சார்ள்ஸ் அன்ரனி என்பவரே பொலிஸாருடனான படைகளுடனான மோதலில் முதன் முதலாகக் களப் பலியானாரென்று கூறப்படுகிறது. இவர் 1983ஆம் ஆண்டு கொடிகாமம், அல்லாரை என்ற இடத்தில் கொல்லப்பட்டார். ஆனால் அதற்கு முன்னர் பிரபாகரனின் கையாலேயே சுட்டுக் கொல்லப்பட்ட தமிழீழ இயக்க உறுப்பினர்கள் பலர் இருக்கிறார்கள். உதாரணத்துக்கு 1983ஆம் ஆண்டு ஜூலை மாதம் 23ஆம் திகதி பிரபாகரனோடு சேர்ந்து யாழ்ப்பாணம், திருநெல்வேலியில் படையினர் மீது தாக்குதல் நடத்திய செல்லக்கிளியைச் சுட்டுக் கொன்றவர் பிரபாகரனென்பது அந்த நாட்களில் தமிழீழ இயக்கங்களோடு இணைந்து செயற்பட்டவர்களுக்கு நன்கு தெரியும். இதேபோன்று உமா மகேஸ்வரனின் காதலியான ஊர்மிளாவைச் சுட்டுக் கொல்லும்படி உத்தரவிட்டவரும் பிரபாகரனே என்பது ஒரு புறமிருக்கட்டும்.



சார்ள்ஸ் அன்ரனி கொல்லப்பட்டது ஒரு நவம்பர் மாதம் 27ஆம் திகதி. பிரபாகரனின் பிறந்த தினம் 1954ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 26ஆம் திகதி. எனவே பிரபாகரனின் இலட்சியத்துக்காகப் போராடி மடிந்தவர்களின் நினைவாகப் பிரபாகரன் தனது பிறந்த நாள் உரையை நிகழ்த்துவதுண்டு. இது கூட சார்ள்ஸ் அன்ரனிக்குப் பிரபாகரன் செய்யும் மாபெரும் துரோகமாகும். சார்ள்ஸ் அன்ரனி சூடுபட்டு இறந்த அந்த நாளில் தனது 'சாவீரர்' தின உரையை ஏன் நிகழ்த்தக் கூடாது? பிரபாகரனின் அர்த்தமற்ற, என்றுமே ஈட்டப்பட முடியாத இலட்சியத்துக்காகப் போராடுபவர்கள் தியாகிகளாக இருக்க முடியாது. அதேபோன்று மாற்றுக் கருத்துக் கொண்டவர்களைக் கொன்றொழிக்கும், ஜனநாயக விரோத பயங்கரவாத நடவடிக்கைகளுக்குத் துணைபோகும் எவரும் பாராட்டப்பட வேண்டிய தியாகிகளாக இருக்க முடியாது. இவர்கள் மாவீரர்களல்லர். அவர்களைச் சாவீரர்களென்று அழைப்பதே சாலவும் பொருந்தும்.

வடக்கு - கிழக்கு தமிழ் பேசும் மக்களின் தாயக பூமியென்பதில் எமக்கு எவ்வித மாற்றுக் கருத்தும் கிடையாது. அதேபோன்று தமிழினம் ஒரு தனித் தேசிய இனம் என்பதிலும் அதற்குச் சுயநிர்ணய உரிமை உண்டென்பதிலும் எமக்கு அசைக்க முடியாத நம்பிக்கை உண்டு. ஆனால் பிரபாகரனைத் தவிர்ந்த சகல தமிழ்க் குழுக்களும், தமிழர் விடுதலைக் கூட்டணியும் ஏன் புலிகளின்

(தொடர்ச்சி 04ஆம் பக்கம்)

# ஊரிலிருந்து....



"உள் ஒன்று வைத்துப் புறமொன்று பேசுபவர்களைப் பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள். ஆனால், தாம் இருக்குமிடத்திற்கு ஏற்றபடி பேசுபவர்களையும், நடந்துகொள்ளுபவர்களையும் பற்றிக் கடந்த வாரம் குடாநாட்டு மக்கள் நேரடியாகவே கண்ட செய்தி தெரியுமா?" பீடிகையுடன் மாஸ்டர் ஆரம்பித்தார்.

"விளக்கமாகச் சொல்லுங்கோ மாஸ்டர்" என்றேன். ரவிராஜ் எம்.பி.யிண்ட செத்தவீட்டிற்கு வந்த மக்கள் பிரதிநிதிகள் எண்டவை பற்றித்தான் சொல்றன். கொழும்பில நாடாளுமன்றத்தில வெட்டிவிழுத்திற மாதிரி நடக்கிறவை அல்லது நடிக்கிறவைக்கு செத்த வீட்டில கலந்து கொள்ள அரசாங்கமே வசதி செய்து கொடுத்தது. யாழ்ப்பாணம் வந்த அவையள் என்ன செய்திச்சினம்?



# பிரமுகர்களைக் குறிவைக்கும் கொலையாளிகள்!


கொழும்பில் ஆட்கள் கடத்தப்படுவதும், கொலை செய்யப்படுவதும், கடந்த மூன்று மாதத்தில் அதிகரித்துள்ளது. கடத்தப்படுபவர்களில் பெரும்பான்மையானவர்கள் தமிழர்கள். அதிலும் வர்த்தகர்கள் கடத்தப்பட்டார்கள். இதுவரை 27 பேருக்கு அதிகமானவர்கள் கடத்தப்பட்ட போதும் 9 பேரே விடுவிக்கப்பட்டுள்ளனர். 9 பேர் படுகொலை செய்யப்பட்டு, சடலமாக மீட்கப்பட்டுள்ளனர். இந்தக் கடத்தல்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து குரல்கள் எழுப்பப்பட்டபோதும், சூரியன் எப்.எம்.செய்தியாசிரியர் குருபரன் கடத்தப்பட்டதற்குக் காட்டப்பட்ட எதிர்ப்பைப் போல், எதிர்ப்புக் காட்டப்படவோ பிரமுகர்களின் குரல்கள் ஒலிக்கவோ இல்லை என்பதை கவலையோடு கூறவேண்டியிருக்கிறது.

பின்னர், 'தமது நோக்கம் நிறைவேறிவிட்டது' என்று கூறிய கடத்தல்காரர்கள் குருபரனை விடுவித்தனர் என்று கூறப்பட்டது. இந்தக் கடத்தல் தொடர்பான விசாரணைகளுக்கு குருபரன் சரியாக ஒத்துழைத்தாரா? என்பது கேள்விக்குரியதாக இருக்கிறது. எனினும் அவரது பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் காரணமாக, அவருக்கு சில உண்மைகளைக் கூற முடியாது இருக்கலாம் என்ற நியாயங்களும் கூறப்பட்டது. எது எப்படி இருப்பினும் குருபரன் உயிரோடு திரும்பியது ஆறுதல் தருவதாக இருக்கிறது. இதற்குப் பிறகும் இதே மாதிரியான சம்பவங்கள் தொடர்ந்தன. எனினும் 10.11.06 அன்று த.தே.கூ.பாராளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் கொழும்பில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

அவர் கொலை செய்யப்பட்டதற்கு அரசியல் காரணங்கள் இருக்கின்றனவா என்பது ஒருபுறமிருக்க, காணாமல் போதல், கடத்தல்கள் தொடர்பாக மிகத் தீவிரமாகக் குரல் கொடுத்து வந்தவர் ரவிராஜ் என்பதால் அவரின் கொலைக்கான காரணங்கள், மேற்படி சம்பவங்களுடன் தொடர்புபட்டனவாக இருக்கலாமென நம்பப்படுகிறது. இந்த சந்தேகம் வலுக்கத் தொடங்கியதன் பின்னணியில் ரவிராஜ° டன் சேர்ந்து மேற்படி அசம்பாவிதங்களுக்கு எதிராகக் குரல் கொடுத்து வந்தவர்களும் குறிவைக்கப்படலாம் என்ற நிலை தோன்றியுள்ளது.

மேலக மக்கள் முன்னணியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான மனோகணேசன் தலைநகரில் நடந்த அத்தனை ஆட்கடத்தல்களையும், அதனோடு ஒட்டிய கொலைகளையும் கண்டித்தவர். அதற்கு எதிராகவும் குரல்கொடுத்து வந்தவர். ரவிராஜின் கொலைக்குப் பிறகு அவருக்கும் கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருப்பதாக தகவல்கள் வெளியாகின. அதைத் தொடர்ந்து கிடைத்த தகவலின்படி, மனோகணேசன் எம்.பி., சுய பாதுகாப்புத் தொடர்பில், உரிய பாதுகாப்புத் தொடர்பான அதிகாரிகளுக்கு முறையிட்டதோடு, வெளிநாட்டுத் தூதராலயங்களுக்கும் தெரிவித்தார். இந்தச் சம்வத்தைத் தொடர்ந்து தற்போது சக்தி ரீ.வீ.யின் பணிப்பாளர் ஸ்ரீரங்காவுக்கும் கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு ஏற்கனவேயும் ஸ்ரீரங்காவுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருந்ததாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. இந்தக் கொலை அச்சுறுத்தல் விடுக்கும் சம்பவமானது தொடர்கிறது. முரசின் ஆசிரியருக்கு தொலைபேசி மூலமாகக் கொலை அச்சுறுத்தல் விடுக்கப்படுகிறது. இவை இதுவரை தெரியவந்த பிரமுகர்கள் மீதான கொலை அச்சுறுத்தல்கள். இன்னும் எத்தனையோ பேருக்கு அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டபோதும் அவர்கள் ஊடகப் பலமும், செல்வாக்கும் இல்லாததால் தமக்கு விடுக்கப்பட்டிருக்கும் அச்சுறுத்தல்களைக் கூட வெளியில் சொல்லப் பயந்து கொண்டிருக்கிறார்கள். சிலர் தமது பெயர்களை வெளியில் சொல்ல வேண்டாம் எனக் கூறுகின்றனர். இவ்வாறான நிலையை விரைவாக மாற்றத்துக்குட்படுத்த வேண்டும். ஒருவர் கொண்டிருக்கும் கருத்துக்கள் மாறுபட்டதாக இருக்கலாம் அல்லது தவறானதாகக் கூட இருக்கலாம். அதைத் தீர்த்துக் கொள்ளும் வழி அவரைக் கொலை செய்வதுதான் என்ற நிலைமை கண்டனத்துக்குரியதாகும். கொலை அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருக்கும் ஒருவருக்கு அதிகபட்சமாக எத்தனை நாட்களுக்குப் பாதுகாப்பு வழங்க முடியும் என்பதை தீர்மானிக்க முடியாது. அது தவிரவும், கொழும்பில் ஒருவரைக் கொலை செய்ய மிகவும் ஏதுவான நிலைமை இருப்பதாகவும் அஞ்சவேண்டியுள்ளது. கூலிக்காகக் கொலை செய்வோர், கோபத்துக்காக கொலை செய்வோர், அரசியல் முரண்பாட்டுக்காகக் கொலை செய்வோர் என்று கொலையைச் செய்ய கொலையாளிகளுக்குள் போட்டி நிலவுகின்ற நிலைமையே உள்ளது. இந்தக் கொலைக்கரங்களிலிருந்து ஒருவரை எந்தளவுக்குப் பாதுகாக்க முடியும்?



பட்டப்பகலில் ரவிராஜ் மீது துப்பாக்கிச் சூடு.

> எத்தனையோ பேருக்கு அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டபோதும் அவர்கள் ஊடகப் பலமும், செல்வாக்கும் இல்லாததால் தமக்கு விடுக்கப்பட்டிருக்கும் அச்சுறுத்தல்களைக் கூட வெளியில் சொல்லப் பயந்து கொண்டிருக்கிறார்கள். சிலர் தமது பெயர்களை வெளியில் சொல்ல வேண்டாம் எனக் கூறுகின்றனர். இவ்வாறான நிலையை விரைவாக மாற்றத்துக்குட்படுத்த வேண்டும். ஒருவர் கொண்டிருக்கும் கருத்துக்கள் மாறுபட்டதாக இருக்கலாம் அல்லது தவறானதாகக் கூட இருக்கலாம். அதைத் தீர்த்துக் கொள்ளும் வழி அவரைக் கொலை செய்வதுதான் என்ற நிலைமை கண்டனத்துக்குரியதாகும்.

உதாரணத்துக்கு ரவிராஜின் கொலையானது, அவர் புலிகளின் பினாமி என்பதற்காக அவரை யாரும் கொலை செய்தால், அந்தப் பழி அரசின் மீது விழும் என்பது சாதாரணமான விடயம். அப்படி ஒரு பழி வந்துவிடக்கூடாது என்பதற்காகவே அவருக்கு அரசு பாதுகாப்பு வழங்கியிருந்தது. கடைசியில் அந்தப் பாதுகாப்பு உத்தியோகத்தரும் சேர்த்தே சுட்டுக் கொல்லப்பட்டார். ரவிராஜை கொலை செய்வதனூடாகக் குற்றச்சாட்டை அரசின் பக்கம் தள்ளி விடுவதால் புலிகளுக்கு கூடுதல் அனுகூலம் இருக்கின்றது. ஆகவே புலிகளே அந்தக் கொலையைச் செய்திருக்கலாம் என்ற சந்தேகங்களும் முன்வைக்கப்படுகின்றன. நடக்கும் விசாரணைகள் அந்தக் கோணத்திலும் நடத்தப்படுவதைப் புரிந்துகொள்ள முடிகிறது. இதேபோல் கொல்லப்படும் பிரமுகர், யாருக்கு சார்பானவரோ, அவருக்கு எதிரானவர்களாலேயே அவர் கொல்லப்பட்டிருக்கலாம் என்று யூகப்படுத்திக் கொண்டு சம்பவங்களைப் பார்க்க முடியாது. எதிரிதான் குற்றவாளி என்பதை விடவும், லாபம் கருதிய சார்பு நிலையாளர்களே குற்றவாளிகளென்ற நிலையும் தோன்றியுள்ளது.

ஆகவே கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருக்கும் ஒருவர், யாரிடமிருந்து அச்சுறுத்தல் விடுக்கப்படுகிறது? தனது மரணம் யாருக்குப் பிரசாரப் பொருளாக அமையும்? யாருக்கு அரசியல் இலாபமாக அமையும்? என்பதை சிந்தித்து தனது பாதுகாப்பை ஏற்படுத்த வேண்டியிருக்கிறது. ஒரு கருத்துக்காக விமர்சிக்கும் ஒருவரை விடவும் பின்புலமாக இருக்கும் ஒருவருக்கு இழப்பின் தேவை அதிகமாக இருக்கிறது என்ற யதார்த்தத்தை யாரும் புரிந்து கொண்டதாக இல்லை. குருபரன் கடத்தப்பட்டு விடுவிக்கப்பட்டது, ரவிராஜ் படுகொலை செய்யப்பட்டது என்ற சம்பவங்களுக்குப் பின்னணியிலும் இவ்வாறான அவிழ்க்கப்பட வேண்டிய மர்ம முடிச்சுக்கள் இருப்பதாகவே புலனாய்வுத் துறை தெரிவிக்கின்றது. இதன் தொடர்ச்சியாக தற்போது பாராளுமன்ற உறுப்பினர் மனோகணேசன், ஸ்ரீரங்கா, முரசு ஆசிரியர் போன்றோருக்கு விடுக்கப்பட்டிருக்கும். அச்சுறுத்தல்கள் தொடர்பாகவும் பரந்துபட்ட விசாரணைகளையும், உரிய பாதுகாப்பு

அலசுவது

**- மதியூகி -**


வசதிகளையும் அரசு முன்னெடுக்க வேண்டும்.

ஒருவருக்கு கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருக்கிறது என்பதை குறித்த நபர் கௌரவத்துக்காகக் கூறமுடியாது. ஒரு சிலருக்கு இவ்வாறான செய்தியைப் பரப்ப வேண்டிய தேவை இருக்கவும் கூடும். ஆகவே காவல்துறையினர் இந்த விடயத்தில் கூடுதல் அக்கறையுடன் விசாரணைகளை நடத்த வேண்டும். கொலையாளிகள் இப்படி சுதந்திரமாக அச்சுறுத்தல் விடுக்கவும், கொலை செய்யவும் முடியுமான சூழல் மாற்றமடைய வேண்டும். கொலை அச்சுறுத்தல் விடுக்கப்படுபவர்களின் பாதுகாப்பு மட்டுமல்லாது, இலங்கைப் பிரஜைகள் ஒவ்வொருவரின் பாதுகாப்பும் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

அந்தக் கடமை அரசுக்கு உண்டு.

---

# அதிரடி அய்யாத்துரை



**போன** வாரம் பார்ளிமெண்டில நடந்த விஷயங்களில செவாலியே லிங்கத்தார் சட்டையைக் கழற்றி விசுக்கிக் காட்டின சீன் சூப்பராக இருந்திச்சுதுங்கோ. அவர் முன்னமே அமிர் அண்ண இருந்த காலத்தில சிறை சென்று திரும்பேக்க தாடியோடையும், பரட்டைத் தலையோடையும் மேடைகளில ஏறி நிண்டு ஸ்டைல் காட்டினவர். அது நடந்து பல வருடங்களுக்குப் பிறகு போன வாரம் தான் அவரின்ர பழைய ஸ்டைலைக் காட்டினவர். உந்தக் காட்சியைப் பழைய கூட்டணிக்காரர் கண்டிருந்தால் புல்லரிச்சுப்போயிருப்பினம். மாவையர் பார்ளிமெண்டுக்குள்ள சண்டையைக் கழற்றி எறிஞ்சவராம் எண்ட செய்தி கேட்டு பூரிச்சுப் போயிட்டினமாம்.

உந்தக் கூத்து ஒருபக்கமிருக்க, கூத்தமைப்புக்காரர் காட்டின இன்னொரு பெருங்கூத்து என்ன தெரியுமோ? அதிகாரமானவைக்கு கீழால தாடி வச்ச ஒருவர் இன்னொருவரை சுடுறமாதிரி ஒரு காட்டூன் போட் பிடிச்சுக் கொண்டு இருந்திச்சினம். கடைசியில பார்த்தால், வீணைக் கட்சியின்ர தலைவரைக் கைது செய்யுங்கோ எண்டிச்சினம். இவைக்கு ஏன் உந்த அவசரம். குற்றம் விசாரிக்கப்பட்டுக் கொண்டிருக்கேக்க, அவையைப் பிடி, இவையைப் பிடி எண்டு கத்தி அவசரப்பட்டு குற்றவாளியைக் காப்பாத்திறதை, இவை புங்குடுதீவில புவனேஸ்வரி கற்பழிக்கப்பட்டதில இருந்து செய்யினம். இவை விசாரணையை திசை திருப்பத்தான் உந்த வேஷம் போடினமெண்டால், உண்மையான குற்றவாளியைத் தப்பிக்க விடப்பாக்கினம். இவை காப்பாத்துற குற்றவாளிகள் எண்டால் அது ரெண்டெழுத்தார் தானே? அப்புடியெண்டால் ரவியான ராயரை ரெண்டெழுத்தார் கொலை செய்திருக்கினம் எண்டதை புருப் பண்ணினமோ எண்டு வீணைக் கட்சிக்காரர் கேக்கினம். கூத்தமைப்புக்காரர் ஓவராகக் கூத்துக்காட்டி அம்புடுகினமுங்கோ.

**ரவியான** ராயர் கொல்லப்பட்டவுடன இந்த நாட்டில பொலிஸ் இருக்கோ? சட்டம் இருக்குதோ? எண்டெல்லாம் கொதிச்சு எம்பிக் குதிச்ச எங்கட மேல் வீட்டு கணேசனாரைக் காணயில்லையுங்கோ. அவருக்குக் கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருக்கெண்டும் அது தொடர்பாக எம்பசிகளுக்கு தான் அறிவிச்சிருக்கிறதாகவும் சொன்னார். பிறகு ஆளின்ர சத்தத்தையே காணயில்லை. அதுவும் ரவியான ராயரின்ர இறுதிக் கிரியை முடிஞ்சதில இருந்து கணேசனாரின்ர சத்தத்தைக் காணயில்லை. என்னாச்சு, ஏக்கனவே அவருக்கு கொலை அச்சுறுத்தல் எண்டாரே எண்டு பதறியடிச்சு விசாரிச்சால், அவரின்ர விசுவாசி ஒருவர் இரகசியமாகச் சொன்னார், அவர் இப்ப நாட்டில இல்லையாம்.

இங்கிலிஷ் நாடொன்றுக்கு விஸா எடுத்துக் கொண்டு போயிட்டாராம். தான் உப்புடிப் பயணமாகின விஷயத்தைச் சொல்லாதேங்கோ எண்டு சொன்னவராம். பாத்தியளோ, அச்சுறுத்தல் எண்டதை வெளியாலை சொல்லி அனுதாபப்பட வச்சவர், எலிசபெத்தின்ர நாட்டுக்கு எஸ்கேப் ஆயிட்டதை மட்டும் சொல்லவேணாம் எண்டிட்டாரே. சரி, பரவாயில்லை. மூன்று மாதத்துக்குள்ள பார்ளிமெண்டுக்கு வந்துருங்கோ. அது கட்டாயம். வந்துடுவியள் எண்டு நம்புறம். ஏன் எண்டால் உதே விளையாட்டை உங்கட நண்பர் மண்ணெண்ணெய் மகேஸ்வரனார் முன்னம் செய்ததை நீங்களும் தெரிஞ்சுதானே இருப்பியள். பாதுகாப்புப் பிரச்சினையை விடவும் பதவிப் பிரச்சினைதானுங்கோ முக்கியம் எண்டுவினம். எனக்கெண்டால் ரெண்டும் முக்கியம். சேமமா இருங்கோ, பிளீஸ் - உங்கட பாதுகாப்புத் தான் முக்கியமுங்கோ...

**ஈராக்கில** சதாமுக்குத் தூக்குத்தண்டனை விதிச்சிட்டினமாம் எண்டவுடன "தூக்கா,தூக்கா" எண்டு அவரவர் தனக்குள் இருக்கிற எச்ச சொச்ச மனிதாபிமானத்தையும் சுரண்டிக் கொட்டி தூக்க வேண்டாம் எண்டும், தூக்கு வழங்க அவைக்கு யோக்கியதை இருக்கோ எண்டும் பிதற்றிக் கொண்டு திரியேக்க, எங்கட கூட்டமைப்புக்காரர் உதையே ஒரு உதாரணமாகக் காட்டி "பச்ச மரத்தில ஆணி அடிச்ச" மாதிரி கேட்டினமே ஒரு கேள்வி, அதுதானுங்கோ கேள்வி. அதாகப்பட்டது, 148 பேரை கொலை செய்த சதாமுக்குத் தூக்கு தண்டனை எண்டால் "ஆயிரக்கணக்கான தமிழர்களைக் கொலை செய்த சிங்களத் தலைமைகளுக்கு என்ன தண்டனை" எண்டு. உண்மையிலேயே மெகா சூப்பர் கேள்வியுங்கோ. உந்தக் கேள்வி தப்பில்லையுங்கோ. ஆனால் உதே கேள்வியை சிங்கள மக்களும், முஸ்லிம் மக்களும், தமிழ் மக்களும் திருப்பி உவையிட்ட, உவையின்ர ஏக தலைவரைப் பாத்துக் கேட்டால் அதுக்கு என்ன பதில் இவை சொல்லுவினம் எண்டதைத் தானுங்கோ யோசிச்சுக் கொண்டிருக்கிறன்.

ஏற்கனவே தீர்க்கப்பட்டிருக்கிற இருநூறு, முந்நூறு வருடத் தீர்ப்புகளே கிடந்து இலையான் ஓட்டிக்கொண்டிருக்கு. உந்த இலட்சணத்தில உந்த மாதிரிக் கேள்வி கேட்டு மாறிமாறித் தீர்ப்புக் குடுத்து எல்லாரையும் கழுத்தில சுருக்குப் போட்டுத் தூக்கிறதெண்டால் திரும்பிற பக்கமெல்லாம் "தூக்கு தூக்கு" எண்டுதானுங்கோ இருக்கும். உந்தக் கேள்வியைக் கேட்பினமோ...?

**வீணைக்** கட்சியின்ர தலைவரும் அமைச்சருமான தேவமானவர் குடாநாட்டில போய் அங்கத்தைய நிலைமைகளை அறிஞ்சு, அந்த மக்களோடை இருந்து உரிய நடவடிக்கைகளை எடுக்கிறார் எண்டதைக் கேள்விப்பட்டிருப்பியள். உங்க தலை நகரில நிண்டு கொண்டு, அது அப்புடி; உது உப்பிடி எண்டு ஆரூடம் கூறிக்கொண்டிருக்காமல் பிரச்சினை இருக்கிற இடத்தில போய் நிண்டு கொண்டு பேசிறதுதான் உத்தமம் எண்டதை தேவமானவர் சிம்போலிக்காகச் செய்து காட்டிறார் எண்டினம், விஷயம் தெரிஞ்சவை. அவர் இந்த பத்தொன்பதாம் திகதி அதிகாரமானவரின்ர பிறந்த நாளைக்கு, அவருக்கு தொலைபேசியில தொடர்பு கொண்டு 'விஷ்' பண்ணிப் போட்டு உந்த ஏ - ஒன்பது பாதையாலை தனிய உணவுப் பொருட்களை அனுப்பிற யோசனையைச் சொன்னவராம். அதுவும் இங்கால படைத்தரப்பு பூட்டி சீல் பண்ணினால் நேரப்போய் யாழிலதான் திறக்கிறது. அதோடை அரசின்ர வாகனங்கள் எண்டால் அதுக்கு ரெண்டெழுத்தார் வரி வாங்க மாட்டினம் எண்ட ஆலோசனையையும் சிலர் முன்மொழிஞ்சிச்சினமாம். வருமானம் வராத பாதையைத் திறக்க ரெண்டெழுத்தார் சம்மதிக்க மாட்டினம். வருமானமில்லை, மனிதாபிமானம் தான் பிரச்சினையெண்டால் உது நடக்கும். இல்லை, சனங்களையும், சனங்களின்ர வாகனங்களையும் விட வேணும் எண்டிச்சினமெண்டால் உங்க மனிதாபிமானம் இல்லை. வரி..மானம் தான் எண்டது கன்போமுங்கோ...

# பேனை




'**போவோம்** இரசிப்போம்' பகுதிக்குத் தெரிவு செய்யப்படும் தலைப்புகள் வித்தியாசமாக இருக்கின்றன என்று அநேகமான வாசகர்கள் குறிப்பிட்டுக் கடிதம் எழுதியிருப்பது மகிழ்ச்சியளிக்கிறது. பல வாசகர்கள் பல தலைப்புகளைக் குறிப்பிட்டும் எழுதியுள்ளார்கள். அவ்வாறு கிடைக்கப்பெற்ற தலைப்புகளில் அதிகமானவர்கள் குறிப்பிட்ட தலைப்பு 'பேனை'தான்.


பேனையைப் பற்றி எழுதும் போதே நண்பர் ஒருவர் சொன்ன சிறிய கவிதை ஒன்றுதான் ஞாபகத்துக்கு வருகிறது. விரல்களும் பேனையும் பேசிக் கொள்வதுபோல்.

***விரல்கள்*** :- 'ஏய் பேனையே மேலாடையைக் கழற்றியதும் ஏன் தலை குனிகிறாய் வெட்கமா?'

**பேனை** :- 'நிர்வாணக் காகிதத்துக்கு ஆடை கொடுக்கத்தான்'

இந்தக் கவிதையை எழுதிய கவிஞரின் பெயர் ஞாபகம் இல்லையாம் என்கிறார் நண்பர். ஆனால் கற்பனையின் உச்சம் வியக்க வைக்கிறது. பேனையைப் பற்றி எழுதுங்கள் என்று எழுதி அனுப்பிய அத்தனை பேருக்கும் பேனை பிடித்த அனுபவம் பெரும் போராட்டமாகத்தான் இருந்திருக்கும்.

கூர் பிடித்து சிலேட்டில் எழுதி, எழுத ஆரம்பித்ததிலிருந்து பென்சில்தான் பிரதான எழுதுகோல். என் ஞாபகத்திற்கு எட்டிய வரை, ஏழாம் வகுப்பில் தான் பேனையை எழுதுவதற்கு பாவிக்கத் தொடங்கினேன். பேனையால் பிழையாக எழுதிவிட்டால் அதை அழிப்பது மிகக் கடினம். பென்சில் என்றால் அழி ரப்பரால் இலகுவாக அழித்துவிடலாம். அந்தக் காலத்தில் மைவிட்டுப் பாவிக்கின்ற பேனைதான் அதிகமுண்டு. அதில் அப்பா எழுதுவதும், மைவிட்டுக் கொள்வதும் பார்க்க லாவகமாக இருக்கும். அந்தப் பேனை பாவிக்கும் அநேகமானவர்களின் சட்டையில் எப்படியோ மை பட்டுவிடும்.




பின்னர் (குமிழ் முனைப் பேனை) ஓரெக்ஸ், ரெனோல்ட் போன்ற பேனைகள் பாவனைக்கு வந்த பிறகு, ஓரெக்ஸ் பேனை வேண்டி அதற்குப் பெயர் எழுதிய கடதாசித் துண்டை ரீபிலோடு சுற்றி வைத்துக் கொள்வது பெருமையாக இருக்கும். அதுபோல் ரெனோல்ட் பேனை வேண்டினால் அதில் சில ஆங்கில எழுத்துக்களைச் சுரண்டிவிட்டு வைத்துக் கொள்வதும் அப்படித்தான்.

எப்படி என்றாலும் பேனையை இன்னொருவருக்கு அன்பளிப்புச் செய்யக்கூடாது. ஏன் என்றால் அப்படிச் செய்தால் சம்பந்தப்பட்ட இருவருக்குள்ளும் சண்டை வருமாம். ஆகையால் அன்பளிப்புச் செய்வதில்லை. அதற்குப் பதிலாக களவெடுத்துக் கொள்ளலாம்.


சில பேனைப் பிரியர்களைப் பார்த்திருக்கிறேன். மற்றவர்களிடம் அவசரத்துக்காக பேனை வேண்டினால் கூட திருப்பித் தரமாட்டார்கள். அவர்களிடம் விதம் விதமான னைகள் இருக்கும். மற்றவர்களின் பேனையையும், விதம் விதமான பேனைகளையும் சேமிப்பது கூட சிலரின் பழக்கமாக இருக்கிறது.

சிலருக்குக் கறுப்புப் பேனை பிடிக்காது. துக்கமான கலர் என்பார்கள். சிகப்புப் பேனை பாவிக்கும் ஒருவரை பொலிஸ்காரராக நினைக்கிறார்கள். இங்கே பத்திரிகையில் ஒப்புநோக்காளர்களாக இருப்பவர்களும் சிகப்புப் பேனையைப் பாவிக்கிறார்கள். நீதிவான்கள் பச்சைப் பேனையைப் பாவிப்பது அதிகம். நீதிபதிகளைப் பற்றி எழுதும்போது அவர்கள் தூக்குத் தண்டனையை வழங்கித் தீர்ப்பு எழுதிவிட்டு, அந்தப் பேனையின் நுனியை குத்தி உடைத்து விடுவார்களாம். ஏன் என்றால் மரணதண்டனை வழங்கிய அந்தப் பேனையால் இன்னொரு தீர்ப்பு எழுதக் கூடாது என்பதற்காகவாம்.

அந்தப் பொழுதில் ஒரு பேனையின் நிலை என்னவாக இருக்கும். 'ஏய் கொலைகாரனே! உன் முன்னிலையிலேயே என் கழுத்து முறிக்கப்படுகிறதே என்பதாகத்தானிருக்கும்.

கைக்குக் கிடைக்கும் எல்லாப் பேனைகளுமே நமது விருப்பத்தைப் பெறும் வகையில் எழுதுவதில்லை. தடிப்பான எழுத்து, தொடர்ச்சியற்ற எழுத்து என்று பேனை நம்மோடு மல்லுக்கட்டுகின்றபோது எழுதுகின்ற விருப்பம் குறைந்து விடுகிறது. சில சமயங்களில் மெல்லிய, நேர்த்தியான எழுத்துக்களைப் பேனைகள் பிரசவிக்கின்றபோது எழுத்து நமக்குள்ளிருந்து பீரிட்டுக் கொண்டு வருகிறது. நாம் யோசிக்கின்றவற்றை, கையின் அசைவை ஒரு பேனை அப்படியே பதிவு செய்கின்ற விதம் பற்றி யாரும் சிந்தித்திருக்கிறீர்களோ, இல்லையோ தெரியாது. இல்லையென்றால் இனியாவது சிந்தியுங்கள்.


குயிலிறகில் ஆரம்பித்து, எழுத்தாணி என்று இன்று பேனையின் நவீனம் பல விதம். நாம் காதலிக்கும் இன்னொருவரின் ஞாபகங்களை இதயத்தில் இடம் கொடுப்பதாகச் சொல்கிறோம். அதுபோல் பேனையும் நம் காதலுக்குரியது தான். ஆனால் அதற்கு இடம் இதயத்துக்குள் இல்லை. இதயத்திற்கு அருகில் ஆண்களின் சட்டைப் பையில் இருக்கும் பேனைகள் இதயத்தின் வலிகளையும், தாலாட்டையும் கேட்டுச் சிலிர்த்துக் கொள்ளும். பெண்கள் கொண்டிருக்கும் பேனைகள் பாவம். கைப் பைக்குள் சிறை வாசம்தான். முதலில் சந்திரனில் காலடி வைத்த ஆம்ஸ்ரோங் ஒரு தடவை, அவர்கள் சென்ற விண் ஓடத்தில் ஏதோ பழுது ஏற்பட்டுவிட்டதால் அதைத் திருத்திக் கொள்ள உரிய பொருள் இல்லாமல் யோசித்தபோது, தன் சட்டைப் பையிலிருந்த பேனையை எடுத்து திருத்த வேலை செய்ய வேண்டிய துவாரத்தில் நுழைத்தபோது மிகக் கச்சிதமாகப் பேனை உதவியாக இருந்ததாகச் சொல்லியிருக்கிறார். பேனை உயிர் பறிக்கும் சட்டங்களை மட்டுமல்ல, உயிர் காக்கும் ஆயுதமாகவும் தன் பதிவைப் பதித்துள்ளது.



**தருவது : தேசன்**

ஆயுதமும் வன்முறையும் மலிந்துவிட்ட இந்த கலியுகத்தில் பேனைகளுக்கும் பாதுகாப்பில்லை. அதற்குக் காரணம், பேனை வடிவில் துப்பாக்கிகள், புகைப்படக் கருவிகள், கத்திகள் என்று பேனை வடிவில் எல்லாமே வந்துவிட்டதால் பேனைகளைக் கொண்டு சென்று பிரமுகர்களைச் சந்திக்க அனுமதியில்லை. பெரும் பாதுகாப்புத் தளங்களில் நுழைபவரின் பேனை வெளியிலேயே விடப்படுகிறது. எனக்கு இரண்டு பேனை ஒரு வாரத்துக்குத் தேவைப்படுகிறது. மை தீர்ந்து விட்டாலும், புதிதாகவே இருக்கும் பேனையை குப்பைத் தொட்டியில் வீசுவதற்கு விருப்பம் வராது. *(தொடர்ச்சி 22ஆம் பக்கம்)*





## மலையாள மாந்திரீகம்

**உங்கள் காரியங்கள் நினைத்தது நினைத்தப்படி நிறைவேற வேண்டுமானால் என்னை சந்தியுங்கள். எத்தனை பேர்களிடம் சென்று மாந்திரீக பரிகாரம் செய்து தோல்வி கண்டவர்கள் என்னை தேடி வர காரணம் என் கை ராசியே. வாழ்க்கை பிரச்சினையாக இருந்தாலும் சரி, தீராத நோயாக இருந்தாலும் சரி என்னை கண்டு மாந்திரீக பரிகாரம் செய்தால் முன் வினை பாவகரும தோஷங்கள் நீங்கி விடும்.**

**வெளிநாட்டவர்களுக்கு 24 மணித்தியால தொலைபேசி உரையாடல் வசதி உண்டு**

## எனது தனித்தன்மை என்ன

**உண்மைச் சேவையை உறுதி படுத்தும் முகமாக கடந்த 39 வருடங்களாக எனது புகைப்படத்தை மக்களுக்கு அறிமுகம் செய்கின்றேன். இது மட்டுமா? வாங்கும் பணத்திற்கும். (GURANTY CARD) வழங்குவதும் இது எப்போது, எத்தனையாம் திகதி, எத்தனை மணிக்கு எந்த மாதம் என்றெல்லாம் ஆணிவேறு அக்குவேராக அன்பர்களின் முகத்தை பார்த்த மாத்திரம் கூறிவிடுவேன்.**

## இனி உங்கள் பிரச்சினை என்ன?

**வாருங்கள் உங்கள் குறைகளை கூறுங்கள். இவையுடன் வெளிநாட்டவர்களுக்கென அதி விஷேட சாமகால பூசை நடைபெறுவது என்றால் அது அன்னை ஸ்ரீ துர்க்கையின் கருணையே**

**என்னால் நன்மை பெற்றவர்கள் என்ன கூறுகிறார்கள்.**

**பரம்பரை பரம்பரையாக 39 வருடகாலமாக தன்னிகரற்ற சேவை யாற்றும் மலையாள மாந்திரீக தெய்வீக சக்தியால் எண்ணியது எண்ணியவாறு மின்சார வேகம் போல நடைபெறுவது திண்ணம். அதற்கெடுத்துக்காட்டாக, மக்களின் வெற்றியின் பலனாக**

**சுவிஸ் அன்பரின் கணவன்,மனைவி பிணக்கு தீரல் மடல்**
மனித தெய்வமாகிய ஐயாவுக்கு, ஸ்ரீ துர்க்கையம்மனின் கிருபையாலும் தங்களது ஆசிர்வாதத்தாலும் சின்னாபின்னமான எனது குடும்பத்தை 7000 முஆ க்கு அப்பால் இருந்த வண்ணம் ஒற்றுமையாக்கிய மனித தெய்வமாகிய தங்களுக்கு என்றென்றும் கடமைப்பட்டுள்ளோம்.

**சுவிஸ் அன்பரின் மடல் ஸ்ரீ துர்க்கையம்மனின்ச க்தியால் பேசும் மழலை**
மனித தெய்வமே! உங்கள் தெய்வீக சக்தியால். பேசாத எம் 3 வயது மழலையை பேச வைத்து எம்மை ஆனந்த வெள்ளத்தில் மூழ்கவைத்த உங்களுக்கு எமது கோடானகோடி நன்றிகள்.

**ஜேர்மன் அன்பரின் மடல் மகளின் திக்குவாய் குணமாகியது**
அன்புத் தெய்வமாகிய ஐயாவுக்கு, பிறவியிலிருந்து திக்குவாயாக இருந்த எனது 9 வயது மகளை திக்குவாயிலிருந்து குணமாக்கிய உங்களுக்கு ஆனந்தக் கண்ணீரால் நன்றி கூறுகிறோம்.

**லண்டன் அன்பரின் மடல் எண்ணியவள் என்னிடமே வந்து சேர்ந்தாள்**
பெறுமதிப்புக்குறிய ஐயாவுக்கு, என்னை வெறுத்து என்னை பிரிந்து சென்ற என் அருயிர் காதலியை, மீண்டும் என்னிடத்தில் வந்து சேரவைத்து என்னை சந்தோஷத்தில் ஆழ்த்திய உங்களுக்கு ஆயிரமாயிரம் நன்றிகள்.

**கொழும்பு அன்பரின் மடல் 39 வயதில் அதிசயத் திருமணம்**
பெருமதிப்பும் மரியாதையும் கொண்ட ஐயா, எனது 39 வயது மகளுக்கு இனிமேல் திருமணமே நடக்காது என்று எண்ணிய நாம் உங்களிடம் மகளுக்கு பரிகாரம் செய்ததால் அதிசயிக்கத்தக்க வகையில் வெளியூரிலிருந்து வரன் கிடைக்கச் செய்து மகளின் திருமணத்தை இனிதே நடந்தேறச் செய்தமைக்கு கோடான கோடி நன்மைகள்

**குருணாகல் அன்பரின் மடல் நெடுநாளாக தடைப்பட்ட திருமணம்16 நாளில் வெற்றி**
தெய்வகடாட்சம் பொருந்திய ஐயா எனது சகோதரிக்கு திருமணம் தடைபட்ட வண்ணம் இருந்ததால் உங்களிடம் பரிகாரம் நிவர்த்தி பெற்ற பின் ஆச்சரியப்படத்தக்கவகையில் சகோதரியின் திருமணம் நடைபெற உதவிய உங்களை என்றுமே மறக்கமாட்டோம்.

**பிரான்ஸ் அன்பரின் மடல் குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட பயணம் வெற்றி**
அன்புக்கும் மதிப்பிற்குறிய ஐயா. வெளிநாட்டுக்கு செல்ல முடியாமல் மிகவும் கஸ்டப்பட்ட எனக்கு பிரயாணத்தடை நீக்கி பரிகாரம் செய்து குறித்த நாளில் பிரயாணத்தை கைகூட வைத்து என்னைப் பிரான்ஸிலிருந்து இக்கடிதத்தை நன்றியாக எழுதுகிறேன். என்றுமே உங்களை மறவேன்

**இத்தாலி அன்பரின் மடல் சந்தேகத்தால் பிரிவுபட்ட காதல் வெற்றி**
வணக்கத்துக்குரிய டாக்டர் ஐயா, வீண் சந்தேகத்தால் நானும் கணவரும் பிரிய நேர்ந்த சமயம் மீண்டும் சந்தோஷமாக சேர்ந்தது உங்களால் தான் என்றென்றும் உங்களுக்கு நன்றிகள்.

**பதுளை அன்பரின் மடல் போதை அடிமைதனத்திலிருந்து விடுபட்டவர்**
அன்புக்குறிய ஐயாவுக்கு, எனது கணவரை நீண்ட நாள் போதை பொருள் அடிமைத்தனத்திலிருந்து மீட்டு எமது குடும்பத்தில் புது ஒளியேற்றினீர்கள் நானும் எனது குடும்பத்தாரும் என்றென்றும் கண்ணீரால் நன்றியாக இருப்போம்.

**கனடா அன்பரின் மடல் ஜாதகத்தில் குறியது பலிதம்**
மரியாதைக்குரிய ஐயா, உங்களிடம் ஜாதகம் பார்க்க வந்தபோது வெளிநாடு செல்வதைப் பற்றியே அறிந்திருந்த எனக்கு இத்தனையாம் திகதி வெளிநாடு செல்வாய் என கூறியது பலித்தது கண்டு ஆச்சரியமும் சந்தோஷமும் அடைந்தேன் என்றும் உங்களை மறவேன் என்றும் உங்கள சேவை தொடரட்டும்.

**யாழ்ப்பாண அன்பரின் மடல் அதிசய அக்னி குண்டல பூஜை**
மதிப்பு மரியாதை கொண்ட ஐயா, என்னையும் எனது குடும்த்தாரையும் மறவாது மாதம் தோறும் விசேஷமாக நடைபெறும். அக்கினிகுண்டல பூஜையில் சக்தி பெற்ற விபூதியை அனுப்பி எம்மை துன்பத்திலிருந்து காத்து வருவதற்கு என்றுமே நன்றி கூறுகின்றோம் ஐயா.

**கொழும்பு அன்பரின் மடல் அச்சொட்டான கைரேகை பலன்**
அன்புள்ளம் கொண்ட ஐயா, தலையில் முடியுதிர்வதைத் தடுத்து நீண்ட கூந்தலுடன் இவ்வுலகில் நலமுடன் வாழ எனக்கு வாழிகாட்டியமைக்கு என்றென்றும் தங்களுக்கும் துர்க்கையம்மனுக்கும் நன்றி கூறுகின்றேன்.

**கண்டி அன்பரின் மடல்**
பல சிரமங்கள் மத்தியில் இருந்தேன். தினமுரசில் உங்களுடைய அற்புத சேவையைப் பார்த்து உடன் தொடர்பு கொண்டேன். உடன் எனது ஜாதகத்தைக் கணித்து என் வாழ்வில் நடப்பது நடக்க இருப்பது பற்றி மிகத் தெளிவாக கூறியிருக்கிறீர்கள். என் உள்ளம் நிறைந்த நன்றிகள். தங்களின் பரிகாரமான செயலால் என் மனம் அமைதியடைந்து சந்தோஷத்துடன் இருக்கிறேன். வாழ்க ஐயாவின் சேவை

**இனி உங்கள் மகிழ்ச்சிக்கு**
**அருள் ஞானத்தால் கூறப்படும் ஜாதகம் என்றுமே பிழைத்ததில்லை. நடந்தது, நடப்பது, நடக்கபோவது இவையனைத்தும் ஜாதகம் மூலமாகவோ? கைரேகை மூலமாகவோ? தெட்டத் தெளிவாக உங்கள் பலாபலன்களை அறிந்து சிறப்பான மகிழ்ச்சியான, குபேரவாழ்வு பெற என்னை நேரில் சந்தியுங்கள். உண்மையென்பது உண்மையே.**

உலக மளையாள மாந்திரீக சக்ரவர்த்தி பேராசிரியர்
டாக்டர் பீ.கே. சாமி (J.D.G.A.N.) JP PROF. DR. P.K. SAMY (J.D.G.A.N.) JP

**ஸ்ரீ துர்க்காதேவி மாந்திரீக உச்சாட்ட பீடம்**
SRI DURGADEVI MANTHIRIKA UTCHADA PEEDAM. No-162 KOTAHENA STREET COLOMBO 13
Tel-011-2470615, 011-2342463, 011-2342464,011-2431137
FAX-0094-11 2344831 Email- drpksamy@sltnet.lk Web:- www. drpksamy .com

**எமது கிளை நிறுவனம் நுவரெலியாவில் மட்டுமே.**
**No-33,Daily Fair Complex, Kandy Road Nuwara-Eliya.**
**Tel: 052-2222508**

**இன்னொருவர் பார்வையில்**

# இலங்கைப் பிரச்சினையில் இந்தியாவின் பிந்திய நிலைப்பாடு!

**இந்தியப்** பிரதமர் மன்மோகன் சிங் இலங்கை இனப்பிரச்சினைக்கு விரைவாகத் தீர்வு காண்பாரென உறுதியளித்திருப்பதாக புதுடில்லியிலிருந்து வெளிவரும் செய்திகள் கூறுகின்றன. தற்போது இலங்கையில் அதிகரித்துவரும் அந்தகாரநிலையில் தென்படக் கூடிய ஒரேயொரு ஒளிக் கீற்றாகத் தெரிகிறது. இந்திய மத்திய அரசின் பங்காளிக் கட்சியான தி.மு.க.வின் பிரதிநிதியான கப்பல்துறை அமைச்சர் டி.ஆர்.பாலுவுக்கு மன்மோகன் சிங் அளித்திருக்கும் இந்த உறுதிமொழி, இலங்கையின் உணர்வுகளைத் தொட்டிருக்கிறது. பட்டப்பகலில் கொல்லப்பட்ட என்.ரவிராஜ், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினராவார். பதினொரு மாதங்களுக்கிடையில் கொல்லப்பட்ட இரு தமிழ் தேசியக் கூட்டமைப்பு எம்.பி.களில் இவர் ஒருவராவார். 2005ஆம் ஆண்டு நள்ளிரவு கிறிஸ்மஸ் ஆராதனையின் போது, தேவாலயம் ஒன்றில் வைத்து ஜோசப் பரராஜசிங்கம் எம்.பி.சுட்டுக் கொல்லப்பட்டார்.

இவ்வருட ஆரம்பத்தில், புலிகள் மீண்டும் தொடங்கிய மோதலில் இலங்கை இராணுவம் தொடர்ச்சியாகப் பெற்றுவந்த வெற்றிகளுக்கு விமானத் தாக்குதல்களும், எறிகணைத் தாக்குதல்களும் அபரிமிதமாக மேற்கொள்ளப்பட்டதே முக்கிய காரணமாகும். ஏவுகணைகளாலும் ரொக்கெட்டுகளாலும் அப்பாவிகளுக்கும் தீவிரவாதிகளுக்குமிடையிலான வேறுபாடுகளைக் கண்டறிய முடியாது. இலங்கை இராணுவம் வேண்டுமென்றே குடிமக்களை இலக்கு வைத்துத் தாக்கவில்லை என்று வைத்துக் கொள்ளலாம். ஆனால் தமது அன்புக்குரியவர்களைப் பறிகொடுத்தவர்களுக்கோ சர்வதேச சமூகத்துக்கோ அது நியாயமாக இருக்க முடியாது. இலங்கை விவகாரங்கள் குறித்து சர்வதேச சமூகம் மீண்டும் அதிகளவில் ஏமாந்திருக்கிறது.

வாகரையில் புலி நிலைகளென்ற எண்ணத்தோடு இலங்கை இராணுவம் நடத்திய ஷெல் தாக்குதல்கள், அப்பாவித் தமிழ் மக்களைப் பலியெடுத்துள்ளன. வாகரைச் சம்பவத்தைக் கண்டித்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.கருணாநிதி அறிக்கையொன்றினை விடுத்ததன் தொடர்ச்சியாக, வெளிவிவகார அமைச்சர் பிரணாப் முகர்ஜிக்கும் வெளிவிவகாரச் செயலர் சிவசங்கர் மேனனுக்கும் மன்மோகன் சிங் நிலைமைகளை ஆராயுமாறு அறிவுறுத்தல் விடுத்துள்ளார். இந்த இன யுத்தத்தில் அப்பாவி மக்களை மனிதக் கேடயங்களாகப் புலிகள் இயக்கம் பயன்படுத்தி வந்திருக்கிறதென்று இலங்கை இராணுவம் தெரிவித்த கருத்து, சர்வதேச சமூகத்திற்கு இத்தடவை திருப்தி தருவதாக இருக்கவில்லை. சர்வதேச சமூகத்திற்கு திருப்தி அளிக்காத மற்றொரு சம்பவமும் நடந்திருக்கிறது.

இலங்கை யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர், குறிப்பிட்ட ஒரு பகுதியைச் சுற்றிப் பார்த்துக் கொண்டிருந்தபோது அவருக்குச் சமீபமாக விழும் விதத்தில் இலங்கை இராணுவம் தாக்குதல் நடத்தியதே அந்தச் சம்பவமாகும்.

மிகக் கவனமாக வார்த்தைகளைப் பிரயோகித்து கருணாநிதி விடுத்த அறிக்கையொன்றின் பிரதி அமைச்சர் பாலுவினால் மன்மோகன் சிங்கிடம் கையளிக்கப்பட்டிருக்கிறது. 'இன்னும் எவ்வளவு காலத்திற்கு இந்தியா அமைதியாக இருக்கப் போகிறது என்ற முக்கிய கேள்வி எழுந்திருக்கும் இச் சந்தர்ப்பத்தில் அதனை மத்திய அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். இனப்பிரச்சினை குறித்து மீளாய்வு செய்து பதில் காணவேண்டிய காலம் வந்து விட்டது' என்று கருணாநிதி அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். மறுநாள் இந்தியப் பிரதமரைச் சந்தித்த அமைச்சர் பாலு, உடனடியாகவும் உகந்த விதத்திலும் இந்தியா தலையிட வேண்டும் என்று கோரினார். அப்பாவி இலங்கைத் தமிழ் மக்கள் மீது ஆத்திரப்படாத நிலையிலும் கண்மூடித்தனமாகவும் இலங்கை இராணுவம் தாக்குதல்கள் நடத்தியிருக்கிறதென்று கூறியிருக்கிறார்.

தமிழக முதலமைச்சர், இலங்கைப் பிரச்சினை தொடர்பாக சில மாதங்களுக்குள் மேற்கொண்டிருக்கும் இரண்டாவது முயற்சி இதுவாகும். இதற்கு முன்னர் 'செஞ்சோலை'ச் சம்பவத்தைக் கண்டித்து தமிழக அரசின் பங்காளி கட்சிகளும் எதிர்கட்சிகளும் பிரச்சினையைக் கிளப்பியதன் பின்னர், எவ்வித வாதப்பிரதிவாதங்களுமின்றியே ஏகமனதாக தீர்மானம் ஒன்றினை நிறைவேற்றுவதற்கு அவர் வழிவகுத்தார். இதற்கு முன்னர், தமிழகத்தில் ஆளும் பங்காளிக் கட்சியான பாட்டாளி மக்கள் கட்சியின் ஸ்தாபகரான ராமதாஸ், தமிழக முதல்வர் இலங்கைத் தமிழர்களின் பிரச்சினையைக் கண்டறிந்து, பிரதமர் மன்மோகன் சிங்கிடம் தெரிவிப்பதற்காக சர்வகட்சித் தூதுக்கோஷ்டி ஒன்றுக்குத் தலைமை தாங்கி இலங்கைக்குச் செல்ல வேண்டுமென்று பகிரங்கமாகவே வேண்டுகோள் விடுத்தார். இந்த இரு சந்தர்ப்பங்களிலுமே, கருணாநிதி எடுத்த முயற்சிகள் தனித்து எடுக்கப்பட்டவையல்ல. அல்லது அவர் சொன்னதை, அவர்தான் முதலில் சொன்னார் என்பதுமல்ல. இதற்குப் பதிலாக இந்த இரு சந்தர்ப்பங்களிலும் சர்வதேச சமூகம் அதிர்ச்சியும் ஆச்சரியமும்



ராஜீவ் காந்தி ஞாபகர்த்த சமாதியை கலைஞர் கருணாநிதி மலர் வளையம் வைத்து அஞ்சலி சொலுத்தும் காட்சி.

தெரிவித்தது. அத்துடன் சுயாதீன அவதானிப்பாளர்கள், இலங்கை இராணுவத்தின் மீதே நேரடியாகப் பழியைப் போட்டனர். செயலாளர் நாயகம் கொபி அனான் உட்பட, ஐ.நா.வும் அதன் முகவராண்மை நிறுவனங்களும் இந்த அதிர்ச்சிச் சம்பவங்கள் குறித்து வலுவான கண்டனங்களைத் தெரிவித்தன.

இலங்கை நிலைமை குறித்துக் கவலை கொண்டவர்களில், இந்திய அரசாங்கமுமொன்று. காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணியில் அங்கம் வகிக்கும் இந்திய மத்திய அரசின் பங்காளிக் கட்சிகளாலும், தமிழ் நாட்டிலிருந்தும் எதிர்ப்புகளும் கவலைகளும் வெளிப்படுத்தப்பட்ட போதிலும், செஞ்சோலைச் சம்பவம் தொடர்பாக இந்தியா ஆலோசனை மட்டுமே வழங்கியது. இந்தத் தடவை கூட, இந்திய அரசினால் இலங்கை அரசின் உணர்வுகளைக் காணாதமாதிரி

> **"இலங்கை அரசியல் - இந்தியா மீளச் சிந்திக்க வேண்டிய தருணம்" என்ற தலைப்பில் கொழும்பிலிருந்து வெளிவரும் ஆங்கிலத் தினசரியான 'டெய்லி மிரரில்' வெளிவந்த கட்டுரையின் தமிழாக்கம் இங்கே தரப்படுகின்றது. புதுடில்லியைத் தலைமையகமாகக் கொண்டியங்கும் 'அவதானிப்பு ஆராய்ச்சி நிறுவனம்' என்ற அறிஞர்கள், நிபுணர்களைக் கொண்ட சிந்தனையாளர் குழுவின் சென்னைப் பிரிவு பணிப்பாளரான என்.சத்தியமூர்த்தி இக் கட்டுரையை எழுதியுள்ளார்.**

இருக்க முடியவில்லை. பாக்குநீரிணைக்கு இரு மருங்குகளிலும் உள்ள தமிழர்களின் இன உறவுகள் சமூக, அரசியல் யதார்த்தங்களைக் கொண்டதென்பதை மறுத்துவிட முடியாது. 1980களில் இலங்கைத் தமிழ் அகதிகளின் இந்திய வருகை, மிக உச்சக்கட்டத்தில் இருந்தது. குடிமக்கள் தொடர்ந்தும் இலக்கு வைக்கப்பட்டால், எழுகின்ற இந்த இலங்கைப் பிரச்சினையை தமிழக அரசோ, இந்திய அரசோ தட்டிக்கழித்துவிட முடியாது.

தோல்வியுற்று, மங்கிப்போன இலங்கையின் சமாதான முன்னெடுப்புகளுக்குப் புத்துயிரளிக்க, இந்தியா நேரடியாகத் தலையிட வேண்டுமென்று அழுத்தங்கள் அதிகரித்து வருவதை மறுத்துவிட முடியாது. சமீப சில காலங்களாக சமாதான முயற்சிகளில் இந்தியா கூடிய பங்களிக்க வேண்டுமென்று சர்வதேச சமூகம் அழுத்தம் கொடுத்து வருகிறது.

யுத்த நிறுத்த ஒப்பந்தம் வீழ்ச்சியுற்றமையும் ஜெனிவா - 2 பேச்சுவார்த்தைகள் தோல்வியுற்றமையும், புதிய சிந்தனையும் முன்முயற்றியும் தேவையென்பதையே சுட்டிக் காட்டுகிறது. ஏற்பாட்டாளர்களுக்கும் யுத்தநிறுத்தக் கண்காணிப்பாளர்களுக்கும் இருக்கக் கூடிய கட்டுப்பாடுகளை அது அம்பலமாக்கியது. பாரிய இந்து சமுத்திரப் பரப்பில் அயலிலுள்ள இந்தியாவை விட்டுவிட்டு தூரத்தேயுள்ள சக்திகளை இலங்கையில் வரவேற்கும் தன்மையும் கிடையாது. ஒருபுறத்தில், இந்திய அமைதிப் படை அனுபவமும் மறுபுறத்தில் ராஜீவ் காந்தியின் படுகொலையும் ஏற்படுத்திய தீங்கும் குழப்பமும் இன்னமும் பின்னணியில் இருக்கவே செய்கிறது.

ராஜீவ் காந்தி படுகொலை செய்யப்பட்ட ஸ்ரீபெரம்புதூர் பகுதியில் அமைக்கப்பட்ட ராஜீவ் காந்தியின் ஞாபகார்த்த சமாதிக்கு இரு வாரங்களுக்கு முன்னர் கருணாநிதி சென்று அஞ்சலி செலுத்தினார். பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் ராஜீவ் காந்தி கொலை செய்யப்பட்டார். அவரது ஞாபகார்த்த சமாதிக்கு கருணாநிதி சென்றது இதுவே முதற்தடவையாகும். ராஜீவ் காந்தியின் விதவை மனைவியும், ஆளும் காங்கிரஸ் கட்சியின் தேசிய மட்டத் தலைவியுமான சோனியா காந்தியுடன் அவர் அங்கு சென்றிருந்ததால், இந்த விஜயம் காங்கிரஸ் தி.மு.க. உறவுகளிலும் மாநில அரசுக்கும் மத்திய அரசுக்குமிடையிலான உறவுகளிலும் நிலவி வந்த, உணர்வு பூர்வமான பிரச்சினைகளை இது அகற்றியுள்ளது.

1991ஆம் ஆண்டு ராஜீவ் காந்தி படுகொலை செய்யப்பட்டமைக்கான பழி தி.மு.க.மீது வீழ்ந்ததன் பின்னர், 2004ஆம் ஆண்டு லோக்சபைத் தேர்தலில் இணைந்து செயலாற்ற காங்கிரஸும் தி.மு.க.வும் மீண்டும் முன்வந்தன. இந்த இரு கட்சிகளினதும் உறவுகளும் தொடர்ந்தும் சிக்கல் நிறைந்தவையாகவே இருந்து வந்தன. மத்தியில் குறுகிய காலம் பதவி வகித்த தேவகௌடா அரசாங்கத்துக்கு வெளியிலிருந்து அளித்து வந்த ஆதரவை, காலஞ்சென்ற காங்கிரஸ் கட்சித் தலைவர் சீதாராம் கேசரி 1997ஆம் ஆண்டு வாபஸ் பெற்றமை இதனை நன்கு புலப்படுத்துகிறது. தமிழகத்தில் தி.மு.க. ஆட்சியிலிருந்தபோது படுகொலைக்கான சூழ்நிலையை ஏற்படுத்தியதென, தி.மு.க.வைக் குற்றஞ்சாட்டி ஜெயின் கமிஷன் விடுத்த அறிக்கையில் கூறப்பட்டதையடுத்தே காங்கிரஸ் கட்சி இத் தீர்மானத்துக்கு வந்தது. இதனையடுத்து பாரதீய ஜனதாக் கட்சியுடன் தி.மு.க. நெருங்கிய தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டது. 1999ஆம் ஆண்டு முதல் 2003ஆம் ஆண்டுவரை, மத்தியில் பதவியிலிருந்த வாஜ்பாய் அரசில் தி.மு.க. அங்கம் வகித்தது.

2004ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தல்களில் தி.முக. தலைமையிலான கூட்டணி, தமிழ் நாட்டில் பெற்ற மாபெரும் வெற்றி, தி.மு.க. - காங்கிரஸ் கூட்டு பற்றிய ஒரு கருத்துக் கணிப்பீடு போல் தென்பட்டது. ராஜீவ் காந்தியின் படுகொலையையும் ஜெயின் கமிஷனின் அறிக்கையையும் சுட்டிக்காட்டி தி.மு.க.வின் எதிராளியான அ.இ.அ.தி.மு.க. தலைவி ஜெயலலிதா, காங்கிரஸ் - தி.மு.க. கூட்டு புனிதமற்றதென்று கண்டனம் தெரிவித்திருந்தார். பின்னர் பிரதமர் பதவியைக் கையேற்குமாறு சோனியா காந்திக்கு அழுத்தங்கள் வந்தபோது, கருணாநிதியின் முக்கியத்துவம் தெரியவந்தது. 2001ஆம் ஆண்டு தி.மு.க.வோடு தேர்தல் கூட்டுச் சேர்ந்திருந்த பாட்டாளி மக்கள் கட்சி, மறுமலர்ச்சித் திராவிட முன்னேற்றக் கழகம் ஆகியவற்றின் புலிச்சார்பு நிலைப்பாட்டை, நடைமுறைச் சாத்தியமாகச் சிந்திக்கும் சோனியா காந்தி சகித்துக் கொண்டார். இவ்வருடம் தமிழக மாநில சபைத் தேர்தலின்போது, புலிகள் இயக்கத்திற்கு தொடர்ச்சியாகவே எதிர்ப்புத் தெரிவித்து வந்த அனைத்திந்திய அண்ணா தி.மு.க. வுக்கு மறுமலர்ச்சித் திராவிட முன்னேற்றக் கழகத்துடன் கூட்டுச் சேர்வதில் எவ்வித பிரச்சினையும் இருக்கவில்லை. இந்தக் கூட்டணி தேர்தலில் தோல்வியுற்றது. அதாவது புலிச்சார்பு நிலைப்பாடு, இந்திய அரசியலில் எவ்வித புதிய போக்கையும் ஏற்படுத்தப் போவதில்லையென்பதையே இச் சகல கூட்டணிகளும் சுட்டிக் காட்டுகின்றன. அதாவது, தனித் தனிக் கட்சிகளினதும் அவற்றின் தலைவர்களினதும் உடனடித் தேர்தல் நோக்குகளையே இக் கூட்டணிகள் சுட்டிக் காட்டுகின்றன. காங்கிரஸ் கட்சியுடனோ, அ.இ.அ.தி.மு.க.வுடனோ கூட்டுச் சேர்வது என்பது, தி.மு.க., பா.ம.க., ம.தி.மு.க., ஆகியவை பல்வேறு கால கட்டங்களில் கொண்டிருந்த புலிச்சார்பு நிலைப்பாட்டை தணிக்கை செய்திருக்கிறது. இலங்கைக்கும் இலங்கை ஜனாதிபதிக்கும் மிக நெருக்கடி ஏற்பட்டிருக்கும் தருணத்திலேயே இலங்கைப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு இந்திய முன்முயற்சி தேவையென்ற கோரிக்கைகள் எழுந்துள்ளன. புதுடில்லிக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முதல் தடவையாக விஜயம் செய்த போது, தி.மு.க.தவிர்ந்த புலிச்சார்பு கட்சிகளான பா.ம.க., வைகோவின் ம.தி.மு.க. தொல் திருமாவளவனின் விடுதலைச் சிறுத்தைகள் ஆகியவை சென்னையில் தனித்தனியாக எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அழைப்பு விடுத்தன. தி.மு.க.வைப் போன்று பா.ம.க.வும், இந்தியாவின் மத்தியிலுள்ள ஐக்கிய முற்போக்கு கூட்டணியின் பங்காளிக் கட்சியாகும். இதேவேளை தமிழ் நாட்டில் கருணாநிதியின் தலைமையிலான தி.மு.க. அரசாங்கத்திற்கு பா.ம.க.வும் விடுதலைச் சிறுத்தைகளும் வெளியிலிருந்து ஆதரவு வழங்கி வருகின்றன. இவ்வாறு இத் தனித்தனி கட்சிகள் பிரதமர் மன்மோகன் சிங்கின் மீதும் முதல்வர் கருணாநிதி மீதும் வித்தியாசம், வித்தியாசமான விதத்தில் அழுத்தங்களைச் செலுத்தினாலும் இருவருமே இவ்வாறு அழுத்தங்களுக்குள்ளாகின்றனர். அதாவது இக்கட்சிகளின் புலிச்சார்பு நிலைப்பாடுகளுக்கு அப்பால், இலங்கைப் பிரச்சினையில் இந்தியா தலையிட வேண்டும் என்ற அழுத்தத்தை வெவ்வேறு நோக்கங்களுக்காகவும், தமது புலிச்சார்பு அரசியல் போக்கோடு சம்பந்தமில்லாத வகையிலும் முன்வைத்து வருகின்றன.

மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதி ஆனதுக்குப் பின்னர், கடந்த முறை மேற்கொண்ட விஜயமே முதலாவது இந்திய விஜயமாகும். முன்னைய ஜனாதிபதிகளைப் போன்று மஹிந்த ராபஜக்ஷவும் சமாதான முன்னெடுப்புகளில் இந்திய தலையீட்டைக் கோரியபோது, புலிகளுக்கு எதிரான யுத்தத்திற்கு பாகிஸ்தானிலிருந்து ஆயுதங்களைப் பெறுவது குறித்தும் ஆலோசனைகளைக் கோரினார்.

அண்மையில்தான் அன்ரன் பாலசிங்கமும், இலங்கைப் பிரச்சினையில் இந்தியா தலையிட வேண்டுமென்று கோரியிருந்தார். தற்போதைய சூழ்நிலைகளில், ஏனைய உலக நாடுகள் இலங்கைப் பிரச்சினையில் தலையிடுவதில் அர்த்தமில்லையென்று கருதத் தொடங்கும் சூழ்நிலையில், இந்தியா தலையிடும் சாத்தியம் பற்றிக் கருதுவது கூட இருதரப்புகளுமே மிக முன்னெச்சரிக்கையுடன் கையாளவேண்டிய விடயமாகும். தற்போதைய யுத்தத்திற்கு முடிவு கட்டுவதும் ஏ-9 பாதையைத் திறப்பதும் நல்ல அறிகுறிகளாக இருக்கலாம். ஆனால் அவை பேச்சுவார்த்தைக்கான ஒரு ஆரம்பத்துக்கு மட்டுமே வழிவகுக்கும்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இனப்பிரச்சினைத் தீர்வுக்கு தற்போது கொண்டிருக்கும் கொள்கையை மீளாய்வு செய்ய வேண்டிய தேவையுள்ளது. ஒரே நேரத்தில் இராணுவத் தாக்குதலையும், சமாதானத்தைக் கட்டியெழுப்பும் முயற்சிகளையும் இருமுறை அணுகுமுறைகளாக இலங்கை அரசு கையாளுவது, ஒன்றுக்கும் உதவப் போவதில்லை. சமாதானத் தீர்வை அமுல்படுத்தும் நோக்கில் வெற்றிகரமான சட்டவாக்கத்தை மேற்கொள்வதற்காக, ஆளும் சுதந்திரக் கட்சியும் எதிர்க்கட்சியான ஐ.தே.க.வும் செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரகாசிப்பு, மூன்று வாரங்களுக்குள் மங்கிப் போனமை கவலைக்குரியது. இரு பிரதான சிங்களக் கட்சிகளுக்குமிடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட போது, இலங்கைப் பிரச்சினைக்குத் தீர்வொன்று தென்படுவதாக இந்தியாவும் ஏனைய சர்வதேச சமூகமும் கருதின. தாம் கைவிடப்பட்டதாக சிங்களப் பெரும்பான்மை இனம் சிந்திக்கத் தொடங்கும் இத்தருணத்தில், இலங்கைத் தேசத்தில் ஏற்பட்டுள்ள அதிர்ச்சியை இப்போது அவர்கள் உணரத் தலைப்பட்டுள்ளார்கள். இந்தியாவும், ஏனைய உலகத்தைப் போன்று தனது கண்களையும், காதுகளையும் திறந்தபடிதான் வைத்திருக்கிறது. இந்தத் தடவை புலிகள் இயக்கம் எப்படித் தம்மை அதிர்ச்சிக்குள்ளாக்கும் என்பதை விட, இலங்கை அரசு எவ்வாறு தம்மை ஆச்சரியத்திற்குள்ளாக்கப் போகிறது என்றே இந்தியா பார்த்துக் கொண்டிருக்கிறது.


நன்றி : டெய்லி மிரர்

# கவிஞர் வாலி எழுதுகிறார்!

## —வாழ்க்கைச் சரிதம்—

**இந்த** சந்திப்பிற்குப் பிறகு இந்நாள் வரை நான் இன்னும் என் திரைப்பாடல்களை அச்சிட யாருக்கும் தொகுத்துத் தரவில்லை. ஆயினும், இந்தச் சந்திப்பின் மூலமாக கலைஞன் பதிப்பக அதிபர் திரு.மாசிலாமணியின் அன்பும் நட்பும் எனக்கு அருஞ் செல்வமாகக் கிடைத்தன.

பின்னாளில் நான் ஏதேனும் கவிதைகள் எழுதி வைத்திருந்தால்,



திரு.மாசிலாமணி அவர்களைத் தொலைபேசியில் அழைத்து, வரவழைத்து, வாசித்துக் காட்டுவேன். மாசிலாமணி பெயருக்கேற்ப மாசிலா மணிதான். வெள்ளை மனதோடு விமர்சிப்பார். இன்றளவும் என் எழுத்துக்களை அவ்வப்போது வாசித்து, தொலைபேசியில் தன் மகிழ்ச்சியைத் தெரிவிப்பார்.

என்னுடைய சினிமாப் பாடல்களுக்கு இறையருளால் கோடிக்கணக்கான இரசிகர்கள் இருக்கிறார்கள். அதேபோல் அளவில் சிறியதாயினும் திரு.மாசிலாமணிபோல் ஒரு ரசிக வட்டம் என் கவிதைகளுக்கும் இருப்பது குறித்து நான் கொஞ்சமாக கர்வப்படுவது உண்டு.

'புதிய பார்வை'யில் நான் எழுதும் இந்தத்தொடரால் எனக்கு புதியதொரு வாசகர் வட்டம் உருவாகியிருப்பதை உணர்கிறேன்.

நேற்று, திருச்சி தேசியக் கல்லூரியில் பேராசிரியராக இருந்து ஓய்வுபெற்ற என் பால்ய சினேகிதன் ஒருவன் நீண்ட கடிதம் எழுதியிருக்கிறான்.

அதில் இந்தத் தொடர் பற்றி பல விஷயங்களைக் குறிப்பிட்ட அவன், ‌விமர்சனங்களின் பிதாமகராகத் திகழும் சுப்புடு, உன்னைப் பற்றி கவிதை எழுதியிருக்கிறார். அவரைப் பற்றி நீ ஏன் ஒரு கவிதை எழுதக்கூடாது? வாசகர்களுக்கு நல்ல தீனியாக இருக்குமே!" - என்று ஒரு வேண்டுகோளை என் முன் வைத்திருக்கிறான்.

தனிப்பட்ட முறையில் என் நன்றியைத் தெரிவித்து நான் திரு.சுப்புடுவுக்கு மடல் எழுதிவிட்டாலும், நண்பரின் வேண்டுகோளுக்கு ஏற்ப,

இதோ: திரு.சுப்புடுவைப் பற்றி ஒரு வசன கவிதை:

'சுப்புடு!<br>
பாடகர்களின்<br>
தலையெழுத்தைப்<br>
பேனாவால் எழுத<br>
பர்மா விட்டு பாரதம் வந்த<br>
பிரும்மா.<br>
பாடல்களைக் கேட்டுப்<br>
பரவசப்படுவதில்<br>
மீசையில்லாத ரசிகமணி:<br>
பரதத்தைப் பேணிப்<br>
பராமரிப்பதில் -<br>
புடவை கட்டாத ருக்மணி.<br>
ஆம்.<br>
கால் கொண்டு நடக்கும்<br>
கலாஷேத்திரா.<br>
முசிறி முதலான<br>
மகா வித்வான்களுக்கு<br>
விசிறியாக விளங்கியவர்:<br>
இருப்பினும்<br>
இந்த விசிறியைப் பார்த்தாலே<br>
இன்றைய வித்துவான்களுக்கு<br>
வியர்த்துக் கொட்டுகிறது.<br>
'வாதாபி' தொடங்கி<br>
'பவமான்' வரையில்...<br>
அது-<br>
கர்த்தாவோ<br>
ஜன்யமோ-<br>
ஸ்வர ஸ்தானங்கள்<br>
சரியில்லையெனின்...<br>
ஸ்வரூபத்தைக் காட்டுவார்<br>
சுப்புடு.<br>
இவர்<br>
நியாயப்படுத்துவதை<br>
யெல்லாம்<br>
தங்களைக்<br>
காயப்படுத்துவதாகக் கருதும்<br>
கற்றுக்குட்டிகளும் உண்டு.<br>
இளம் வித்வான்களுக்கு<br>
இவர் தூண்டுகோல்:<br>
முதிய வித்வான்களுக்கு<br>
இவர் துலாக்கோல்;<br>
கொன்னக்கோலைக் கூடக்<br>
குற்றமிருக்கிறதா என்று<br>
குடைந்து பார்க்கும்<br>
கன்னக்கோல்.<br>
இந்த நக்கிரர்-<br>
நிறைய<br>
நெற்றிக் கண்களைப்<br>
பார்த்தாகிவிட்டது;

(தொடரும்.......)




# முதல் முறையாக முத்தக் கல்லூரி!

**மனித** ஜோடிகள் தங்களை மறந்து அன்பைப் பரிமாறிக்கொள்ள விரும்பும் உணர்ச்சிப் பெருக்குத்தான் 'முத்தம்'. 'உதடுகளைக் கடவுள் படைத்தது முத்தமிடுவதற்குத்தான்!' என்கிறார் புகழ் பெற்ற நாடக மேதை ஷேக்ஸ்பியர்.

உப்புச் சுவையைப் பரஸ்பரம் பரிமாற்றிக் கொள்ளும் விதமாகவே, முத்தமிடுதல் துவங்கியது என்கின்றனர் ஆராய்ச்சியாளர்கள். அந்நாளில் ரோம் நாட்டில் அந்தக் கால ஆண்கள், பெண்கள் மது குடிக்கத் தடை விதித்திருந்தனர். அதையும் மீறி மது



குடித்திருப்பார்களோ என்ற சந்தேகத்தில் உதட்டுடன் உதட்டை உரசி உண்மையை அறிந்தனராம். அதுவே நாளடைவில் முத்தமிடுவதற்கு வழி வகுத்துவிட்டது என்கிறார் ரோம் சரித்திர ஆய்வாளர் கேடோ.

அன்பை வெளிப்படுத்தும் அடையாளமாக முத்தமிடுதலை ஏற்றுக் கொண்ட முதல் நாடு பிரான்ஸ்தான். பண்டைக் காலத்தில் நடன நிகழ்ச்சிகள் பிரபலமாயிருந்தன. ஒவ்வொரு நிகழ்ச்சியின் முடிவிலும் முத்தம் தாராளமாகப் பரிமாறிக் கொள்ளப்பட்டது. இந்த முறை பிரான்ஸிலிருந்து உலகின் மற்ற நாடுகளுக்குப் பரவியது. முத்தமிடுதலுக்கு ஆங்கிலத்தில் சொல்லப்படும் 'கிஸ்' எனும் வார்த்தை 'கிஸ்ட்' என்ற வார்த்தையிலிருந்துதான் வந்தது.

ஆணும், பெண்ணும் முத்தமிட்டுக் கொள்வது 55 வாட்ஸ் மின்சார சக்தியைத் தரக் கூடியது. முத்தமிடும் போது உதடுகள் உலர்ந்து இருந்தால், மின் அதிர்வு அதிகமாக இருக்குமாம். முத்தமிடும் போது சதுர செ.மீ.க்கு 10பவுண்டு முதல் 25 பவுண்டு வரை அழுத்தம் இருக்குமாம். ஆண்கள் ஆர்வத்துடன் முத்தமிடும் போது அது 45 விநாடிகள் மட்டுமே நீடிக்கிறது. அப்போது 34 சிறிய தசைகள் துடித்து உணர்வுகளை மூளைக்கு அனுப்புகின்றன.

முத்தமிடும் போது 9 மி.கி தண்ணீரும், 7 கிராம் கொழுப்பும், ஒரு கிராம் உயிர்ப் பொருள் இரசாயனப் பரிமாற்றமும் நிகழ்கிறது.

ஆண்கள் முத்தமிடும் போது அவர்களுடைய இதயத் துடிப்பு 72இலிருந்து 110 ஆக உயருகிறது. பெண்களுக்கு 84 இலிருந்து 108 ஆக உயருகிறது. பெண்கள் தான் முத்தமிடுவதால் அதிக இன்பமும், சந்தோஷமும் அடைகின்றனர்.

ஜப்பான் நாட்டைச் சேர்ந்த டாக்டர் டோமோ சபுரோ, 'ரத்த ஓட்டத்தை முத்தம் அதிகரிக்கிறது. இதனால், இரத்தம் தூய்மையாகி உடலுக்குச் சுறுசுறுப்பைத் தருகிறது. நோய் இல்லாத நீண்ட வாழ்வு இதனால் தொடரும். கண்கள் ஒளி பொருந்தியதாக இருப்பதோடு, முகப் பொலிவும் இதனால் கூடுகின்றது. முத்தமிடும் போது சுரக்கிற உமிழ்நீரில் ஏராளமான ஹார்மோன்கள் வெளிப்பட்டு, மற்றவருடைய ரத்த ஓட்டத்தில் கலந்து மனிதர்கள் மூப்படைவதைத் தடுக்கிறது...' எனக் கூறுகின்றார்.

தாம்பத்தியத்தில் முத்தத்துக்கு முன்னுரிமை கொடுக்கும் தம்பதியினரிடம் பல் மற்றும் ஈறு தொடர்பான நோய்கள் குறைவாக இருப்பதாகவும் கண்டறிந்திருக்கின்றனர். இதற்குக் காரணம், அப்போது உமிழ்நீர் அதிகம் சுரந்து வாயைச் சுத்தப்படுத்துவதுதான்.

உமிழ்நீர் அதிகம் சுரப்பதால், அவர்களுக்கு ஜீரணக் கோளாறும் இருக்காது. சிரிக்கும் போது உடல் தசைகள் நெகிழ்கிறது, ரத்த ஓட்டத்தில் உத்வேகம் பிறக்கிறது, நோய் எதிர்ப்புச் சக்தி அதிகரிக்கிறது. இதைவிட உடலில் பல நல்ல வேதியியல் மாற்றங்களை உருவாக்கி இதயத் துடிப்பை அதிகரிக்கிறது முத்தம்.


குழந்தைக்குத் தாய் கொடுப்பது, காதலனுக்குக் காதலி கொடுப்பது, கணவன் மனைவிக்குக் கொடுப்பது - இந்த முத்தங்களில்



காதல் ஜோடிகள் கொடுத்துக் கொள்ளும் முத்தத்தின் போதுதான் அபரிமிதமான மின்சார சக்தி உடலுக்குக் கிடைக்கிறது.

கணவனும் - மனைவியும் முத்தமிடும் போது 10 முதல் 25 தசைகள் செயல்பட்டு முகம் நெகிழ்வு பெறுகிறதாம். அதுவே காதலர்கள் என்றால், 15 முதல் 35 தசைகள் நெகிழ்கிறதாம்.

அமெரிக்காவில் சியாட்டில் நகரில், முத்தமிடுதல் பற்றிப் பயிற்சி கொடுக்கவே ஒரு கல்லூரி உள்ளது. இங்கு புதுமணத் தம்பதிகளுக்கு 'முத்தமிடுதல்' பற்றிப் பயிற்சி தருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.




***பிரியமுடன் முரசு வாசகர்களுக்கு -***

எமது ஆசிரியர் அற்புதன் அவர்கள், தமிழ்ப் பத்திரிகையின் வரலாற்றில் ஏற்படுத்திய தாக்கம், மாற்றம் என்பன வாசகர்களுக்குத் தித்திப்பாகவும், சுவாரஸ்யமாகவும் இருந்தன. வெறுமனே நேற்றைய நிகழ்வுகளையும், அரசியல் பிரசாரங்களையும், அறிக்கைகளையும், பக்கம் பக்கமாகக் கட்டுரைகளையும் மட்டுமே பத்திரிகைகள் தாங்கி வருவதை துணிச்சலோடு மாற்றியமைத்தமையானது அற்புதன் வாசகர்களுக்காகச் செய்த மிகத் துணிந்த செயற்பாடு எனலாம். வரலாற்றுப் பதிவுகளையும், வரலாற்றில் தங்களைப் பதிவு செய்துவிட்டுப் போனவர்களையும், நிகழ்கால வாசகனுக்குப் புரியும் படியாக சுவை மாறாமல் எழுதிப் படைப்பதில் அற்புதன் கையாண்ட சூட்சுமமும், சுவை சொட்டும் சொல்லாடலும் இன்னும் அற்புதனின் பெருமைக்குச் சான்று பகர்கின்றன என்றால் அது மிகையாகாது. குறிப்பிடும்படியான தொடர்களில், இடியமீன், ஹிட்லர், மண்டேலா, பூலான் தேவி என்பவை அற்புதனின் கைவண்ணத்திற்குள் அழகு சேர்க்கப்பட்டு வாசகர்களின் வரவேற்பைப் பெற்ற தொடர்கள் ஆகும்.

அதன் தொடர்ச்சியாக இப்போது நம்முடன் சமகாலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் தோழர் காஸ்ட்ரோ, இதிகாச நாயகன் மண்டேலா ஆகிய இருவரும் நமக்குப் பெருமை சேர்ப்பவர்கள். இவர்களில் தோழர் காஸ்ட்ரோவின் வரலாறை வாசகர்களுக்கு சுவை பிசைந்து வழங்க விரும்பியதன் வெளிப்பாடாகவே அற்புதனின் தடங்களுக்குப் பின்னால் இந்தப் புதிய தொடர் ஆரம்பிக்கப்படுகிறது. சுவையாகவும், உணர்ச்சிகள் மங்கிப் போகாமலும், இந்தத் தொடரை வாசகர்கள் வாராவாரம் சுவைக்கப் போகிறீர்கள். இந்தத் தொடரானது, நெடுநாட்களாக முரசு வாசகர்களிடமிருந்து வரலாற்றுத் தொடர் ஒன்றுக்காக விடுக்கப்பட்ட கோரிக்கைகளை நிச்சயம் நிறைவேற்றும் என்ற நம்பிக்கை உண்டு.

உலகையே மிரட்டிக் கொண்டிருக்கும் ஏகாதிபத்தியத்திற்கு எதிராகச் சவால் விட்டு வாழ்ந்து கொண்டிருக்கும் பிடல் காஸ்ட்ரோ, அமெரிக்காவின் சதிமுயற்சிகளை முறியடித்த பெரும் தலைவராவார்.

நான்கு ஆண்டுகளுக்கு ஒரு தடவை அமெரிக்காவில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்று புதிய ஜனாதிபதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டாலும், அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதிகளான ஆபிரகாம் லிங்கன், ஜார்ஜ் வொஷிங்டன் ஆகியோரைத் தவிர பின்னர் வந்த எந்த ஜனாதிபதியும் உலக மக்களின் மனதை ஈர்த்தவர்களாக இருக்கவில்லை.

ஆனால், தற்போதைய அரசியல் அரங்கில் சொந்த மக்களின் விடுதலைக்காகவும், அந்த மக்களின் சுபீட்சத்துக்காகவும் போராடியவர்களின் பட்டியலில் நெல்சன் மண்டேலா, காலமான யசீர் அரபாத், தோழர் காஸ்ட்ரோ ஆகியோர் சொந்த மக்களிடத்தில் மட்டுமல்லாது, உலக மக்கள் மனங்களிலும் நன்மதிப்பைப் பெற்றவர்கள்.


மர்ஹூம் யாசீர் அரபாத்தின் வரலாற்றுப் பதிவானது, யூத - இஸ்ரேல் - இஸ்லாமிய, பாலஸ்தீன - இஸ்ரேலிய சர்ச்சை கிறிஸ்துவிற்கு முன் தோன்றி, கிறிஸ்துவிற்குப் பின் 2006 ஆம் ஆண்டிலும் தொடர்ந்துகொண்டிருக்கிறது. பாலஸ்தீன மண்ணை ஆக்கிரமித்து இஸ்ரேல் தனி நாடாக மிளிர்வதற்கு, பாலஸ்தீனத்தை தனி நாடாக, சுதந்திரமாகத் திகழ விடாமலும், அந்த மக்களின் சுபீட்சமான வாழ்விற்கு இடையூறாகவும், தேவையற்ற தலையீட்டைக் கொண்டிருக்கும் இஸ்ரேலுக்கு முதுகு தட்டி ஆதரவு வழங்குவது அமெரிக்காதான். உலக ஏகாதிபத்தியத்தின் ஆதரவுடன் இஸ்ரேலின் காட்டு மிராண்டித்தனம் தொடர்வதால், பாலஸ்தீனத்தில் கொலையும், இரத்தமுமாக அவல வாழ்வு தொடர்கிறது. இதற்கு எதிராகப் போராடிய பெரும் விடுதலைப் போராளி யசீர் அரபாத் 2004 ஆண்டு இயற்கை மரணமடைந்தார். குண்டுகளுக்குத் தப்பி வாழ்வதே போராட்டம் நிறைந்த வாழ்வில் பெரும் சாதனை என்பதை தனது மரணத்தின் மூலம் நிரூபித்தவர். இதேபோல், கறுப்பு இனத்தவர்கள் என்பதால் இரண்டாந்தரப்

தருவது
எம். கேஷிகன்.

பிரஜைகளாகக் கூட கணக்கில் கொள்ளப்படாத இனமாகப் பார்க்கப்பட்ட கொடூரமும், நிறவெறியால் வேட்டையாடப்பட்டும், ஒட்டச் சுரண்டப்பட்டும் வாழ்ந்தவர்கள் ஆபிரிக்கர்கள். ஆபிரிக்கக் கண்டத்தை இருண்ட கண்டம் என்றும் வர்ணித்தனர். இவ்வளவையும் தாங்கிக் கொண்டு வெள்ளை இனத்துக்கு எதிராக என்றில்லாமல், கறுப்பினத்தவர்களின் விடுதலைக்காகப் போராடியவர் நெல்சன் மண்டேலா. இந்தப் போராட்டத்தை அடக்கும் எண்ணத்தோடு மண்டேலாவை இருபத்தேழு வருடங்கள் இருட்டுச் சிறையிலடைத்தார் அமெரிக்காவின் வெள்ளையினத் தலைவரான ஜனாதிபதி போத்தா. கறுப்பினத்தவருக்கு எதிரான போராட்டத்தை முதன்மை வகித்து நடத்தியவர்களில் ஜனாதிபதி போத்தாவே பிரதானமானவராக இருந்தார். அவரும் 2005ஆம் ஆண்டு ஆபிரிக்காவிலேயே மரணமானார். இறக்கும் வரை அவரிடம் நிற வெறி உணர்வு இருந்ததாகவும் கூறப்பட்டது. இருபத்தேழு வருடங்களுக்குப் பிறகு சிறை மீண்டு, தன் இனத்தின் விடுதலைக்காகவும், சுய உரிமைக்காகவும் மீண்டும் போராடிய மண்டேலா அதில் வெற்றியும் கண்டார். தென் ஆபிரிக்க மக்கள் மண்டேலாவையே தமது ஜனாதிபதியாகத் தெரிவு செய்தனர். ஆனால் பெருந்தன்மையோடு பதவியை இளைய தலைமுறையினரிடம் ஒப்படைத்துவிட்டு அவர்கள் ஆட்சி செய்யும் அழகை இரசித்துக் கொண்டு தன் மக்களோடு சாதாரண மனிதனாக வாழ்ந்து கொண்டிருக்கிறார். அவரை இதிகாச நாயகனாக வரலாறு நமக்குக் காட்டி நிற்கிறது.

அமெரிக்காவின் பின்புலத்தோடும், ஆசீர்வாதத்தோடும் கியூபா நாட்டை அடிமை விலங்கு பூட்டிய நாடாக ஆட்சி செய்த அப்போதைய ஜனாதிபதி பெடிஸ்டாவை மிகச் சொற்பமான தோழர்களுடன் சென்று மடக்கி, கியூபாவின் இன்றைய கௌரவ நிலைக்கு வித்திட்டவர் தோழர் பிடல் காஸ்ட்ரோதான். காஸ்ட்ரோவைப் பற்றி எழுதுகின்றபோது அவரது போராட்டத்திற்குப் பெரும்

*இளமைப் பருவத்தில் பிடல் காஸ்ட்ரோ.*



பலமாக இருந்த சேகுவேராவைப் பற்றியும் குறிப்பிட வேண்டும். காஸ்ட்ரோவைப் பற்றி இனிப் பார்க்க இருக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் உன்னதம் மிக்கப் போராளி சேகுவேராவைப் பற்றியும் பார்ப்போம். காஸ்ட்ரோவின் வரலாறு வாசிப்பதற்கு மட்டுமல்ல வாழ்க்கையை வாழ்வதற்கும்!

(அசத்தல் அடுத்த வாரம்)

## பிரபாகரனும்...

04 ஆம் பக்கத் தொடர்ச்சி....

முகவரமைப்பான தமிழ்த் தேசிய கூட்டமைப்பும் கூட உள்ளக சுயாட்சியையே வலியுறுத்தி நிற்கின்றன. ஆனால் பிரபாகரன் மட்டும் அவ்வப்போது 'எங்கட தமிழ் மக்களுக்காகப்' போராடுவதாகக் கூறிக் கொண்டே, 'புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்' என்ற தாரக மந்திரத்தை ஆண்டாண்டு காலமாக உச்சரித்து வருகிறார். அதாவது தனித் தமிழ் நாட்டுக்கான போராட்டம் என்பதே அவரது வாதம்.

தமிழீழம் அல்லது தனிநாடு என்பது இன்றைய தேசிய, சர்வதேசச் சூழலில் சாத்தியப்படாதவொன்று. இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் சக்திமிக்க அயல் நாடாகத் திகழும் இந்தியா, தமிழீழத்துக்கு ஆதரவளிக்காதவரை, இந்தப் போராட்டம் வெற்றிபெறப் போவதில்லை. இந்திரா காந்தி காலத்திலிருந்து இன்று வரை இந்தியா, இலங்கையின் ஐக்கியம், பிரதேச ஒருமைப்பாடு, இறைமை ஆகியவை பேணப்பட வேண்டுமென்று வலியுறுத்திவருகிறது. எனவே அடைய முடியாத தமிழீழத்துக்காக ஆட்களைப் பலியெடுப்பது அநாகரீகமான செயல். அதுவும் கரும்புலிகளென்று கூறப்படும் தற்கொலையாளிகளை புலிகள் பயிற்றுவித்துப், பரிணமிக்கச் செய்யும் விதம் பயங்கரமானது. அறிவு புரியாத பத்துப் பதினைந்து வயதுகளில் சிறுவர்களைப் பிடித்துச் சென்று, மூளைச் சலவையும் பயிற்சியுமளித்து அவர்களைப் கரும்புலிகளாக மாற்றுகிறார்கள். வெளிச் சமூகத்தோடு தொடர்பு கொள்ளவோ கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளவோ இவர்கள் அனுமதிக்கப்படுவதில்லை. இதேபோன்றுதான் புலிகள் இயக்கத்தில் இணைந்து போராடும் ஏனையவர்களின் நிலையும், கரும்புலிகளை விட ஓரளவு சுதந்திரமும் சலுகையும் வழங்கப்பட்டாலும், உள்ளியக்க ஜனநாயகமென்பது அங்கு கிஞ்சித்தும் கிடையாது. புலிகள் இயக்கத்தில் சேரும் அனைவரும் பிரபாகரனுக்கு விசுவாசமாகச் சத்தியப்பிரமாணம் செய்து கொள்ள வேண்டுமென்பது பிரபாகரனின் தர்பாரில் இருக்கும் நிலையியற் கட்டளை. எனவே பிரபாகரன் நடத்துவது தமிழ் மக்களின் விடிவுக்கான போராட்டமா? அல்லது அழிவுக்கான போராட்டமா? என்பதே இங்கு உரை கல்லாகப் பார்க்கப்பட வேண்டும்.

கடந்த இரண்டரை தசாப்த காலத்துக்கு மேலான யுத்தத்தில் ஓர் இலட்சத்துக்கு மேற்பட்ட உயிர்கள் பலியெடுக்கப்பட்டிருக்கின்றன. இதில் யுத்தத்தில் சம்பந்தப்பட்ட அரச படைகளையும் புலிகளையும் விட உயிர்களைக் காவு கொடுத்த மக்களின் தொகையே அதிகம். இந்த மக்கள் தொகையிலும் கிட்டத்தட்ட கால்வாசிக்கும் அதிகமான தமிழ் மக்களைப் புலிகளே கொன்றிருக்கிறார்கள். மாற்றுக் கருத்துக் கொண்டவர்களை 'மண்டையில் போடுவது' புலிகளின் வீரப் போராட்டத்தின் ஓர் அம்சம். அரச படைகளால் கொல்லப்பட்ட தமிழர்களை விட, தமிழர்களின் ஏகப் பிரதிநிதிகளென்று தமக்குத் தாமே தம்பட்டமடித்துக் கொள்ளும் புலிகளால் கொல்லப்பட்ட தமிழர்களின் தொகை அதிகம்.

புதுக்குடியிருப்பு விமானத் தாக்குதலில் பலியான, காயமுற்ற பள்ளி மாணவிகளின் துயரம், வாகரையில் கொல்லப்பட்ட அப்பாவிப் பொதுமக்களின் கண்ணீர், யாழ். குடா மற்றும் வாகரை மக்கள் எதிர்நோக்கிய உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்களுக்கான தட்டுப்பாடு, ரவிராஜ் எம்.பி.யின் படுகொலை ஆகியவையே 2006ஆம் ஆண்டின் சாவீரர் தின உரையில் முக்கிய இடம் பிடிக்கப் போகிறது. வழமைபோல, "மகாவம்ச காலத்திலிருந்தே இருந்துவரும் சிங்களப் பேரினவாதத்துக்கு எதிராக தமிழ் மக்களையும் தமிழர் தேசத்தையும் விடுவிப்பதற்கான போராட்டத்தைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வோம்" என்று பிரபாகரன் கூறப்போகிறார். நான்கு வருடங்களுக்கு மேற்பட்ட யுத்த நிறுத்த காலத்தைப் பயன்படுத்தி, சமாதானப் பேச்சுவார்த்தையூடாக தமிழ் மக்களின் அவசர அன்றாடப் பிரச்சினைகளுக்கும் நீண்டகால அபிலாஷைகளுக்கும் புலிகள் இயக்கம் தீர்வுகளைக் கண்டிருக்கலாம்.

தாக்குதல்களை ஆரம்பித்தவர்கள் புலிகள். இதனால் பதில் தாக்குதலை நடத்தாதேயென்று படையினரைப் பார்த்து யாரும் கூறமுடியாது. யாழ்ப்பாணத்தில் படையினர் மீதான தாக்குதல்களை புலிகள் கடந்த வருடம் ஆரம்பித்து, தொடர்ச்சியாக அதிகரித்துச் சென்ற போது யாழ்.கட்டளையிடும் இராணுவத் தளபதி கூறிய வரிகள் ஞாபகத்துக்கு வருகின்றன.

"யுத்தநிறுத்த காலத்தில் எமது கைகள் மட்டும் தான் கட்டப்பட்டிருக்கின்றன. கண்கள் கட்டப்படவில்லை" என்ற வரியின் அர்த்தத்தைப் புரிந்து கொள்ள வேண்டிய தேவை இருக்கிறது. யுத்தம் என்பது இருதரப்புகள் சம்பந்தப்பட்டது. ஒரு தரப்பு தாக்க, மறு தரப்பு கைகட்டி நிற்காது. யுத்தத்தின் நேர்விளைவுதான் சகல அவலங்களும் என்பதை இனியாவது புலிகள் புரிந்து கொள்ள வேண்டும். படையினரைப் போதி மரத்துப் புத்தரென்று வர்ணிக்க நாம் தயாரில்லை.

வவுனியா விவசாயக் கல்லூரி வளாகத்துக்கு முன்பாகப் படையினரைக் குறிவைத்து கிளேமோர் குண்டுத் தாக்குதலை நடத்தி விட்டு, புலிகள் தப்பியோட, படையினர் நடத்திய பதில் தாக்குதலின்போது அப்பாவித் தமிழ் மாணவர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். மக்களைக் கவசமாகப் பயன்படுத்தி, எதிரிகளை அழிக்கும் புலிகளின் யுக்தி, தமிழ் மக்களுக்கே தீங்கு விளைவிக்கும் என்பதை புலிகள் உணர்ந்து கொள்ள வேண்டும். மக்களைக் கேடயமாகப் பயன்படுத்தி படையினர் மீது புலிகள் தாக்குதல் நடத்தக் கூடாதென்று தமிழ் மக்கள் ஏகோபித்துக் குரலெழுப்ப வேண்டும். ஒரே ட்ரக்கில் தம்மோடு பயணம் செய்த ஐந்து சிப்பாய்கள் உடல் சிதறி மடிந்திருப்பதைக் காணும் எந்த ஒரு சிப்பாயும் கண்மூடித்தனமாக சுடவே செய்வான். புலிகளையும் அப்பாவிப் பொதுமக்களையும் வேறுபடுத்திப் பார்க்க முடியாத நிலையிலேயே இவ்வாறான துரதிர்ஷ்டங்கள் நிகழ்கின்றன. மனித உரிமை மீறல்கள், வாழ்வுரிமைப் பறிப்பு, மக்கள் அகதிகளாக இடம் பெயரும் கோரம், அத்தியாவசியப் பொருட்களுக்கான தட்டுப்பாடு ஆகியவை எல்லாம் யுத்தத்தின் நேர்விளைவுகளும் பக்க விளைவுகளும்தான். இதனால் பிரபாகரனின் 'சாவீரர்' தின உரையிலுள்ள மக்களைக் காவு கொள்ளும் அம்சங்கள் எப்போது சாகடிக்கப்படுகின்றனவோ, அப்போதுதான் தமிழ் மக்களின் அநாவசியச் சாவுகளுக்குச் சாவு வந்து சேரும். புலிகளுக்கு இதனைப் புரிந்து கொள்ளும் பக்குவம் இல்லை. தமிழ் மக்கள் இதனைப் புரிந்து கொள்ள வேண்டும்.

# இலங்கையில் போர்நிறுத்தக் கண்காணிப்பு

**22** பெப்ரவரி 2002ஆம் ஆண்டு இலங்கை அரசுக்கும், புலிகளுக்குமிடையிலான போர்நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திட்டதன் பின், புலிகளால் நிறைவேற்றப்பட்ட பழிவாங்கல்கள், மாற்றுக்கருத்துக் கொண்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளின் படுகொலைகள் உட்பட தமிழ் மக்கள் எனப் பலரும் கொலை செய்யப்பட்டு விட்டார்கள். இப்படியான அத்துமீறல்கள், மனித உரிமை மீறல்கள் இடம் பெறக் கூடாது என்பதற்காகவே போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு ஒன்றை நோர்வே அரசாங்கம் நியமித்திருந்தது ஏதோ உண்மைதான்.




ஆனால், இந்தப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் இலங்கையில் - அதிலும் வட - கிழக்கு மக்களுக்கெதிராகப் புலிகள் செய்து வந்த, செய்கின்ற அராஜகத்திற்கு எதிராக என்ன நடவடிக்கை எடுத்துள்ளனர்? என்பதெல்லாம் ராசா வீட்டுக் கோழி முட்டைக் கதைதான் என்பது இலங்கை வாழ் மக்களுக்கு மட்டுமல்லாது வெளி உலகிற்கும் தெரியாததல்ல.

இலங்கையைப் பொறுத்தமட்டில் தமிழ் மக்களுக்கு அரசியல் ரீதியான உரிமைப் பிரச்சினை இருக்கின்றது என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. ஆயினும் ஏற்கனவே அரசியல் ரீதியாகப் பேச்சுவார்த்தை மூலம் தமிழ் மக்களின் உரிமைப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான வழிமுறைகளை ஏற்படுத்தக்கூடிய எத்தனையோ சந்தர்ப்பங்கள் கைகூடியிருந்த காலமெல்லாம் புலிகளின் கபட நோக்கங்களால் கைநழுவிப்போனதைச் சர்வதேசமும் அறியும். இறுதியாக, 2002ஆம் ஆண்டு நோர்வேயின் அனுசரணையோடு கொண்டுவரப்பட்ட போர் நிறுத்த உடன்படிக்கையும், புலிகளின் நீசத்தனமான தந்திர உபாயங்களினால், வட கிழக்கில் மட்டுமல்ல, இலங்கை முழுவதிலும் படுகொலைகள் சர்வசாதாரண நிகழ்வாகிவிட்டன.

இந்த நிலையில் புலிகளின் அச்சுறுத்தல் காரணமாக ஊடகங்கள் கூட உண்மையான செய்திகளை வெளியிட முடியாமல் திணறிக் கொண்டிருக்கின்றன.

சமாதான உடன்படிக்கைக்குப் பின்பு வன்செயலை ஆரம்பித்தவர்கள் யார்? என்பதைச் சிந்திக்காதவர்கள் அறிக்கை விட மட்டும் கற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்பதுதான் கவலைக்குரிய விடயம். புலிகள், படையினரைச் சீண்டி விட்டு அதில் அரசியல் நடத்திப் பார்ப்பதை நோர்வேயின் அனுசரணையாளர்கள் இதுவரையில் தெரிந்தும் தெரியாதவர்கள் போல் நாடகமாடுகிறார்களா? என்பதுதான் இங்கே சிந்தனையாளர்களின் மனங்களில் எழுந்துள்ள கேள்வி.

இந்தக் கேள்விகளுக்கு சரியான பதில் சொல்ல அவர்கள் தயாரா? 16.11.2006 அன்று தமிழ் அச்சு ஊடகமொன்றில் வெளியான செய்தியில், 'ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர், மற்றும் இனமோதல்கள் தொடர்பிலான சிறப்புப் பிரதிநிதி அலன் றொக் வெளியிட்ட கருத்தைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவும் உறுதி செய்துள்ளது" என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

இது விடயத்தில் அரச படையினர் தமிழ்ச் சிறார்களைக் கடத்தும் சம்பவத்தில் நேரடியாக ஈடுபட்டுள்ளார்கள் என்று கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் ஹெலன் ஒல்ப்ஸ் டொட்ரியர் தெரிவித்திருப்பதை அப்படியே அலன் றொக் ஏற்றுக்கொண்டுவிட்டார் என்று கருத வேண்டியுள்ளது.

இணைத் தலைமை நாடுகள், நோர்வே அரசின் ஊடாக தமது செயற்பாடுகளை மேற்கொள்வதன் மூலம் இலங்கை இனப்பிரச்சினைக்கு ஓர் நல்ல தீர்வைக் காணும் நோக்கோடு செயல்பட்டபோதிலும், நோர்வேயின் போர்நிறுத்தக் கண்காணிப்புக்

**-தாசன்**

குழுவைப் பொறுத்தமட்டில் புலிகளின் அடாவடித்தனங்களையெல்லாம் புறந்தள்ளிவிட்டது போல் தெரிகிறது.

இதில் வேடிக்கை என்னவென்றால் பொதுவாக எவரேனும் தொடர்ந்து ஒருவரைத் துன்பப்படுத்துமிடத்து, குறிப்பிட்ட நபர் பொறுமையிழந்து தற்காப்புக்கேனும் ஒரு செயலைச் செய்ய வரும் என்பதை முன்கூட்டியே அறிந்து வைத்துக்கொண்டு, அவர் அதைச் செய்யும்வரை காலத்தைக் கடத்தி, அவர் நடவடிக்கையில் இறங்கும்போது அவரைத் தொடர்ந்து குற்றமிழைத்தவரோடு ஒப்பிட்டுப் பழிதீர்ப்பது. இந்த முறையைத்தான் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு அரச, புலிகள் விடயத்தில் கையாண்டுள்ளது என்பது கண்கூடு.

இந்த நிலை நீடிக்குமேயானால் இலங்கையில் மென்மேலும் படுகொலைக் கலாசாரத்திற்கு தூபமிடும் செயலைச் செய்த பழி நோர்வேயின் கண்காணிப்புக் குழுவையே சாரும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

# பாடம் புகட்டிய வியட்நாம் 18

**தங்கள்** இராணுவத்தினரை உள்வாங்கிக் கொண்ட ரிக் தனது திட்டத்தை செயற்படுத்த நாள் பார்த்திருந்தான். இதை சற்றும் வியட்கொங் எதிர்பார்க்கவில்லை. ஆயினும் வியட்கொங் உளவாளிகள் மூலம் தாங்கள் தாக்கப்படப்போகிறோம் என்பதை வியட்கொங் இராணுவத் தளபதி அறிந்து கொண்டார். அதற்காக அவர் எந்த முஸ்தீபுகளையும் முன்னெச்சரிக்கைக்காக எடுக்கவில்லை. அவ்விடயத்தில் அவர் ஏன் இவ்வாறு செயற்பட்டார் என்று இன்று கூட யாருக்கும் தெரியவில்லை. தங்கள் இராணுவத்திரை தயார் நிலையில் அவர் வைத்திருந்தார் என்றாலும் போர் ஒன்றினை சமாளிக்கும் அளவில் தயார்படுத்தியிருக்கவில்லை என்பது இன்றும் குற்றச் சாட்டாகவே இருக்கிறது. வியட்நாமிய எல்லையில் வியட்கொங் இராணுவத்தினரும் பாதுகாப்புப் பணிகளில் ஈடுபட்டிருந்தார்கள். எல்லை தாண்டி சில சமயம் வியட்கொங் இராணுவத்தினர் சென்று வருவது வழமையாகத்தான் இருந்தது. இந்த எல்லை தாண்டும் செயற்பாடு அவர்களின் அன்றாட தேவைகளைப் பூர்த்தி செய்வதோடு மட்டுமல்லாது உளவு பார்க்கும் வேலைக்குமாகவும் இருந்தது. உளவு பார்ப்பதற்காகச் சென்றுவரும் இவர்கள்



சில சமயங்களில் வசமாக மாட்டிக் கொண்டு ஓடி வருவது வழமையாகவே இருந்தது. தன் இராணுவத்தினரை முழு உசார் நிலையில் வைத்திருந்த ரிக் தன் படை நகர்வை நடத்தத் திட்டமிட்டான். படை நகர்வானது முதலில் எல்லையிலிருந்து ஆரம்பிப்பதாகவே இருந்தது. படையினர் எல்லைகளில் குவிக்கப்பட்டனர். அத்துடன் அவர்களின் இராணுவத் தளபாடங்களும் வந்து சேர்ந்தன. ஆனால் இராணுவக் கவச வாகனங்களோ அவர்களின் வாகனங்களோ அங்கு நிறுத்தி வைக்கப்பட்டவில்லை. போர் வாகனங்கள் அங்கு நிறுத்தப்பட்டால் போர் முஸ்தீபுகளில் ஈடுபடப்போவதாக அனைவரும் அறிந்து விடுவார்கள் என்று, கவச வாகனங்கள் உடனடியாக இடத்திற்கு விரையும் வகையில் ஒழுங்கு செய்து வைக்கப் பட்டிருந்தது. எல்லைப் புற மக்களும் அமெரிக்க இராணுவத்தினர் ஏதோ புதிதாக இராணுவப் பாசறை அமைக்கிறார்கள் என்று சும்மா இருந்து விட்டார்கள். அதனால் என்னவோ வியட்கொங் இராணுவத்தினருக்கு தகவல் போய்ச் சேரவில்லை.




போரை எப்போது தொடங்குவது, எப்படித் தொடங்குவது என்று ரிக் தகவல் அனுப்புவதாக சொல்லியிருந்தான் அதனால் போரினை ஆரம்பிக்காமல் அனைத்து இராணுவத்தினரும் அமைதியைக் கடைப்பிடித்திருந்தார்கள். அதுவும் நல்லதாகவே அமைந்தது.

காலை 11 மணியளவில் ரிக்கிடம் இருந்து தகவல் வந்தது. போரினை ஆரம்பிக்க முடிவு செய்து உள்ளோம்; அனைத்து இராணுவ சிப்பாய்களும் தயார் நிலையில் இருக்கவும் எனத் தகவல் பறந்தது. அதையடுத்து அனைத்து இராணுவச் சிப்பாய்களும் தங்கள் முழு சீருடைகளுடன் அவர்களுக்காக ஒதுக்கப்பட்ட ஆயுதங்களைத் தூக்கிக் கொண்டு ஆயத்தமாகினர். கவச வாகனங்களும் வந்து சேர்ந்தன. அத்துடன் ஆகாய மார்க்கமாக நிலைகளை உளவு பார்க்கும் பணி தொடங்கியது. கவச வாகனங்களைக் கண்டவுடன் மக்கள் புரிந்து கொண்டார்கள். போரை ஆரம்பிக்கப் போகிறார்கள் என்று தகவல் உடனடியாக வியட்கொங் இராணுவத் தளபதிக்கு சென்றது. அவர்கள் தங்கள் நிலைகளை பலப்படுத்திக் கொண்டிருந்தார்கள். அதனை ஆகாய மார்க்கமாக உளவு பார்த்து தகவல் வழங்கிக் கொண்டிருந்தார்கள் அமெரிக்க விமானப்படையினர். எல்லை தாண்டிச் சென்றிருந்த தங்கள் இராணுவத்தினருக்கு உடனடியாக நிலைக்குத் திரும்பும்படி வியட்கொங் இராணுவத் தளபதி செய்தியனுப்பியிருந்தார். அவர்கள் தங்கள் வேலைகளைப் பாதியில் விட்டு தங்கள் பணிக்கு திரும்பிக் கொண்டிருக்கையில் எல்லையில் அமெரிக்கப் படையினர் நிற்பதைக் கண்டார்கள்.

அதே நேரம் இராணுவத் தொலைபேசியில் ரிக் தாக்குதலைத் தொடங்க கட்டளையிட்டான். அமெரிக்க துப்பாக்கிகள் வெடித்தன. அதே நேரம் கவச வாகனங்கள் தங்கள் பங்கிற்கு




குண்டுகளைக் கக்கத் தொடங்ன. அமெரிக்கப் படையினர் முன் நோக்கி நகரத் தொடங்கினர் முன்னேற்பாடுகள் செய்யாததால் வியட்கொங் இராணுவத்தினர் பலர் இறந்தனர். சரியான முதலுதவி வசதி கூட செய்து கொடுக்க முடியாமல் மற்றைய இராணுவச் சிப்பாய்களும் செய்வதறியாது திகைத்து நின்றனர். எல்லை தாண்டி வரவிருந்த அனைத்து வியட்கொங் இராணுவச் சிப்பாய்களும் கொல்லப்பட்டனர். கிட்டத்தட்ட 100 பேர் வரையில் கொல்லப்பட்டிருக்கலாம் என்று தரவுகள் தெரிவித்தன. ஆனால் அதை விடக் கூடத்தான் இருக்கும் என்று வியட்கொங் இராணுவத்தினர் எண்ணியிருந்தனர். சுமார் இரண்டு மணித்தியாலங்களில் வட வியட்நாமின் உட்புறத்தை நோக்கி அமெரிக்க இராணுவம் ஊடுருவியிருந்தது. அமெரிக்க இராணுவத்தினர் அந்தப் பகுதிகளில் நடமாடியிருந்ததால் அவர்களுக்கு அப்பகுதி இலகுவாகவே இருந்தது. ஆயினும் உடனடியாக முன்னேற முடியாமல் திணறியது உண்மைதான்.

தங்கள் பக்கத்தில் உயிரிழப்புகள் அதிகரித்துக் கொண்டு செல்வதை அறிந்த வியட்கொங் இராணுவத் தளபதி, உடடினயாக தானும் ஆயுதம் ஏந்தினார்.

*(தொடரும்)*






# சிறந்த குரு!

கலக லென்ற மொழியும், -தெய்வக்
களிது லங்கு நகையும்,
இலகு செல்வ வடிவும் -கண்டுன்
இன்பம் வேண்டு கின்றேன்.

- சுப்பிரமணிய பாரதியார்



**துவாரகப்** பட்டணத்தின் மன்னர் விசுவந்த், கல்வியறிவில் மிகச் சிறந்தவர். ஒரு ராஜ்ஜியம் சிறப்பாக விளங்க, அதன் குடிமக்கள் கல்வி கேள்விகளில் சிறந்தவர்களாக இருக்க வேண்டும் என விரும்பினார். எனவே, ஆங்காங்கே கல்விச் சாலைகளைத் திறந்து சிறந்த ஆசிரியர்களை அமர்த்தினார். இவர்களுக்கு தலைமைப் பயிற்சி கொடுக்க, குரு ஒருவரைத் தேர்ந்தெடுக்க ஒற்றர்களை நாடெங்கும் அனுப்பி வைத்தார். அப்படித் தேடிப் பார்த்ததில் மாது, சேது என்ற இரண்டு திறமை வாய்ந்த ஆசிரியர்களைப் பற்றி அறிந்தார். அவர்களைப் பள்ளியில் நியமிப்பது குறித்து மந்திரியிடம் ஆலோசனை கேட்டார்.

"அரசே, பத்துப் பேரை மாதுவிடமும், இன்னொரு பத்துப் பேரை சேதுவிடமும் கல்வி பயில அனுப்புவோம். ஆறு மாத காலத்தில் இந்த மாணவர்களுக்கு அவர்கள் இருவரும் எவ்வாறு கற்பிக்கிறார்கள் என்ற கவனித்துப் பார்த்து பிறகு இருவரில் ஒருவரைத் தேர்வு செய்யலாம்'' என்றார்.

மாதுவிடம் சென்ற பத்து மாணவர்களில் மூன்று பேர் ஆறு மாத காலத்தில் கல்வியில் சிறந்து விளங்கினர். சேதுவிடம் சென்றவர்களில் ஏழு பேர் ஆறு மாத காலத்தில் சிறப்பாகப் பயின்றனர். இரண்டு ஆசிரியர்களும் அரசரைச் சந்திக்க தலைநகருக்கு வரவழைக்கப்பட்டனர். முதலில் சேதுவிடம் "ஏழு மாணவர்கள் தங்களிடத்தில் திறமையாகப் பயின்றனர். மற்ற மூவரைப் பற்றித் தங்கள் கருத்து என்ன?'' என்று மன்னர் கேட்டார்.

'அந்த மூன்று மாணவர்கள்

**பாப்பா முரசு சிறுகதை**

பிறவியிலிருந்தே அறிவற்றவர்கள். அவர்களை அறிவாளிகளாக மாற்ற முடியாது'' என்று சொல்லிவிட்டார். பிறகு மாதுவிடம், "சிறப்பாகத் தேர்ச்சி பெறாத தங்கள் ஏழு மாணவர்களைப் பற்றி தங்கள் கருத்து என்ன?'' என்றார் மன்னர்.

"என்னிடம் நீங்கள் அனுப்பிய பத்துப் பேரில், இயல்பாகவே மூவர் அறிவாளிகள். ஆகவே, எவ்வித சிரமுமின்றி நன்றாகப் பயின்றனர். மற்ற ஏழு பேரும் அவ்வளவு அறிவாளிகள் இல்லை. அவர்களை ஆறு மாதத்தில் சிறந்த மாணவர்களாக ஆக்க என்னால் இயலவில்லை. ஆனால் நீங்கள் இன்னும் சில மாதங்கள் அனுமதித்தால், அவர்களையும் அறிவாளிகள் ஆக்க என்னால் முடியும்'' என்றார்.

"அரசே, மாதுவே நமது பள்ளியில் நியமிக்கத் தகுதியானவர்,'' என்றார் அமைச்சர். "தன்னிடம் பயின்ற பத்து மாணவர்களில் ஏழு பேரை நன்கு தேர்ச்சி பெறச் செய்த சேதுவை விடுத்து, மூவரை மட்டுமே தேர்ச்சி பெறச் செய்த மாதுவை நீங்கள் ஏன் தேர்வு செய்தீர்கள்?'' என்று மன்னர் கேட்டார்.

"அரசே, மிகச் சாதாரண ரகத்தைச் சேர்ந்த இருபது மாணவர்களிலிருந்து பத்துப் பேரைத் தேர்ச்சி பெறச் செய்த இருவருமே திறமை மிக்கவர்கள்தான். ஆனால், பத்து மாணவர்களில் யாரிடம் பயின்று அதிகம் பேர் சிறந்த அறிவாளிகள் ஆனார்கள் என்பதை வைத்து, ஆசிரியரின் திறமையை மதிப்பிட முடியாது. சேது தன் மாணவர்களில் மூவரை இயல்பாகவே அறிவற்றவர்கள் என்றும் அவர்களால் தேர்ச்சி பெறவே முடியாது என்றும் திட்டவட்டமாகக் கூறினார். இப்படி ஒரேயடியாக தன் மாணவர்களுக்குப் படிப்பே வராது என்று ஓர் ஆசிரியர் கூறுவது சரியில்லை'' என்றார்.

"அரசே, மாதுவோ இன்னும் சிறிது அவகாசம் கிடைத்தால் தன் எஞ்சியுள்ள ஏழு மாணாக்கர்களையும் அறிவாளிகள் ஆக்கிவிடுவேன் என்று அவர் சொன்னது, அவரது திறமையையும், தன் பயிற்றுவிக்கும் கலையில் உள்ள தன்னம்பிக்கையையும் காட்டுகிறது. எனவே, மாது தான் இந்தப் பதவிக்குத் தகுதியானவர் என்பது என் கருத்து'' என்று முடித்தார் மந்திரி.

மந்திரி கூறியதை ஏற்றுக்கொண்ட மன்னர் மாதுவை தனது பள்ளிக்குத் தலைமை குருவாகப் பணி நியமனம் செய்தார்.

# ஆத்திசூடி

## தொன்மை மறவேல்

நீ மூதாதையர் கட்டிக்காத்த நற்பண்புகளை எக்காரணம் கொண்டும் மறவாதே.

எஸ். நிரஞ்சலா, கண்டி. -ஔவையார்

# கண்டுபிடியுங்கள்!




அருகில் உள்ள இரண்டு படங்களும் ஒரே மாதிரி தோன்றினாலும் இரண்டுக்கும் இடையே குறைந்தது ஏழு வித்தியாசங்கள் உள்ளன. அவற்றைக் கண்டுபிடித்து கீழே உள்ள விடைகளுடன் ஒப்பிட்டுச் சரிபார்த்துக் கொள்ளுங்கள்.

விடைகள்
1. ஜன்னல், 2. போஸ்டர், 3. தெருவிளக்கு, 4. மரம், 5. தொப்பி, 6. காசு, 7. யானை வால்.

# அதிசய உலகம்

## திருட்டு நண்டு




நிலத்தில் வாழும் நண்டுகளில் மிகப் பெரியது தேங்காய் நண்டு. இது 5 கிலோ எடை வரை வளரும். இது ஒரே கடியில் விளக்குமாற்றை இரண்டு துண்டுகளாக்கிவிடும். அந்த அளவிற்கு அதன் தாடைகள் வலுவானவை.

தென்னை மரத்தில் விறுவிறுவென்று ஏறும் தேங்காய் நண்டுகள், இளநீர்க் காய்களைத் துளைத்து அதில் உள்ள சதைப் பற்றான பகுதியை உறிஞ்சித் தின்று விடுகின்றன. இதனால் தான் இந்த நண்டுக்கு திருட்டு நண்டு எனப் பெயர் வந்தது.


தென்னை மரம் இருக்கும் பகுதிகளில் எல்லாம் இந்த நண்டும் இருக்கும். ஆனால் நாட்டுக்கு நாடு இதன் உருவம்தான் வேறுபடுகிறது. ஒரு நண்டின் நீளம் அதிக பட்சமாக ஒரு அடி வரை இருக்கிறது. இதன் ஒவ்வொரு காலும் 3 அடி நீளம் வளர்கின்றது. இதனால் 50 அடி உயர மரத்தை இது 10 முதல் 15 வினாடிகளுக்குள் ஏறிவிடுகிறது.

## பூனையும் கனவும்!



மனிதர்களைப் போல் பூனைகளும் கனவு காணுகின்றன. தூங்கும்போது 20 நிமிடத்திற்கு ஒரு முறை பூனை கனவு காண்பதாக அறிவியலாளர்கள் கண்டறிந்திருக்கிறார்கள். பூனையின் மீசை துடிப்பதே அது கனவு காண்பதற்கு அடையாளமாகும்.

# சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்தினை இணைத்து வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றிற்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 28.11.2006

**வர்ணம் தீட்டும் போட்டி இல. 670**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
**கொழும்பு**

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 668

**பரிசுக்குரியவர்:**
ஏ. ஜே. பாத்திமா பஸ்னா, 61/1A/1, மகாபுத்கமுவ, கொடிகாவத்த.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| கா. பிரசாந்தி, 89, பாபாபதி இல்லம், 89, ரொசிட்டா வீடமைப்புத் திட்டம், கொட்டகலை. | ஆர். சதீஸ்குமார், இலுக்கப்பத்தன, பிம்பிள. |
| கமிலஸ் கிருத்திகன், இல. 9, அம்மன் கோவில் வீதி, பண்டாரிகுளம், வவுனியா. | ஜெ. டிவாரீசன், வெல்லம்பிட்டிய. |
| பி. சகாயகுமார், பினோயா, ரொஸ்ல்லா | பி. அப்துல்லா, அல். அஷ்ரப், மகா வித்தியாலயம், மாபொல |
| எம். ஜனார்த்திக்கா, இல. 31, ரொசிட்டா பஜார், கொட்டகலை. | எஸ். எப். ரஸ்மா, 3ஆம் குறுக்குத் தெரு, புத்தளம். |
| ரம்யா தயாபரன், 248/38, ஆட்டுப்பட்டித்தெரு, கொழும்பு -13. | டி. ஆர். ஹெவின்ஸ்ரன்ஸ், கிங்ஸ்ரன் சர்வதேசக் கல்லூரி, முகத்துவாரம், கொழும்பு -15. |

# சில விடுகதைகள்

1. அவனைப் பிடிக்கலாம் பார்க்க முடியாது - அவன் யார்?
2. தடுக்குப் போட்டேன் எடுக்க முடியலே - அது என்ன?
3. தண்ணீருக்குள் மூழ்கினாலும் மூச்சுத் திணறமாட்டான் - அவன் யார்?
4. பருத்தான் வெடித்தான் மானம் காத்தான் - அவன் யார்?
5. பலர் கண்பட படமெடுத்தவன் பார்த்திருக்க மாய்ந்தான் - அவன் யார்?
6. ஆடத் தெரிந்தவனுக்குப் பாட வராது, பாடத் தெரிந்தவனுக்கு ஆட வராது - அவர்கள் யார்?
7. வாயிருந்தும் பேச மாட்டான் இந்தக் காவலுக்குக் கெட்டிக்காரன் - அவன் யார்?
8. அவன் முதலில் சாப்பிட்டது தெரிந்தால் மற்றவர்கள் சாப்பிட மாட்டார்கள் - அவன் யார்?
9. மாட்டிக் கொண்டால் ஊசி போடும் டாக்டர் - அவர் யார்?
10. கண் கலங்க வைப்பான், குழம்பு ருசியில் மயங்க வைப்பான் - அவன் யார்?

விடைகள்
1. காற்று
2. கோலம்
3. மீன்
4. பருத்தி
5. பாம்பு
6. மயில் - குயில்
7. பூட்டு
8. ஈ
9. தேள்
10. வெங்காயம்.

# தகவல் பெட்டி

## பறக்கும் மனிதன்



பாரசூட் போன்ற ஆடைகளை அணிந்து கொண்டு மலைத்தொடர்களில் விமானத்திலிருந்து குதித்து, காற்றின் போக்குக்கேற்ப சாகஸம் புரியும் வீரதீர விளையாட்டொன்று. பாகிஸ்தானின் கராக்கோம் பகுதியிலுள்ள உயர்ந்த மலையுச்சிகளிலிருந்து குதித்து, கடந்த மே மாதம் சாதனையொன்றினை ஐரோப்பாவிலிருந்து சென்ற சர்வதேச விமானிகள் குழு ஒன்று நிகழ்த்தியது. இருமுனை நோக்கங்களுக்காக இது மேற்கொள்ளப்பட்டது. எங்கும் தங்கி நிற்காமல் உலகில் உயர்ந்த மலைப்பகுதிகளிலிருந்து கீழே குதிப்பது ஒன்று காற்று, சூரிய சக்தி ஆகிய இயற்கை அம்சங்களைப் பயன்படுத்தி மிக உயரத்திலிருந்து குதிப்பது மற்றொன்று. 8000 மீற்றர் உயரத்திலிருந்து குதித்து இந்த சாதனை நிகழ்த்தப்பட்டது.

## பழசின் மவுசு



பதினெட்டாம் நூற்றாண்டு கால வேலைப்பாடுகளுடன் கூடிய மகோகணி மரத்திலான அலுமாரியொன்று 5,56,000 டொலர்களுக்கு ஏலம் போயுள்ளது. அமெரிக்கத் தளபாட ஏல விற்பனையில் அதிக தொகையைத் தட்டிக் கொண்டது இந்த அலுமாரியாகும். அமெரிக்காவின் தளபாட மற்றும் அலங்கார வேலைப்பாட்டுடன் கூடிய விற்பனை நிலையமான 'ஸ்கின்னர்ஸ்' இந்த ஏல விற்பனையை நடத்தியது. மகோகணி மரத்திலான இந்த அலுமாரிக்கு மேற்பூச்சும் செய்யப்பட்டுள்ளது. இரு பகுதிகளைக் கொண்ட இந்த அலுமாரியில் அழகழகான நெளிவு சுளிவுகள் உள்ளன. நான்கு கலசங்கள், பித்தளையிலான கழுகு வடிவம், கண்ணாடியிலான கதவுகள், ஆகியவையும் உள்ளன. இதில் இரு தட்டுகள் உள்ளன. கீழ் தட்டில் லாச்சிகளும் உள்ளன.

## மாப்பிள்ளை யாரோ...!




மாப்பிள்ளை தேடுவதென்றால் ஏற்படக்கூடிய கஷ்ட நஷ்டங்களெல்லாம் பெண் பிள்ளைகளைப் பெற்ற பெற்றோருக்குத்தான் தெரியும். நீங்கள் படத்தில் காணும் குள்ளமான சீனப் பெண் பல நாடுகளிலும் மாப்பிள்ளை தேடிக் களைத்துப் போனார். இறுதியில் அவர் வாழ்ந்து வந்த சியான் பகுதியில், 'மணமகன் தேவை' என்ற விளம்பரப் பலகையைக் கையில் உயர்த்தியபடி வீதிகளில் வலம் வந்தார். பெற்றவர்களுக்குக் கஷ்டம் விளைவிக்க விரும்பாததால் அவளே மணமகனைத் தேடி வீதிக்கு இறங்கினாள். அவளது முயற்சி காயா? பழமா? என்பதான் தெரியவில்லை.

## நீண்ட பயணம்




உலகில் அதிக தூரம் பயணித்த சரக்கு விமானம் ஹொங்கொங்கிலிருந்து கிழக்கு நோக்கிப் பறந்து, வட அமெரிக்காவைச் சுற்றி வந்து லண்டன், ஹீத்ரோ விமான நிலையத்தைச் சென்றடைந்து. அங்கும் தரித்து நிற்காமல் 22 மணித்தியாலங்கள் தொடர்ச்சியாக இந்த விமானம் பறந்தது. 2005ஆம் ஆண்டு நவம்பர் மாதம் பத்தாம் திகதி இச்சாதனை நடத்தப்பட்டது. 11,664 மைல்கள் அல்லது 21,601 கிலோ மீற்றர்கள் இந்த விமானம் பயணித்திருக்கிறது. சரியாகச் சொல்வதானால் இந்தப் பயணத்துக்கு 22 மணித்தியாலங்களும் 42 நிமிடங்களும் எடுத்திருக்கின்றன. விமானம் தரையிறங்கிய போது விமானத்தின் எரிபொருள் டாங்கிக்குள் மேலும் இரண்டு மணித்தியால்ம் பறக்கக்கூடிய அளவுக்கு எரிபொருள் மிஞ்சியிருந்தது.

# கமலின் புதிய அவதாரம்!

கமலஹாசன் நடிக்கும் புதிய படம் 'தசாவதாரம்'. அசின் ஜோடியாக நடிக்கிறார். தசாவதாரம் படப்பிடிப்பு விறுவிறுப்பாக நடக்கிறது. கும்பகோணம் கோவில்களில் இதன் படப்பிடிப்புக்கு அனுமதி மறுக்கப்பட்டதால் அக்கோவிலைப் போன்று கிழக்கு கடற்கரைசாலை உத்தண்டியில் செட் போட்டு படப்பிடிப்பு நடத்தினர்.

கமல் 10 வேடங்களில் இப்படத்தில் நடிக்கிறார். இதற்காக வெளிநாடுகளுக்குச் சென்று மேக்கப் கலைஞர்களிடம் ஆலோசனை பெற்று வந்துள்ளார். உத்தண்டியில் ஐயங்கார் வேடத்தில் நடித்தார். 105 வயதுக் கிழவி, பயில்வான், ஒல்லிக்குச்சியான், மன்னன், வில்லன் போன்ற வேடங்களிலும் நடிக்கிறார்.

105 வயதுக் கிழவி வேடத்துக்கான படப்பிடிப்பு வட பழனியில் உள்ள ஒரு ஸ்டுடியோவில் நடந்தது. கமல் கிழவி வேடம் போட்டு ஸ்டுடியோவுக்கு நடந்து வந்தார். அவரை அடையாளம் தெரியாமல் காவலாளிகள் தடுத்து விசாரித்தனர். பிறகு கமல் என்று தெரிந்ததும் ஆச்சரியத்தில் மூழ்கினர். கமலுடன் நடிக்க சில வயதான பெண்கள் தேவைப்பட்டனர். அவர்கள் மயிலாப்பூரில் இருந்து அழைத்து வரப்பட்டனர்.

அடுத்த கட்டப் படப்பிடிப்பு அமெரிக்காவில் நடக்கிறது. முந்தைய படமான 'வேட்டையாடு விளையாடு' படத்தின் பெரும் பகுதி படப்பிடிப்பு அமெரிக்காவில் நடந்தது. தொடர்ந்து தசாவதாரம் படமும் அங்கு படமாக்கப்படுகிறது.

10 கெட்டப்புகளில் ஒரு கெட்டப் காட்சிகள் அமெரிக்காவில் எடுக்கப்படுகிறது.

பாடல் காட்சியும் படமாக்கப்படுகிறது.

இதற்காக கமலஹாசன், அசின், டைரக்டர் கே.எஸ்.ரவிக்குமார் உள்ளிட்டோர் அடுத்த மாதம் அமெரிக்கா செல்கிறார்கள். 10 நாட்கள் அங்கு படப்பிடிப்பு நடக்கிறது.


மாதவன் - ரீமாசென்
'ரெண்டு'

# குஷ்பு - தங்கர்பச்சான் மோதல் படமாகிறது

சத்யராஜ் நடிக்கும் 'அடாவடி' படத்தின் கதை வில்லங்கமானது என்று கிசு கிசுக்கிறது கோடம்பாக்கம். நடிகைகள் பற்றி தங்கர்பச்சான் அவதூறு பேசியதாகக் கூறி குஷ்பு அவரை எதிர்த்தார். நடிகர் சங்கத்திற்கு அழைத்து, தங்கரை மன்னிப்புக் கேட்க வைத்தனர்.

இந்தக் கதைதான் அடாவடி படத்தின் கதை என்கிறார்கள். இதில் தங்கர்பச்சானைப் போல் சத்யராஜுக்கு சினிமா டைரக்டர் வேடம். அவரைக் கஷ்டப்படுத்தும் நடிகை கேரக்டரில் 'சுந்தரா டிராவல்ஸ்' ராதா நடிக்கிறார்.

# திரிஷா ரசிகர் மன்றத்தில் 20,000 உறுப்பினர்கள்; நமீதா மன்றத்தில் 3000பேர்!

ரஜினி, கமல், விஜய், அஜீத் என முன்னணி நடிகர்களுக்கு ரசிகர் மன்றங்கள் உள்ளன. விஜயகாந்த் தனது ரசிகர் மன்றத்தை அரசியல் இயக்கமாக மாற்றினார். நடிகர்களைப் போல் நடிகைகளுக்கும் ரசிகர் மன்றங்கள் முளைத்துள்ளன.

முதல் முறையாக குஷ்புவுக்கு 1991இல் திருச்சி ரசிகர்கள் கோவில் கட்டினர்.

தற்போது திரிஷா, நமீதா ஆகியோருக்கு ரசிகர் மன்றங்கள் தொடங்கப்பட்டுள்ளன.

திரிஷா படங்கள் ரிலீசாகும் போது, அவர் ரசிகர்கள் தியேட்டர்களில் கட்அவுட், கொடி, தோரணங்கள் அமைத்து அமர்க்களப்படுத்தி வருகிறார்கள். திரிஷா பிறந்த நாளில் அடையாறு புற்றுநோய் ஆஸ்பத்திரியில் குழந்தைகளுக்கு உணவு, உடைகள் வழங்குவதையும் வழக்கமாக வைத்துள்ளனர்.

திரிஷா தற்போது தெலுங்குப் படங்களில் பிஸியாக நடித்து வருகிறார். தமிழில் சாமி, கில்லி, படங்கள் அவரை முன்னணி நடிகையாக்கின. ஜெயம் ரவியுடன் நடித்த உனக்கும் எனக்கும் படம் ரிலீசாகி 100 நாட்களைத் தாண்டி ஓடிக் கொண்டிருக்கிறது.

நமீதா - ஏய், கோவை பிரதர்ஸ், பச்சக்குதிர உள்ளிட்ட படங்களில் நடித்துள்ளார். சமூக சேவைகளில் ஈடுபாடுள்ள அவர், அவ்வப்போது குடிசைப் பகுதிகளுக்குச் சென்று ஏழைகளுக்கு உதவிகள் வழங்கி வருகிறார்.

சென்னையில் நமீதாவுக்கு 50 ரசிகர் மன்றங்கள் உள்ளன. இவற்றில் 3000 பேர் உறுப்பினர்களாகச் சேர்ந்துள்ளனர். இவர்களில் பெரும்பாலானோர் கல்லூரி மாணவிகள். நமீதா ரசிகர் மன்றமும் சமூக சேவைப் பணிகளில் தீவிரமாகக் களம் இறங்கியுள்ளது. முதல் கட்டமாக 20 ஆயிரம் பேரை மன்றத்தில் உறுப்பினர்களாக்க முடிவு செய்துள்ளனர்.

சி
னி
வி
சி
ட்



ஸ்ரீகாந்த் - பாவனா
'கிழக்கு கடற்கரை சாலை'

# சினிமாவில் நடிக்க தடை வருமா? - மம்முட்டிக்கு நோட்டீசு!

சினிமா நடிகர்கள் டி.வி.நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்கு கேரள சினிமா தயாரிப்பாளர் சங்கம் தடை விதித்துள்ளது. இந்த நிலையில் கடந்த ரம்ழான் அன்று ஒரு தனியார் டி.வி.சேனலில் ஒளிபரப்பான சிறப்பு நிகழ்ச்சியில் நடிகர் மம்முட்டி கலந்து கொண்டார்.

இதற்குப் படத் தயாரிப்பாளர்கள் கடும் கண்டனம் தெரிவித்தனர். மேலும் அவரிடம் விளக்கம் கேட்டு நோட்டீசும் அனுப்பியுள்ளனர்.

இதேபோல, அரபு நாடுகளுக்கு கலைநிகழ்ச்சி நடத்துவதற்காக நடிகர் ஜெகதீஷ், நடிகை காவ்யா மாதவன் ஆகியோர் சென்றனர். இவர்களில் நடிகர் ஜெகதீஷ், படத்தில் நடிப்பதற்கு படத் தயாரிப்பாளர் சங்கம் தடை விதித்துள்ளது.

# தனுஷின் 'திருவிளையாடல்' படம் வெளியாகுமா?

சிவாஜி நடித்த படம் 'திருவிளையாடல்'. இப்படம் நீண்ட நாட்கள் ஓடியது. பக்திப் படம் என்பதால் கோவில் திருவிழாக்களில் ஒரு காலத்தில் இப்படத்தின் வசனம் ஒலிபரப்பப்பட்டது.

நடிகர் தனுஷ் 'திருவிளையாடல் ஆரம்பம்' படத்தில் தற்போது நடிக்கிறார். அவருக்கு ஜோடி ஸ்ரேயா. பூபதி பாண்டியன் இயக்குகிறார்.

திருவிளையாடல் பெயரில் தனுஷ் நடிக்க, சிவாஜி ரசிகர்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

சிவாஜி சமூக நலப் பேரவை தலைவர் ஏ.சந்திரசேகரன், சிட்டி சிவில் கோர்ட்டில் திருவிளையாடல் படத்துக்கு தடை விதிக்குமாறு வழக்குத் தொடர்ந்துள்ளார். இவ்வழக்கு நிலுவையில் உள்ளது.

இந்த நிலையில் தனுஷும், படத்தின் தயாரிப்பாளர் டாக்டர் விமலகீதாவும் கோர்ட்டில் பதில் மனு தாக்கல் செய்தனர். வழக்கை தள்ளுபடி செய்யுமாறு இருவரும் வற்புறுத்தினர். விமலகீதா தாக்கல் செய்துள்ள மனுவில் 'திருவிளையாடல்' என்ற பெயரில் படம் எடுக்கவில்லை என்றும் தனுஷின் 'திருவிளையாடல் ஆரம்பம்' என்று தான் படத்துக்குப் பெயர் வைத்துள்ளோம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கிடையில் திருவிளையாடல் படத்தை ரிலீஸ் செய்வதற்கான ஏற்பாடுகள் விறு விறுப்பாக நடக்கின்றன. விரைவில் இப்படம் வெளியாகும் என்று விளம்பரங்கள் செய்யப்பட்டுள்ளன.

இதற்கு சிவாஜி சமூக நலப் பேரவை மீண்டும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. இப் பேரவையின் சார்பில் வக்கீல் குமரகுரு கூறியதாவது:-

"திருவிளையாடல்' பெயரில் படம் எடுக்கவில்லை என்று எதிர்தரப்பில் கோர்ட்டில் பதில் மனு தாக்கல் செய்யப்பட்டது. ஆனால் விளம்பரங்களில் அதே பெயர் தான் உள்ளது. எனவே இந்தப் படத்தை வெளியிடத் தடை விதிக்குமாறு கோர்ட்டில் மீண்டும் மனுத்தாக்கல் செய்வோம். விரைவில் இந்த மனு தாக்கல் செய்யப்படும்" என்றார்.



பரத் - ஜெனீலியா
'சென்னைக் காதல்'

# சேலை கட்டத் தெரியாத ரீமாசென்!

ரீமாசென் எல்லோரிடமும் சகஜமாகப் பழகுபவர். செல்போனில் தொடர்பு கொண்டால் அவரே பேசுவார். கோபத்தை மட்டும் மூக்கில் வைத்திருப்பார். பிடிக்காததை யாரேனும் செய்தால் ஒரு பிடி பிடிப்பார். இப்படிப்பட்ட ரீமாசென்னுக்கு இன்னமும் சேலை கட்டத் தெரியாதாம். சேலை கட்டும் சீனில் மற்றப் பெண்கள் உதவியோடுதான் கட்டுகிறாராம்.



# மக்கள் வங்கியின் இரட்டை சேமிப்பு மாதத்தில்




## "வகை தொகையின்றி" சேமிப்போம்

நீங்கள் உழைக்கும் பணத்தை மக்கள் வங்கியின் இரட்டை சேமிப்பு மாதத்தில் உங்களின் எதிர்கால நன்மை கருதி சேமிப்போம். அக் 01 - நவ. 30 வரை மக்கள் வங்கியின் பிரதிநிதிகள் உங்கள இல்லம் தேடி வருவார்கள். ஒவ்வொரு சேமிப்பு கணக்கு வைப்பாளருக்கும் ரூபா 10 இலட்சம் வரையிலான தனிநபர் தீடீர் விபத்துக் காப்புறுதி*. இசுறு உதான, சிசு உதான, YES, ஜனஜய, வனிதா வாசனா, மற்றும் பரிணத எனும் வேண்டியதொரு சேமிப்பு கணக்கினை இம்மாதத்தில் ஆரம்பிக்க முடியும். மென்மேலும் சேமிக்க மக்கள் வங்கியுடன் இணையுங்கள்.

*நிபந்தனைகளுக்குட்பட்டது

மக்கள் வங்கியின்

இரட்டை சேமிப்பு மாதம்
உலக சிக்கனத்தினம் நினைவாக

SLIM - ACNielsen
Power of People
Banking & Financial Service Brand of the Year 2006

**2006 அக்டோபர் 1 - நவம்பர் 30**

மக்கள் மனமறிந்த வங்கி
மக்கள் வங்கி

www.peoplesbank.lk




## புதுயுகம்

பசுமை ஆட்சி
பாரில் செழித்து
புதுயுகம்
படைப்பதற்காய்
புறப்படுவோம்!

முற்றி வெடித்து(ப்)
பாணி வழிந்தோடும்
செங்கறும்பை
நோக்கியோடி வந்து
மொய்த்திடும்
எறும்புகளைப் போல்
எம்மை நோக்கி
செல்வம் பறந்தோடி
வரட்டும்!



குட்டிச் சுவர்கள்
புனரமைக்கப்படட்டும்
அதை அனைவரும்
அண்ணாந்து
பார்க்கட்டும்!

அநாதை, விதவை
அகதி என்பதை
அடியோடு
அழித்தொழிப்போம்!

ஆயுத உற்பத்தியை
போதை வஸ்துகளை
மது சூதுகளைத்
தொடாதிருப்போம்
தொலைத்துக் கட்டுவோம்.


சந்தேகங்கள் சரியட்டும்
சாதனைகள் ஓங்கட்டும்
ஒவ்வொரு விடிகாலை(ப்)
பொழுதும்
இன்பமாய்
பிரகாசிக்கட்டும்!

*—அ.கா.மு.றிஸ்வின்,*
*மூதூர் – 01.*

## இடைவேளைகளின் பின்...

கால விளக்கு
கவிழ்ந்து மூடப்பட்டு விட்டது
சுற்றி நிற்கின்றது
சூறைக் காற்று
காட்டிருளின்
நீண்ட இடைவேளைகளின்
பின்
நிதானமாகத் திறக்கின்ற
முதலைக் கரங்களின்
பிடிகளில்
பார்வைகள் தெறிக்கின்ற
போது
பச்சையம் உறிஞ்சப்பட்ட
புற்தரையில்
பளிச்சிட்ட
மஞ்சள் மினு மினுப்புகள்
மனமிழந்த
மனோ ரம்மியத்தின்
பகடற்ற தோற்றங்கட்கு
விடிபொழுது காட்டப்பட்ட
பொழுது
விழுந்துவிட்ட
ஏராளமான விடைகளின்
புற்றுக்கட்டிய
மண்
போன்ற
மண்ணில்
தலைசாய்ந்த
மஞ்சள் ஒளிப்புற்களோ.

*—விஜய் கெல்சன் கிர்ஹன்,*
*வெஸ்ர் ஜெர்மனி.*



## நான் நீயான போது!

வாசனைகள்
வாந்தியைத் தூண்டும் போதும்,
வயிற்றினுள்ளே ஏதோ
உருளுவதனைப் போல்
உணரும் போதும்
பயந்தேன், பதறினேன்...!!

உணவிருந்தும்
உண்ணமுடியாமலும்...!
தாகமிருந்தும்
பருகமுடியாமலும்...!
வயிறு இரையும் போது
உனை நினைத்தேன்...!!

பிஞ்சுப் பாதங்களால்
உதையும் போதும்
வலி தனை உணராமல்
இன்பமதை சுவைத்தேன்
அப்போது கூட
அன்னையே - உனை
நினைத்தேன்...

பிரசவ வேதனையில்
ஒவ்வொரு நிமிடமும்
என் வேதனையோடு
உனை நினைத்தே
அழுதேன்...
ஏன் தெரியுமா?!...


நீ - எனை
சுமந்திருந்த போதும்
இது போலவே
இன்பத்தோடு...
துன்பத்தையும்
சேர்த்தல்லவா
பருகியிருப்பாயென்று...

*—மும்தாஜ் ராசிக்,*
*அரத்தனை.*



## உன்னால்தான்...!

ஊர் மாறி வந்தபோது
ஊரோடு சேர்ந்தே
வந்ததால்
உள்ளத்தில் இங்கு
வருத்தமில்லை.



வெள்ளம் வந்து
உடைமைகளை
கொள்ளை
கொண்டபோதும்
கேளீர் தம்முடன்
கூடவே இருப்பதால்
தூசாய்ப் போனது
துக்கங்கள் அனைத்தும்.

சுனாமியை
சந்திக்க முன்
வெள்ள அபாயம்
கொடுமை.
இப்போதோ
சுனாமியே
உன்னால்தான்
எமக்கு நேர்ந்தது
கொடுமையிலும் கொடுமை.

*—நஸீஹா சம்சபாத்,*
*ஏத்தாலை.*

## கவனமாகப் போ காதலி!



கந்தக மேகங்களின்
சன்னத் தூறல்களில்
முளைத்த
கண்ணிச் செடிகளின்
சாவுப் பூப்பறித்து
கூந்தலில் சூடி
மரணத் திருவிழாவுக்கு
செல்லும் - என்
சமாதான காதலியே,
கவனமாகப் போ!



அமைதி விபத்தில்
நீ அகப்படலாம்.
தீர்வுத் திருடர்கள்
உன்னிடம் திருடலாம்.
பேச்சுவார்த்தை
ரெளடிகள்
உன்னைக் கேலி செய்யலாம்.
யுத்தக் காமுகர்
உன்னைச் சிதைக்கலாம்.
கவனமாகப் போ,
என் சமாதானக் காதலியே!

*—எஸ்.ஜசி,*
*ஒட்டுசுட்டான்.*

## சொன்னவள் நான்தான்!

நம் - காதல்
உண்மையானதென்றேன்
உயர்வானது - என்றேன்
உன்னதமானது - என்றேன்
உத்தமியாக - நான்
இருந்தபோது...

நம் - காதல்
பொய்யென்றால்
வான் மழையோ
மேல்நோக்கிப் பெய்யுமென்றேன்!
நட்சத்திரங்கள்...
உதிர்த்து விடுமென்றேன்
நான் - சுயமாக
சிந்தித்த நேரமது...


நான் - காதலையே...
கல்யாணமென்று - எண்ணினேன்
அதனால்தான் - உன்னை
கல்யாணத்துக்கு - முதலே
கணவன் - என்று கூறினேன்...

காதலெனும் - சிறகு தந்து
கல்யாணக் கால்களைத்
தேட வைத்தவனே!...
நம் - காதல்
புனிதமானதுதான்... உன்னை
மறக்க முடியாத - என்னை
மன்னித்துவிடு... என்று
கேட்பவளும் - நான் தான்...

கல்யாணம் - எனும்
கால்களுக்கு - ஒருத்தன்
செருப்புத் தந்து - ஓடவைத்து
இன்று...
ஓரமாய் விட்டுச் சென்றுவிட்டான்
தூக்கிலே - உயிர்விடும்போது
உனக்கோர் - அனுதாபக் - கவி
எழுதியவளும் - நான்தான்
என்னை - மன்னித்துவிடு.

*— மல்லிகைவாணன்,*
*திருமலை.*

## பேனா நண்பர் பகுதி



**பெயர்** : எம். சிவா

**வயது** : -

**முகவரி** : தபால் பெ.இல. 7135, டோஹா, கட்டார்.

**பொழுதுபோக்கு** : பத்திரிகை வாசித்தல், வானொலி கேட்டல், கலைத்துறை.

# கவிதை எழுதுதலும் வாசித்தலும்

[பயிற்சிக் களம்]


## சிறப்புக் கவிதையும் — கவிஞரும்

*கவிதை உலகின் காலடி வைத்தவர்களில் சிலர் மங்கிப் போனதும் உண்டு சிலர் தன்னுடைய திறமையை உலகறிய வைத்தவர்களும் உண்டு. அந்த வகையில் கவிதைகள் வரையும் கவிஞர்களை ஊக்குவிப்பதற்காக இணையத்தில் இருந்த சில கவிதைகளை சிறப்புக் கவிதை எனும் பகுதியில் தருகின்றோம்.*

## மரபும் புதுமையும்!

கவியரங்கம் சென்றேன் புதுக்கவிதையொன்று எழுதித்தந்தேன்
புகழ்மரபுக் கவிஞன் சொன்னான் 'பாட்டினிலே சந்தமில்லை'
தவிர்த்துவேறு அரங்கம் சென்றேன் தனிமரபில் கவிதை தந்தேன்
வளர்ந்தபுதுக் கவிஞன் சொன்னான் 'வளவளவெனப் பாடாதே'





வீதியினைக் கூட்டுகின்ற விளக்குமாற்றைக் கொள்ள
வீடுமட்டும் கூட்டுபவர்க்கு விருப்பம் இருக்காது
பாடுகின்ற கவிதைபல படைப்பில் இருப்பினும்
விளக்குமாற்றல் உள்ள கவிதை உளம்கூட்டும் விளக்குமாறே!

கவிதையென்ற விதையைக் காட்டும் பாட்டில் புலவனோ
வேரைப்பாடி விழுதைப்பாடி விருட்சம் பாடுவான்.
புதுமைக்கவிஞன் ஒரேவரியில் விதையைச் சொல்லுவான்
அறிவைத்தூண்டும் அதேவரியில் விருட்சம் காட்டுவான்.



சந்தங்கள் சேர்த்து நல்ல சங்கதியும் சேருங்கள்
சொற்களை அடுக்கியதில் சிந்தனையும் தூண்டுங்கள்
புதுக்கவிதை என்ற பெயரில் புரியாமல் எழுதாதீர்!
படிக்கின்ற பாமரனோ பிய்க்க வேண்டாம் தலைமுடியை!

மந்தியும்கவியும் ஒன்றென்றார் மரபுப்புதுமை குரங்குகளே
கவிதை மரத்தில் தாவுங்கள் கனியாம் தமிழைப் பறியுங்கள்
சிந்தனையைச் சொரியுங்கள் சீர்தமிழில் கத்துங்கள்
உள்ளமெல்லாம் மகிழும்வகையில் வார்த்தை வாலை ஆட்டுங்கள்.

*— அழகர்சாமி சக்திவேல்.*

## பெண்!

பெண்ணே உலகின் ஆதாரம்
அவளற்ற ஆண் வெறும்
தளமற்ற கட்டிடம்.

உள்ளத் தவிப்புக்கு மருந்தும்
உயிரின் துடிப்புக்குச் சமாதானமும்
பெண்ணே இன்றி
பெறுவதுதான் எப்படி?



கலையா, கணினியா,
இலக்கியமா, இராணுவமா,
நாட்டுத் தலைமையா
விண்வெளிப் புரட்சியா,
எங்கே இல்லை அவள்.

சொல்லுங்களேன்!
உயிரைச் சுமக்கும் ஒரே உயிர்
உலகில் பெண்தானே?

துவண்ட மனதுக்கு
மடிதந்து தலைகோத
ஒரு பெண்ணற்றுப் போயின்
மனித இனம் மொத்தமும்
சுடுகாட்டுப் பிணங்கள்தானே?



எல்லாச் சுகங்களும்
எங்கும் கிடந்தாலும்
ஒரு பெண்ணில்லா பூமியில்
சிறு பொழுதேனும் நகருமா.

அந்தப் பூமியும் கூட
ஓர் அழகுப் பெண்ணல்லவா?

நிலவா, மலரா, கடலா, காற்றா,
காண்பதெல்லாம் பெண்ணல்லவா.

சுகங்களின் இருப்பிடம் அவள்
சொர்க்கத்தின் பொருளும்
அவளேதான்.

ஓராயிரம் ஓட்டைகளும்
உருப்படாத துடுப்புமாய்
நடுக்கடலில் விடப்பட்ட
ஆசை ஓடங்கள் தானே?
மனித மனங்கள்.

ஒரு பெண்ணின் துணையின்றி
வாழ்வெனும் கரைசேர
வாய்க்குமோ கனவிலும்.


அவளின் அன்பின்றி
ஆயுள் ரேகைக்கு
ஆயுள்தான் ஏது?

அழப்பிறவா மனிதருண்டோ?

ஓரெட்டில் அம்மா
ஈரெட்டில் தங்கை
மூவெட்டில் காதலி
நாலெட்டில் தாரம்
ஐயெட்டில் மகளென்று
சாவெட்டு வரும்வரை
நம் கண்ணீர் நிறுத்தி
அமைதியின்றி மடிகிடத்த
தம் கண்ணீர் பொழியும்
கருணை மேகங்களல்லவா
பெண்கள்!

அறிவுரைக்கோ
ஆயிரம் நாவுகளுண்டு
ஆறுதலுக்கு
அவளன்றி வேறு வழியுண்டோ?

பெரும்பாலும் பெண்கள்
உயிர்களைப் பிரசவிக்கும்போது
ஆண்கள்
அணுகுண்டுகளைத் தானே
பிரசவிக்கிறார்கள்



உயிர்களின் ஆக்கமெல்லாம்
பெண்ணே என்பதால்
அந்தத்
தெய்வமும் பெண்தானோ!

*— அன்புடன் புகாரி.*



# லேடிஸ் ஸ்பெஷல்

## அழகு – சருமம் பாதுகாப்பு டிப்ஸ்

**அலைபாயும்** கூந்தல், பளபளப்பான தேகம், மாசுமருவற்ற சருமம், முத்தான பற்கள், காந்தக் கண்கள், செழிப்பான கன்னம், பவழ இதழ்கள், சொக்க வைக்கும் வனப்பு. இப்படித்தோற்றம் அளிக்க யாருக்குத் தான் விருப்பம் இருக்காது?

### ஆரோக்கியம்


உடலின் ஆரோக்கியத்தைப் பொறுத்தே அதன் அழகு வெளிப்படுகிறது. ஆகவே வாய்க்குள் போகும் உணவிற்கு, ருசியை விட அதன் பயனிற்கு முக்கியத்துவம் தர வேண்டும். அதிக இனிப்பு, மசாலா வகைகளையும், ஐஸ்க்ரீம் போன்றவைகளையும், எண்ணெயில் பொறித்தவைகளையும் நீக்குதல் நல்லது.



* பால் நல்ல க்ளென்சர் என்பதால் தான் கிளியோபாட்ரா கழுதைப் பாலில் குளித்துப் பேரழகியாய் இருந்திருக்கிறார் போலும்! குளிர்ந்த பாலில் பஞ்சினைத் தோய்த்து முகம் துடைப்பது சிறந்தது. மேக்கப் போடும் முன்பு எப்போதும் முகத்தை க்ளென்சிங் செய்ய வேண்டும்.

* தேங்காயுடைத்ததும் கிடைக்கும் இளநீரும் சிறந்த க்ளென்சிங் மில்க். வீணாக்காமல் முகத்தில் தடவிக் கொள்ளலாம்.

* வறண்ட சருமத்திற்கு இயற்கையான க்ளென்சர் தேனில் பால் சேர்த்து பயன்படுத்துவது என்றால், எண்ணெய்ப் பசை சருமத்தினர் எலுமிச்சைச் சாற்றினில் சில துளிகள் பால் சேர்த்துக் கலந்து அதைப் பஞ்சினால் தொட்டு சருமத்தைத் துடைத்து எடுக்கலாம்.



### 'பளிச்' முகத்துக்கு

பாதாம்பருப்பு சருமத்திற்கு ஒரு அற்புதப் பொருள் எனலாம். 5 பாதாம் பருப்பினை ஊற வைத்துப் பால் சேர்த்து விழுதாய் அரைத்து தேன் சில துளி சேர்த்து முகத்தில் பூசுங்கள். 20 நிமிடம் ஊறிய பின் முகத்தைக் கழுவுங்கள்.

பளிச் முகம் இப்போது!

### முகப் பொலிவுக்கு...

வெள்ளரிக்காய் சாற்றில் முல்தானிமட்டி மற்றும் பால் சேர்த்துக் கலந்து முகத்தில் பூசி பிறகு கழுவினால் வெய்யிலினால் கறுத்த முகம் பொலிவு பெற்று விடும்.

### கருப்பு திட்டுகள் மறைய...

மூக்கு, கன்னங்களில் கருப்பு திட்டாய் இருக்கிறதா? சந்தனம், ஜாதிக்காய், வேப்பங்கொழுந்து ஆகியவற்றை நீரில் நைசாக அரைத்து பற்று மாதிரி போடுங்கள். மங்கு படர்ந்த பகுதிகள் மளாரென மறைந்து போகும்!

### கருவளையம் மறைய...

கண்ணுக்குக் கீழேயும் கருப்பு வளையம் நமக்கு வெறுப்பான விஷயம் தான்...அதற்கு வெள்ளரி விதைப் பொடியுடன் தயிர் சேர்த்து பேஸ்ட் போலக் குழைத்துத் தடவி வந்தால் ஒரே மாதத்தில் கருமை காணாமல் போகும்.

### சருமம் கருமை மாற

முட்டை கோஸின் வெளிப்புற இலைகளை எடுத்து மிக்ஸியிலிட்டு சாறு பிழிந்து அத்துடன் ஒரு ஸ்பூன் ஈஸ்ட், ஒரு ஸ்பூன் தேன் கலந்து முகம், கழுத்து கைகளில் பூசி வர, சூரிய ஒளியால் பாதிக்கப்பட்ட சருமம் கருமை நிறம் மாறி சிவந்து விடும்.

### கழுத்தைப் பராமரிக்க...

நம் முகத்தைத் தாங்கும் கழுத்தையும் நாம் கவனிக்கணும். ஒரு ஸ்பூன் வெங்காயச்சாறு, சிறிது ரோஸ்வாட்டர், இரண்டு சொட்டு ஆலிவ் ஒயில், சிறிது பயற்ற மாவு கலந்து கழுத்திற்குப் பூச வேண்டும். பத்து நிமிஷம் கழித்து கீழிருந்து தாடை நோக்கி மெதுவாய் மசாஜ் செய்ய 'டபுள் சின்' நாளடைவில், சூப்பர் சின் ஆகிவிடும்!

### முகத்தில் புதுப்பொலிவுக்கு...

✦ தர்பூசணி பழச்சாறு, பயற்றமாவு கலவை முகத்தில் பூசப்பட்டு வந்தாலும் புதுப்பொலிவு கிடைக்கும்.

✦ பப்பாளிப்பழம் முகத்தில் பூச உகந்தது; இயற்கையான ஸ்க்ரப் இது!



### சிவந்த இதழ்களுக்கு...

சின்ன துண்டு பீட்ரூட்டை உதட்டில் அடிக்கடி அழுத்தித் தேய்த்து வர செவ்வாய் (திங்களுக்குப் பின் வருவதல்ல சிவந்த அழகான இதழ்கள்) வரும் நிச்சயம்!

பாதாம் எண்ணெய் சில சொட்டு நகத்தில் தேய்த்து வர ஆரோக்கியமாய் நகங்கள் வளரும். பேரிச்சம்பழம் கலந்த பால் சாப்பிட்டு வந்தால் வெளிறிய உடைந்த நகங்கள் கூட நன்கு வளரும்.

## மெலிந்தவராகத் தோற்றமளியுங்கள்!



**நீங்கள்** குண்டாக இருக்கிறீர்கள் என்ற எண்ணம் உங்கள் தன்னம்பிக்கையை இழக்கச் செய்கிறதா? மாடர்ன் உடைகளை அணிய ஆசையும், அதே நேரத்தில் பிறர் கேலி செய்வார்களே என்ற பயமும் உங்கள் மனதில் இருக்கின்றதா? கீழே உள்ள குறிப்புகளை நினைவில் கொண்டு உடைகளை அணிந்தால், உங்கள் உண்மையான எடையை மறைத்து மெலிந்தவராகத் தோற்றமளிக்கலாம்!

♣ நீண்ட நேரான ஸ்கர்ட் கருப்பு அல்லது கருநீலம் போன்ற நிறங்களில் அணியுங்கள். இதனால் நீங்கள் உயரமாகத் தெரிவது மட்டுமல்லாமல், எடை குறைந்தவராகவும் தோன்றுவீர்கள்.

♣ லூஸ் ஓவர்கோட் அணிந்தால் உங்களின் உண்மையான எடையை அது மறைக்கும். ஆனால் நீங்கள் அணியும் ஓவர்கோட் முழங்காலுக்கு மேல் சுமார் 6 அங்குலம் உயரமானதாக இருக்க வேண்டும். இதைவிட உயரமாகவோ நீண்டதாகவோ அணிந்தால் உங்கள் எடையை அது கூட்டிக் காட்டக் கூடும்.

♣ கழுத்துக்கு இறுக்கமான உடைகளை அணியாதீர்கள்.

♣ உடலோடு ஒட்டியிருக்கும் உடைகளைத் தவிருங்கள்.

♣ பெரிய டிசைன்கள் உள்ள உடைகளையும், படுக்கை கோடுகள் உள்ள உடைகளையும் அணிந்தால் அது உங்களை குள்ளமாகவும், பெருத்தும் காட்டும்.

♣ சிறிய டிசைன்கள், நீண்ட நெடுக்குக் கோடுகள் கொண்ட உடைகள் அணிந்தால் உயரமாகவும், மெலிந்தும் தோன்றலாம்.

♣ நீண்ட பட்டன் வரிசைகள் உள்ள உடைகள் மெல்லிய தோற்றத்தை அளிக்கும்.

## குண்டாக உணவு டிப்ஸ்...

ஒல்லியாக இருப்பது அழகுதான். ஆனால் அதற்கும் ஒரு அளவு உண்டு. ஒடிந்து விழுகிற மாதிரியான ஒல்லியான தேகத்தை யாருமே விரும்பமாட்டார்கள். குண்டாக ஆசைப்படுபவர்களுக்கு இதோ சில டிப்ஸ்...

தினசரி நீங்கள் சாப்பிடும் உணவில் கலோரி அளவை அதிகரியுங்கள். உதாரணத்திற்கு 500 கலோரிகள் தினம் அதிகம் சேர்த்துக் கொள்ளவும். உணவுக்குப் பிறகான இடைவேளைகளில் நொறுக்குத் தீனிகளைச் சாப்பிடுங்கள். ஒரு வாரத்தில் மாற்றத்தை உணருவீர்கள்.

கொழுப்பு நீக்கப்படாத பால், எண்ணெய் போன்றவற்றை அதிகம் சமையலில் பயன்படுத்துங்கள்.



சாப்பிடுவதற்கு முன்பாகத் தண்ணீர் குடிப்பதைத் தவிருங்கள். அது உங்களை முழு வயிற்றுக்கு சாப்பிட விடாமல் செய்து விடுவதுடன் வயிறு நிரம்பிய உணர்வையும் ஏற்படுத்திவிடும். கலோரி குறைவான உணவுகளை உண்பதைக் குறைத்துக் கொள்ளுங்கள். உணவில் எத்தனை கலோரிகள் உள்ளன என்று கேட்டுத் தெரிந்து வைத்துக் கொண்டு கலோரியுள்ளவற்றைச் சாப்பிடவும்.

சாப்பிடும் போது கூடவே குளிர்பானங்கள் குடிப்பது, அடிக்கடி டீ, காபி குடிப்பது போன்றவற்றைத் தவிருங்கள்.

நொறுக்குத் தீனிகளைச் சாப்பிட்டால் இரண்டு மணி நேரம் கழித்து சாப்பாடு சாப்பிடுங்கள். அப்போது தான் பசி எடுக்கும். படுக்கச் செல்வதற்கு முன்பாக அவற்றைச் சாப்பிடுவதால் கட்டாயம் எடையைக் கூட்டும்.

நீங்கள் குறைவாகவே சாப்பிட்டுப் பழகியவரா? அப்படியானால் சாப்பிடும் இடைவெளி மூன்று முறைகள் என்பதை மாற்றி ஆறு முறைகள் என்று பழக்கிக் கொள்ளுங்கள். நேரத்தில் முழுச்சாப்பாடு சாப்பிடுவதற்குப் பதிலாக, அடிக்கடி குறைவாக சாப்பிடுங்கள்.

உடற்பயிற்சி செய்தால் உள்ள எடையும் போய் விடுமே என்று நினைத்துக் கொண்டு தவிர்க்காதீர்கள். குண்டானவர்களுக்குத் தான் உடற்பயிற்சி என்றில்லை. ஒல்லியானவர்களும் செய்யலாம். அது அவர்களது உடல் சரியான ஷேப்பில் இருக்க உதவும். ஆனால் அளவுக்கதிகமாக அதாவது உடல் களைப்படைகிற வரை உடற்பயிற்சி செய்ய வேண்டாம். இரவு படுக்கச் செல்வதற்கு முன்பாக வெதுவெதுப்பான பாலில் சிறிது தேன் கலந்து குடிக்கலாம். காலையிலும், மாலையிலும் ஐந்தைந்து பாதாம் பருப்பு, முந்திரிப் பருப்பு, பேரீச்சம்பழம், பிஸ்தா பருப்பு போன்றவற்றைச் சாப்பிடுவதை வழக்கமாக்கிக் கொள்ளுங்கள். பகலில் நேரம் கிடைக்கிறபோது தூங்குவது இன்னும் நல்லது.

## சமைப்போம் சுவைப்போம்

*தொகுத்துத் தருவது –ஷோபா–*

### ரசமலாய்

**தேவையான பொருட்கள் :-**

பால் பவுடர் - 4 கப்
முட்டை - 2 கப்
ஏலக்காய் பவுடர் - 1/2 டேபிள் ஸ்பூன்
பால் - 1 கப்
சீனி - 1/2 கப்
சமையல் சோடா - 1 டீஸ்பூன்
பன்னீர் - 2 டேபிள் ஸ்பூன்.

**செய்முறை :-**

பால் பவுடர், சமையல் சோடா, முட்டை முதலியவைகளை நன்றாக மெதுவான மாவு பதத்தில் பிசைந்து கொள்ளவும். பிசைந்த மாவை சிறுசிறு உருண்டைகளாக உருட்டி வைத்துக் கொள்ளவும். பிசைந்த உருண்டைகளைத் தட்டையாக்கி வைத்துக் கொள்ளவும். பாலை நன்றாக காய்ச்சவும். காய்ச்சிய பாலுடன் சீனி சேர்த்து 10 நிமிடம் மிதமான சூட்டில் கொதிக்க வைக்கவும். தட்டையாக்கியுள்ள மாவை கொதிக்கும் பாலில் போட்டு வேக வைக்கவும். பாலில் வெந்த மாவு, இரண்டு மடங்காக உப்பியவுடன், அவைகளை ஓரிரு முறை திருப்பி விடவும். 5 நிமிடம் வெந்தவுடன் இறக்கவும். இறக்கியவுடன் ஏலக்காய் பவுடர், பன்னீர் முதலியவைகளைச் சேர்க்கவும். நன்கு ஆறியவுடன் ரோஜா இதழ்கள் மற்றும் வெள்ளி தாள்களினால் அலங்கரிக்கவும்.


## வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி

**முரசு வாசகர்களுக்கான பரிசுப் போட்டி**

கேள்வி இல்லை! பதில் இல்லை!
பொருட் கொள்வனவு அவசியமில்லை!
வயது, பால் வேறுபாடின்றி வாசகர் பங்கு பெறலாம்!

**முரசு வாசகர்களுக்கான பரிசுப் போட்டி**

48

பெயர் : ..........
முகவரி : ..........
..........
..........
தே.அ. அட்டை இல : ..........
கையொப்பம் : ..........

உண்மை - நேர்மை - வெளிப்படைத்தன்மை

ஒவ்வொரு வாரமும் அதிர்ஷ்டசாலி குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப் படுவார்.

மேலேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் மட்டும் ஒட்டி அனுப்பினால் போதுமானது. (பிரதிகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது).

ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களை அனுப்பலாம்.

அனுப்பி வைக்க வேண்டிய முகவரி

**வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி**
**முரசு பரிசுப் போட்டி -48**
**தினமுரசு வார மலர்**
**த.பெ.இல - 1772**
**கொழும்பு.**

கூப்பனை அனுப்ப வேண்டிய கடைசித் திகதி:
28.11.2006

பரிசுப் போட்டி இல - 46
பரிசு பெறும்
அதிர்ஷ்டசாலி

க. நேமிநாதன், இல. 17C, குருதெனிய வீதி, அம்பிட்டிய.

அதிர்ஷ்டசாலி உடனடியாக எம்முடன் தொடர்பு கொள்ளவும்.




"**தூக்குவதற்கு** இறக்குவதற்கெல்லாம் உனக்கு ஒத்தாசை செய்யக் கூடியவர்கள் இங்கே யாரும் கிடையாது. ஏனென்று உனக்கே தெரியும் இல்லையா?"

நண்பர்களிடம் திரும்பினேன். மாசுரெட்டும் நானும் ஜோன்ஸைத் தூக்கிப் படகுக்கு வெளியே கொண்டு வந்து ஒரு குடிசைக்கு எடுத்துச் சென்றோம். ஒரு மணி நேரத்தில் படகில் உள்ளவற்றை அகற்றி,



கரையில் பத்திரமாக அடுக்கினோம். படகையும், ஒரு துடுப்பையும் தனக்குப் பரிசாகத் தரும்படி லாபூஸ் கேட்டான். கொடுத்தேன். தனக்குத் தெரிந்த ஓரிடத்தில் அதை அமிழ்த்தி வைப்பதற்காகக் கொண்டு சென்றுவிட்டான்.

இரவு விரைவாகக் கழிந்துவிட்டது. நாங்கள் மூவரும் குடிசைக்குள் படுத்திருந்தோம். டூஸான் புதுப் போர்வைகள் அனுப்பியிருந்தான். கெட்டியான 'பாக்கிங்' காகிதம் சுற்றியது சுற்றியபடி, கொஞ்சமும் பிரிக்கப்படாத பார்ஸலாக வந்து சேர்ந்தன அந்தப் போர்வைகள். அவற்றைப் போர்த்திக் கொண்டோம்.

வசதியாகக் காலை நீட்டிப் படுத்துக்கொண்டேன் நான். புறப்பட்டது முதல் என்ன நடந்தது என்ற விவரங்களையும், டூஸானிடம் முடித்த பேரத்தையும் மாசுரெட்டிடமும், ஜோன்ஸிடமும் தெரிவித்தேன்.

உடனே ஜோன்ஸ், கொஞ்சமும் யோசிக்காமல் குழந்தைத் தனமாகச் சொன்னான்: "ஆகக்கூடி, நாம் தப்பி வந்த செலவு ஆறாயிரத்தைந்நூறு பிராங்குகளா! பட்டாம் பூச்சி, அதில் ஒரு பாதியை நான் தந்துவிடுகிறேன். என்னிடமிருக்கும் மூவாயிரம் பிராங்குகளைத்தான் சொல்கிறேன்."

"பாங்கிங் குமாஸ்தா மாதிரி நாமொன்றும் கூட்டல், கழித்தல் போடத் தேவையில்லை. என்னிடம் பணம் இருக்கிற வரையில் நான் தருகிறேன். அதற்கப்புறம் - அதை அப்போது பார்த்துக் கொள்ளலாம்." என்றேன்.

பெருவியாதிக்காரர்களில் யாரும் குடிசைக்குள் வரவில்லை.

பொழுது விடிந்தது. டூஸான் வந்தான்.

"குட்மார்னிங்!கவலையில்லாமல் நீங்கள் வெளியே நடமாடலாம். எதிர்பாராதவிதமாகத் திடீரென்று இங்கே யாரும் வந்துவிட முடியாது. தீவின் உச்சியில், தென்னை மரத்தின் மீது ஓர் ஆள் உட்கார்ந்து கவனித்துக் கொண்டிருக்கிறான் - பொலிஸ் படகு ஏதாவது வருகிறதா என்று. யாரும் கண்ணில் படவில்லை. அதோ உயரத்தில் ஒரு வெள்ளைத் துணி தெரியவில்லை. அது இருக்கிற வரையில் படகு எதுவும் வரவில்லை என்று பொருள். ஏதாவது கண்ணில் பட்டால், உடனே கீழே இறங்கி வந்து சொல்வான்.... பப்பாளிப் பழம் பிடிக்குமா? நீங்களாகவே பறித்துச் சாப்பிடலாம்."

"டூஸான்! நீ தருவதாகச் சொன்ன படகிற்குக் கீழ்த் தண்டு சேர்க்கவேண்டும் என்றாயே, அதற்கு என்ன செய்வது?" என்று கேட்டேன்.

"மன்றக் கட்டடத்தின் கதவிலிருந்து ஒரு பலகை தயாரித்துப் பொருத்திவிடலாம். அது நல்ல மரம். இரண்டு பலகை போதும். ராத்திரி இருட்டாக இருந்ததை உபயோகப் படுத்திக் கொண்டு படகை மேலே இழுத்துக் கொண்டு வந்துவிட்டோம். வந்து பார்."

போய்ப் பார்த்தோம்.

**எழுதியது: ஹென்றி ஷாரியர்**
**தமிழில்: ரா.கி. ரங்கராஜன்**

அருமையான படகு. பதினாறடி நீளம். புத்தம் புதிது. நானும் மாசுரெட்டும் அதைப் புரட்டிப் பார்ப்பதற்குள் மூச்சு வாங்கிவிட்டது. பாய்மரம் புதிதாயிருந்தது. படகின் இரண்டு பக்கத்திலும் வளையங்கள் இருந்தன - தண்ணீர்ப் பீப்பாய் போன்ற பொருள்களைக் கோர்த்துக் கொள்வதற்குத் தோதாக.

நாங்கள் வேலையில் இறங்கினோம். பகலுக்குள், நீண்ட ஸ்க்ரூ ஆணிகளைக் கொண்டு, கீழ்த்தண்டைப் பலமாகப் பொருத்தி விட்டோம்.

பெருவியாதிக்காரர்கள் வட்டமாக நின்றுகொண்டு, நாங்கள் வேலை செய்வதை மௌனமாகப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். எப்படிப் படகைச் சரி செய்வது என்பது பற்றி டூஸான் எங்களுக்குச் சொல்லித் தந்தான். அவனுடைய குறிப்புகளின் படியே நாங்கள் வேலை செய்தோம்.

டூஸானின் முகம் இயல்பாகவே காட்சியளித்தது. விகாரம் எதுவும் இருக்கவில்லை. ஆனால், அவன் பேசும் போது முகத்தின் ஒரு பாதி மட்டுமே - இடது பாதி மட்டுமே - அசையும். அதை அவனே சொன்னான். அவனுக்கு 'உலர்ந்த தொழுநோய்' இருப்பதாகவும் அவன் தெரிவித்தான். அவன் மார்பும், வலது கையும் பக்கவாதத்தால் பீடிக்கப்பட்டிருந்தன. விரைவிலேயே வலது காலிலும் பாரிச வாதம் ஏற்பட்டுவிடும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். கண்ணாடியில் செய்த மாதிரியிருந்தது அவனுடைய வலது கண். அந்தக் கண்ணினால் அவன் பார்க்க முடியும். ஆனால் விழி அசையாது.

வேலை செய்து கொண்டே டூஸானிடம் பேசியவாறு இருந்தேன். வேறு யாரும் ஒரு வார்த்தையும் சொல்லவில்லை. ஒரே ஒரு தடவைதான் அவர்களில் ஒருவன் பேச நேரிட்டது. மன்றத்தின் மேஜை, நாற்காலித் துண்டுகளிலிருந்து சில கீல்களை அவர்கள் பறித்துப் போட்டிருந்தார்கள். அந்தக் கீல்களைப் படகுக்கு அடிப்பதற்காக எடுக்கப் போனான். அப்போது ஒருவன் சொன்னான் : "இரு, இரு, அதற்குள் அவற்றை எடுக்காதே. அப்படியே போட்டுவிடு. அந்தக் கீல்களில் ஒன்றை நான் எடுத்தபோது கையை வெட்டிக் கொண்டுவிட்டேன். இரத்தம் வந்தது. துடைத்து விட்டேன். என்றாலும், இன்னும் கூடச் சிறிது இரத்தம் ஒட்டிக் கொண்டிருக்கிறது." என்றான்.

இன்னொரு பெருவியாதிக்காரன் வந்து அந்தக் கீலின் மீது சாராயத்தை ஊற்றி, இரண்டு தரம் நெருப்புப் பற்ற வைத்தான். பிறகு, "இனி நீ எடுத்து உபயோகப்படுத்தலாம்." என்றான்.

வேலையின் நடுவே, பெருவியாதிக்காரர்களில் ஒருவனிடம் டூஸான் சொன்னான் : "நீ பல தடவை தப்பியிருக்கிறாயே, என்னென்ன செய்ய வேண்டுமென்று பட்டாம் பூச்சிக்குச் சொல்லு. இந்த மூன்று பேரில் யாருமே தப்பியோடியதில்லையாம்."

உடனே அவன் சொல்லத் தொடங்கினான்.

"இன்று பிற்பகல் ஆற்றின் ஓட்டம் மாறிவிடும். தண்ணீர் கடலை நோக்கிப் பாய ஆரம்பிக்கும். ஆறு மணி சுமாருக்கு, இருட்டுகிற வேளையில் படகைச் செலுத்த நல்ல வேகம் கிடைக்கும். மூன்று மணி நேரத்திற்குள் ஆற்றின் முகத்துவாரத்துக்கு அறுபது மைல் கிட்டமாகப் போய்விடலாம். அதன் பிறகு கடல் நீர் ஆற்றுக்குள் வெள்ளமாகப் பெருக்கெடுக்க ஆரம்பித்துவிடும். வெள்ளம் இருக்கக்கூடிய ஆறு மணி நேரமும் கரைப்பகுதியில் வலுவான ஒரு மரத்தில் படகைப் பிணைத்து வைக்க வேண்டும். விடிகாலை மூன்று மணிக்கு மறுபடி ஆற்றுநீர் கடலை நோக்கிப் பாயத் தொடங்கும். ஆனால் உடனே புறப்பட்டுவிடக் கூடாது. காரணம் அலைகளின் வேகம் போதுமானதாயிருக்காது. நாலரை மணி சுமாருக்கு, நடுமத்திக்குப் போய்விடு. சூரிய வெளிச்சம் வருமுன்பு, ஒன்றரை மணி நேரத்துக்குள் முப்பது மைலைக் கடந்துவிட வேண்டும். வெற்றி - தோல்வி எல்லாம் அந்த ஒன்றரை மணி நேரத்தைப் பொறுத்திருக்கிறது. ஆறு மணிக்கு சூரியன் எழுகின்றபோது, நீ கடலில் இருக்க வேண்டும். கங்காணிகள் உங்களைப் பார்க்க நேரிட்டால் கூடப் பின்தொடர முடியாது. ஆற்றுக்குள் கடல் நீர் பெருக்கெடுத்துக் கொண்டிருக்குமாதலால், ஓட்டம் அவர்களுக்கு எதிராக இருக்கும். அதைச் சமாளித்து முகத்துவாரத்தைக் கடந்து அவர்கள் வருமுன்பு நீங்கள் போய்விடலாம். அவர்களுக்கும், உங்களுக்கும் இடையில் அரை மைல் இடைவெளி இருந்தாக வேண்டும். வாழ்வா - சாவா என்ற நிலைமை அது," என்று கூறி விட்டுப் படகில் எவ்வெப்போது எப்படிப் பாய்மரத்தை உபயோகிக்க வேண்டும் என்கிற தகவல்களைத் தெரிவித்தான்.

*(பட்டாம்பூச்சி பறக்கும்)*




**ஏனெனில்** இந்த அரசாங்கம் குறைந்த எண்ணிக்கையிலேயே ஆட்சிக்கு வந்தது. ஆரம்பத்திலிருந்தே இலங்கை இந்திய தொழிலாளர் காங்கிரஸ், இடதுசாரி கட்சிக்கு சார்பாகவே நின்றது. இவ்விதமான தொடர்ச்சியான நிலைப்பாடு காணப்பட்டால் தாங்கள் தோல்வியடைய நேரிடும் எனப் பயந்தனர். இதற்குப் பிரதி காரியமாக 1947இற்கு முன்பு கிடைத்த குடியுரிமையைப் பறிப்பதற்கு ஒரு திட்டத்தினை செயற்படுத்தினர். 'பிச்சைக்காரன் பிச்சை எடுப்பதற்காக புண்ணை உருவாக்கி, அதை சுகப்படுத்த விரும்பாதபடி எப்படி இருப்பானோ' அதே நிலையில், தாங்கள் செய்யும் கொடுஞ்செயலை நியாயப்படுத்தியதை வரலாறு காட்டுகின்றது.



இந்தியா- இலங்கை குடியுரிமைச் சட்டம் என்ற 'நொண்டி மசோதா' 1948-11-15 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் அமுலாக்கப்பட்டது. இந்தத் தினத்தை தேயிலைத் தோட்ட தொழிலாளர்களின் 'அபாயத்தினம்' எனக் குறிப்பிடலாம். இம் மசோதாவை S.J.V. செல்வநாயகம், C. வணிகசிங்கம் போன்றோர் எதிர்த்தனர். ஆனால் இலங்கை தமிழராகிய வட கிழக்கு மாகாண உறுப்பினர்கள், அகில இலங்கை காங்கிரஸ் தலைவர் G.G.பொன்னம்பலம் போன்றோர் இம் மசோதாவை ஏற்றுக்கொண்டோமென, அதற்கு சார்பாக வாக்களித்தனர். இவ்விதம் ஐந்தே ஐந்து தமிழ் மேலதிக வாக்குகளினால் இம் மசோதா அமுலாக்கப்பட்டது. இதனால் "சிங்களவர் நாடு சிங்களவர்க்கே உரியது" என்ற வெறித்தனம் மேலோங்க 1.3 மில்லியன் தேயிலைத் தோட்ட தொழிலாளர்கள் வாக்குரிமை, குடியுரிமை, அரசுரிமை, ஆட்சியுரிமை அனைத்தும் இழந்தனர். இம் மாதிரியான இழிவான நிலையை, தேயிலைத் தோட்ட மக்களுக்கு கசங்கிப் போன பூக்களின் மாலையாக சூட்டி, சிங்களவரும், மேலதிக வாக்குகள் கொடுத்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் போன்ற வடக்கு கிழக்கு தமிழரும் மகிழ்ந்தனர். அதேவேளை இம் மக்களுக்கு இந்தியா உலகத்தின் எப்பகுதியில் காணப்படுகிறதென தெரியாது. இந்தியாவிலிருந்து இலங்கை வந்த மக்களின் சந்ததியாகவே, அப்போதிருந்த மக்கள் காணப்பட்டனர். இந்தியாவின் மண்ணை காணாததினால் அங்கு அடிக்கடி போகவில்லை என்று கூறலாம். அதிக அந்நிய நாட்டு செலாவணியை தேடித்தரும் மக்களுக்கா இந்த அவல நிலை என எண்ணும் போது பாரதியார் பாடிய பாடல் பொருந்துகிறது.

**நெஞ்சு பொறுக்குதிலையே ' இந்த நிலைக்கிட்ட மனிதரை நினைத்து விட்டால்**

என்ற பாரதியாரின் வரிகள் உண்மையை பிரதிபலிக்கின்ற வார்த்தைகள் என்று மட்டும் கூறமுடியாது. பாரதியார் உண்மையாகவே இம்மாதிரியான மக்களுக்காய் கூறியுள்ளார். அடிமைகளாய் கொண்டுவந்த இடத்தில் ஏதோ விமோசனம் கிடைக்கின்றது என்று எண்ணிய வேளையில், 'எதற்கடா உனக்கு விமோசனம்?' என்று தேயிலை தோட்ட மக்களை உதறித்தள்ளினர். இவர்களின் வலிமை, ஊக்கம், உணர்வு அத்தனையையும் பறித்து பழைய சேற்றினுள் அமிழ்த்தினர். ஆனால் இவர்களின் உழைப்பின் பலனாக கிடைக்கும் தேயிலை மூலம் அதிக வருமானத்தை இந்நாடு பெற்றுக்கொண்டது. ஏறக்குறைய 30 ஆண்டுகள் இந்நிலையில் தத்தளித்தனர்.

ஒருவர் இந் நாட்டின் பிரஜாவுரிமை பெறுவதற்கு, அவரது தகப்பனின் (இலங்கையில் பிறந்த) பிறப்பு சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென்ற சட்டத்தைக் கொண்டுவந்தனர். படிப்பறிவில்லாத பாமர மக்கள் அந்நாட்களில் தாங்கள் இருக்கும் தோட்டத்தில் மட்டுமே, பிறப்புப் பதிவு செய்யவேண்டும். அவ்விதம் செய்தால் பிறப்புச் சான்றிதழ் கிடைத்துவிடும். என்ற விளக்கமற்ற அறிவைப் பெற்றிருந்தனர். இதனைப் பெறுவதற்காக அலைந்து திரிந்து, சிலவேளைகளில் தரகருக்குப் பணம் கொடுத்து ஏமாந்து அலைகழிக்கப்பட்டு எப்படியோ பிறப்புச் சான்றிதழ்களை எடுத்து, குடியுரிமை சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ள பல ஆண்டுகள் சென்றன. இதிலும் விண்ணப்பித்த 825,000 பேரில் 134,000 பேருக்கு மட்டுமே பிரஜாவுரிமை கிடைத்தது.

### நாடற்றவர்கள் - நாடு கடத்தப்பட்டவர்கள்

"முடிந்தால் பத்துப் பேருக்கு உதவு, இல்லையென்றால் நடக்கும்போது வழியில் கண்ணாடித் துண்டுகள் கிடந்தால் குப்பைத்தொட்டியில் போட்டுவிடு அதுவும் ஒரு சேவைதான்" என்பது போல, இலங்கையில் நொண்டி மசோதாவினால் 'நாடற்றவர்கள்' என்ற நிலையில் கிடக்கும் தென்னிந்தியரை எங்கு போட்டுவிடுவது என்ற சேவை மனப்பான்மை இரு நாடுகளுக்கும் மேலோங்கியது. 1950இல் இரு நாடுகளும் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டன. இந்திய அரச யாப்பின் 5 ஆம் விதிப்படி, தேயிலைத் தோட்ட மக்கள் இந்திய குடிமக்களாகப் பதிவுசெய்யப்படவேண்டும் என்று இலங்கை வற்புறுத்தியது. இந்தியா இதனை மறுத்தது.1950 ற்கு முன்பு இந்திய குடிமக்களாகப் பதிவு செய்யப்பட்டவர்களை மட்டுமே தாங்கள் ஏற்பதாக இந்தியா கூறியது. இதனால்

**ஸ்ரீ முகன்**

975,000 இலங்கை வாழ் இந்திய தமிழர்கள் என்ற பட்டம் சூடி பரிதாபமான நிலைக்குக் தள்ளப்பட்டனர்.

1954இல் நேரு- கொத்தலாவல ஒப்பந்தம் பலனளிக்கவில்லை. 1964.10.30 ஆம் திகதியில் ஸ்ரீமா- சாஸ்திரி ஒப்பந்தம் மூலம் 'நாடற்றவர்கள்' என்று பெயர் வாங்கினார்கள், 'நாடுகடத்தப்பட வேண்டியவர்கள்' என்ற நிலைக்கு தள்ளப்பட்டனர். 16 வருடங்கள் பிரஜாவுரிமை பறிக்கப்பட்ட நிலையிலிருந்த 975,000 பேரில், 375,000 பேருக்கு 15 வருடங்களுக்கிடையில் பிரஜாவுரிமை வழங்குவதாகவும், ஏனைய 600,000 பேர்களுக்கு இந்திய பிரஜாவுரிமை வழங்க வேண்டுமெனவும் , ஏனைனோர் கட்டம் கட்டமாக இந்தியா அனுப்பப்படுவர் எனவும் , இவ்வுடன் படிக்கையில் தீர்மானிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தியது.

மனித உரிமை சாசனத்தில் 15 ஆம் விதிப்படி , ஒவ்வொருவனும் பிரஜையாவதற்கு உரிமையுண்டு என்பதை , இலங்கை எவ்விதம் பிரயோகிக்கின்றதென்று இம்மக்கள் மூலம் அறியலாம். இவர்களுக்கு கொடுக்கப்பட்ட தீர்ப்பு, மனித உரிமை சாசனத்தை மீறிய தீர்ப்பு என தெரிகிறது.

**இரக்கமென் றொருபொரு ளில்லா அரக்கர்**

*-கம்பர்*

என்று கம்பர் கூறின நிலை, அம்மக்களின் வாழ்க்கையில் எப்போதும் தொடர்கின்றது.

**(துளிர்க்கும்)**

# வெளியே சிரிப்பும் உள்ளே அழுகையுமாக வாழ்ந்தேன்”



**ஒரு** உயரமான சாலையிலிருந்து ஆற்றில் குதிக்கத் தன்னைத் திடப்படுத்திக் கொள்கிறாள். அந்த நேரத்தில் ஒரு வசதியான குழந்தை தள்ளாடிக் கொண்டே அங்கு வருகிறது. அவள் ஆடையைப் பிடித்து இழுக்கிறது. அதைக் கண்டவுடன் அவள் மனம் மாறுகிறது. வாழ நினைக்கிறாள்....

கைக் குழந்தையை எடுத்துக்கொண்டு சாப்ளின் தன் ஒரு அறை மாளிகைக்குத் திரும்புகிறார். அந்த ஒரே அறைதான் அவருடைய சமையலறை...சாப்பாட்டு அறை... படுக்கை அறை....குளியலறை... வரவேற்பு அறை எல்லாமே! அந்தச் சூழ்நிலையில் அவரோடு கைக்குழந்தை வேறு. அதைத் தன்னுடையதாகவே பாவித்து குழந்தையை வளர்க்கத் தொடங்குகிறார். பழைய டீ பாட்- டீ தயார் செய்யும் பாத்திரம்- அதற்கு கிண்டியைப் போலவே ஒரு குழாய் அமைப்பொன்று இருக்கும். அதில் பாலை ஊற்றி, பீடிங் பாட்டிலாகவே மாற்றி விடுகிறார் சாப்ளின். ஆங்கிலத்தில் “நெஸஸிட்டி இஸ் தி மதர் ஆ.்.ப் இன்வென்ஷன்’ (Necessity is the mother of Invention) (தேவை தான் கண்டுபிடிப்புக்குத் தாய்.) அந்த



வகையில் தன்னிடம் இருக்கும் தட்டுமுட்டுச் சாமான்களை, வசதியான வீட்டில் வளரும் குழந்தைக்குத் தேவையான கருவிகளாக மாற்றி விடுகிறார் சாப்ளின்.

ஒரு பழைய துணியை எடுத்து மடித்து கூரையிலிருந்து தொங்க விடுகிறார். அதுதான் குழந்தைக்குத் தொட்டில்!

மேல் நாடுகளில் குழந்தைகளுக்கு மலஜலம் கழிவு விவகாரங்களை முறையே கற்றுக் கொடுப்பார்கள். இதற்கு ‘டாய்லெட் ட்ரெயினிங்’ என்று பெயர். அதற்கு ஒரு உயரமான நாற்காலி. உட்காருமிடத்தில் பெரிய வட்டமான ஓட்டை இருக்கும். அதற்குச் சரியாக ஒரு பாத்திரம். இதை பாட் என்பார்கள்.

சாப்ளின் தன்னிடமிருந்த ஒரு பழைய நாற்காலியை எடுத்து உட்காருமிடத்தில் இருந்த பிரம்பை வெட்டி விடுகிறார். அந்த ஓட்டைக்குக் கீழே ஒரு பழைய பாத்திரம்.

இப்படியே ஐந்தாண்டுகள் உருண்டோடி விடுகின்றன....

ஐந்து வயதுக் குழந்தைதான் ‘ஜாக்கி கூகன்’. சாப்ளின் தான் தன் தந்தை என்ற எண்ணத்தோடும், பாசத்தோடும் வளர்ந்தவன் அந்தச் சிறுவன். சாப்ளினும் அவனைச் சொந்த மகனாகவே நினைத்து வளர்க்கிறார். அக்கம் பக்கத்துக்காரர்கள் அவன் பெயர் என்ன என்று கேட்கும்பொழுது, நீண்ட யோசனைக்குப் பிறகு ஜான் என்று சொல்கிறான்.

ஐந்து வயதுக் குழந்தையை வளர்க்கும் பொறுப்பு, சாப்ளினை வருவாயை உருவாக்க வழிகளைத் தேடத் தூண்டுகிறது. வேலை என்பது ஆளைத் தேடி வருவதில்லை. தேவையானவன் அதைத் தேடி ஓடுவது என்பதை அறிந்தவர் சாப்ளின்! வேலையை உண்டாக்க ஒரு புதிய யுக்தியைக் கடைப்பிடிக்கிறார். அதில் சிறுவன் ஜானுக்கும் பாதிப் பங்குண்டு. சாப்ளின், வீடுகளில் உடைந்த கண்ணாடி ஜன்னல்களைச் சீர் செய்யும் தொழிலை ஆரம்பிக்கிறார். வேலையை உண்டாக்கச் சிறுவனை வீடுகளில் கண்ணாடியை உடைக்க அனுப்புகிறார்! ரோட்டில் கிடக்கும் கற்களை எடுத்துக் கொண்டு அவன் பந்துபோல் தெருவில் விளையாடுவான். யாரும் பார்க்காத நேரத்தில், ஜன்னல் கதவுகளை உடைப்பான் கல்லை வீசி! உடனடியாகக் காற்றை விட வேகமாக மறைந்து விடுவான். சில நொடிகளில் அந்த வீட்டுக்குத் தொழிலாளி சாப்ளின் வருவார். வீட்டு எஜமானி ஜன்னல் கண்ணாடி உடைந்த சத்தத்தைக் கேட்டு வெளியே வரும்போது, அதைச் சரி பார்ப்பவன் உடனடியாக வருவது தான் செய்த பாக்கியம் என்று கருதுகிறாள்! சாப்ளினுக்குத் தொழிலும் கிடைக்கிறது. வருமானமும் கிடைக்கிறது. வாழ்க்கையும் இனிக்கிறது!

ஒருநாள் சிறுவன் ஒரு ஜன்னலின் மேல் கல்லை வீசி எறியத் தயாராக நிற்கிறான். கையைத் தூக்கும் பொழுது பின்னால் எங்கேயோ இடிக்கிறது. திரும்பிப் பார்க்கிறான். அங்கு நிற்பான் ஒரு பொலிஸ்காரன்! மிகச் சாதுரியமாகக் கையை வளைத்து, பந்துபோல கற்களைத் தூக்கி விளையாடுகிறான். பொலிஸ்காரன் இவனைப் பார்த்துச் சிரிக்கிறான். திடீரென்று சில அடிகள் நடந்து, சிட்டாய்ப் பறந்து விடுகிறான்.



ஒருநாள் இன்னொரு வீட்டு ஜன்னல் உடைகிறது. வழக்கம் போல சாப்ளின் ஜன்னலைச் சரி செய்கிறார். அந்த வீட்டுக்காரி வாட்டசாட்டமான உடலமைப்பைக் கொண்டவள். அவளுடன் சரஸமாடுகிறார் சாப்ளின். உள்ளிருந்து ஜன்னல் வழியாக எட்டிப் பார்க்கிறான் கணவன். அவன் தான் அந்தப் பொலிஸ்காரன்! பொலிஸ்காரன் சாப்ளினைத் துரத்த, அவருடன் சிறுவனும் சேர இருவரும் ஓட்டம் பிடிக்கிறார்கள்.

இருவரும் ஒன்றாக ஓடுவதைப் பார்த்தால் வம்பு வரும் என்று சிறுவனுக்கும் தனக்கும் தொடர்பே இல்லை என்ற வகையில் சாப்ளின் ஓடிக்கொண்டே தன் முழங்காலால் பையனை விலக்கித் தள்ளுகிறார். விஷயம் அறியாத சிறுவன் மீண்டும் ஒட்டிக்கொள்கிறான். மீண்டும் அவனை உதறித் தள்ளுகிறார்....

(இந்தக் காட்சி திரைப்பட வரலாற்றிலேயே இடம்பெற்றது. உலகெங்கும் சிரிப்பு அலைகளை எழுப்பியது. எண்பது ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டாலும், இன்றும் இந்தக் காட்சியைப் பார்ப்பவர்கள் விழுந்து விழுந்து சிரித்துக் கொண்டிருக்கிறார்கள். சாப்ளின், கூகன் இருவரின் வசனமே இல்லாத நடிப்பு மக்களை ஆனந்தக் கூத்தாட வைத்தது.)

இந்த ஜன்னல் கண்ணாடி உடைக்கும் காட்சி உலகெங்கும் பல மொழிப் படங்களில் அப்படியே வைக்கப்பட்டது. இதை முதலில் கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் 1943இல் வெளிவந்த ஜெமினி ஸ்டுடியோவின் தயாரிப்பான ‘மங்கம்மா சபதம்’ படத்தில் வைத்தார். இந்தக் காட்சிக்காகவே தென்னகமெங்கும் பலர் மீண்டும், மீண்டும் பார்த்தார்கள். என்.எஸ்.கிருஷ்ணன், சார்லி சாப்ளினைத் தன்னுடைய மானசீகக் குருவாகவே ஏற்றுக்கொண்டிருந்தார். பின்னாளில் பல தமிழ் நகைச்சுவை நடிகர்கள், இதைத் தாங்கள் நடித்த படங்களில் புகுத்தினார்கள்.

இந்த வரலாறு படைத்த காட்சி சாப்ளின் மனதில் எப்படி உதித்தது? உலகில் முழுமையான கற்பனை என்று எதுவுமே இல்லை. எல்லாவற்றுக்குமே ஒரு உண்மைக் கரு நிச்சயமாக இருக்கும். அதுபோலவே இந்தப் பிரபல காட்சிக்கும் ஒரு பின்கதை (Back Story) உண்டு.

சிறுவனாக இருந்தபொழுது, சாப்ளின் இங்கிலாந்தில் ‘.்.ப்ரெட் கார்னோ’ குழுவில் இருந்தார். கார்னோ, சாப்ளினைப் போலவே இளமையை வறுமையில் கழித்தவர். அவருடைய நெருங்கிய உறவினர் கண்ணாடி ஜன்னல்களைப் பழுது பார்ப்பவர்.

*(தொடரும்)*

# மம்பட்டியானின் வாழ்க்கை

**சந்தனக்** கடத்தல்காரன் வீரப்பனைப்போல, 50 ஆண்டுகளுக்கு முன்பு பொலிஸாருக்குச் சிம்ம சொப்பனமாக விளங்கி, மக்களிடம் பரபரப்பாகப் பேசப்பட்டு வந்தவன் மம்பட்டியான்.

இந்த மம்பட்டியானைக் கதாபாத்திரமாக வைத்து, ‘மலையூர் மம்பட்டியான்’ என்ற பெயரில் சினிமாப்படம் வெளிவந்தது. தியாகராஜன் - சரிதா நடித்த இந்தப் படம் ஓகோ என்று ஓடி வசூலை வாரிக் குவித்தது நினைவிருக்கலாம்.

மம்பட்டியான் சாதாரண ஆள் அல்ல. 27 கொள்ளை, 09 கொலை வழக்கில் சம்பந்தப்பட்டவன். பொலிஸ் கண்களில் மிளகாய்ப் பொடியைத் தூவி விட்டு காடுகளில் 5 ஆண்டு காலம் தலைமறைவாக வாழ்ந்தவன்.

ஆனால் காதல் மோக உருவில் எமன் அவனுடைய உயிரைப் பறித்துக்கொண்டான்.

சுருக்கமாகச் சொன்னால் மம்பட்டியானின் வாழ்க்கை, மர்மக் கதைகளில் வரும் சம்பவங்கள் போல இருக்கும்.

### 2 மனைவிகள்

மம்பட்டியானின் உண்மை பெயர் அய்யாத்துரை. சேலம் மாவட்டம் மேச்சேரி பொலிஸ் சரகம் கொல்காரனூர் என்ற கிராமத்தைச் சேர்ந்தவன். தந்தை பெயர் மொட்டையன்.

மம்பட்டியானுக்கு 2 மனைவிகள். மூத்த மனைவியின் பெயர் சின்னப்பிள்ளை என்கிற நல்லம்மாள். இவளுக்கு நல்லப்பன் என்ற மகனும், பாப்பா என்ற மகளும் இருந்தனர்.

2ஆவது மனைவி மாந்தியம்மாள். இவளுக்கு 2 மகள்களும், ஒரு மகனும் இருந்தார்கள். அவனுக்கு சகோதரனும் இருந்தான். அவனுடைய பெயர் ஊமையன்.

### பெயர் வந்தது எப்படி?

மம்பட்டியான் நெடுஞ் சாலைத்துறையில் கூலி வேலை செய்து வந்தவன். எப்போதும் தோளில் மண்வெட்டியை சுமந்தபடியே திரிவான். அவனது முகத்தில் கீழ் தாடை பகுதியும், மண்வெட்டி போல குவிந்திருக்கும். இவற்றையெல்லாம் வைத்து அவனுக்கு நெருக்கமானவர்கள் மம்பட்டியான் என்று அழைத்தார்கள்.

நாளடைவில் அய்யாத்துரை என்பது மாறி மம்பட்டியான் என்ற பெயரே நிலைத்தது. பொலிஸ் ரிக்கார்டுகளிலும் மம்பட்டியான் என்றே பதிவானது. மம்பட்டியானை சுற்றி எப்போதுமே இளைஞர் பட்டாளம் இருந்து கொண்டே இருந்தது. இதுவே அவனை கோஷ்டி தலைவனாக உயர்த்தியது.

தொடக்கத்தில் மனைவி, குழந்தை, குடும்பம் என்றிருந்த மம்பட்டியான் வாழ்க்கை, திடீரென்று தடம் புரண்டது. அடிதடி - மோதல், பொலிஸ் வழக்கு என்று சிக்குண்டான். போகப்போக அவை கொலைகாரன், வழிப்பறி கொள்ளைக்காரன் என்ற நிலைக்கு கொண்டு போய்விட்டது.

### முதல் கோஷ்டி மோதல்

மம்பட்டியான் வாழ்ந்த அதே ஊரில் மாரிமுத்துசாமி, முத்துசாமி என்ற மிராசுதாரர்கள் வாழ்ந்தார்கள். இருவரும் நெருங்கிய உறவினர்கள். இந்த இருவருக்கும் அடுத்தடுத்து நிலம் இருந்தன. அந்த பண்ணை நிலத்தில் வீடு கட்டி குடியிருந்தும் வந்தார்கள்.

அங்கிருந்து சுமார் ஒரு கிலோ மீற்றர் தூரத்தில் மேச்சேரி என்ற ஊர் இருக்கிறது. ஆடி மாதம் மாரியம்மன் கோவில் திருவிழா சிறப்பாக கொண்டாடப்படும்.

இந்த திருவிழாவில் ‘வண்டி வேஷம்’ என்ற நிகழ்ச்சி



விசேஷமாக இடம் பெறும். அலங்கரிக்கப்பட்ட மாட்டு வண்டியில் ராமாயணம், மகாபாரதம் போன்றவைகளில் வரும் கதாபாத்திரங்கள் போல வேடமிட்டு செல்வார்கள்.

இதற்கு மாரிமுத்துசாமி, முத்துசாமி இருவருமே ஒன்றாக இணைந்து ஏற்பாடு செய்வார்கள். திருவிழாவுக்குச் சேர்ந்தே சென்று திரும்புவார்கள்.

கொஞ்ச நாளில் இருவருமே தனித்தனி ஏற்பாடு செய்தார்கள். ஆனாலும் ஒன்றாகவே மாட்டு வண்டி கட்டி திருவிழாவுக்குச் செல்வார்கள்.

இந்த நிலையில் திருவிழா நடைபெறும்போது முத்துசாமி பெட்டிக்கடை போடுவார். அதில் நல்ல வியாபாரமாகி பணம் குவிந்தது. இதனால் அவருடைய கை ஓங்கியது. இது இருவருக்கும் இடையே மனக்கசப்பை ஏற்படுத்தியது.

தனித்தனி கோஷ்டியாக செயல்படத் தொடங்கினார்கள். அப்போது மம்பட்டியானும், அவனது அண்ணன் ஊமையன், தந்தை மொட்டையன் ஆகியோர் மாரிமுத்துசாமிக்கு ஆதரவாக இருந்தனர்.

1956ஆம் ஆண்டு திருவிழாவுக்கு முத்துசாமியும் ஆதரவாளர்களும் புறப்பட்டு சென்றபோது மாரிமுத்துசாமியின் கோஷ்டி வழி மறித்து கற்களை வீசி தாக்கியது. இதனால் அந்தப் பகுதியில் பதற்றம் ஏற்பட்டது. பொலிஸார் குவிக்கப்பட்டார்கள்.

திருவிழாவில் பெரிய மோதல் ஏற்பட்டுவிடக்கூடாது என்பதால் 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. வேடம் போட்டு ஆடுவதற்கும் இரு தரப்பினருக்கும் தடை போடப்பட்டது. இந்த சம்பவங்கள் குறித்து ஆர்.டி.ஓ.விசாரணை நடைபெற்றது. ஆனாலும் பகை புகைந்து கொண்டே இருந்தது.

### மம்பட்டியான் தந்தை கொலை

முத்துசாமியின் மூத்த மகன் பழனி கவுண்டர் தென்னந் தோப்புக்குச் சென்று கொண்டிருந்தபோது தாக்கப்பட்டார். மம்பட்டியான் உட்பட 17 பேர் மீது வழக்கு தொடரப்பட்டது. இதில் அனைவரும் விடுதலையானார்கள்.

30.05.1957 அன்று கோர்ட்டில் இருந்து திரும்பும்போது மம்பட்டியானின் தந்தை மொட்டையன் மற்றும் உறவினர் பொன்னு கவுண்டர் ஆகியோர் சுட்டுக் கொல்லப்பட்டனர். இந்த வழக்கில் முத்துசாமி கோஷ்டியைச் சேர்ந்த 9 பேருக்கு தலா 3 ஆண்டு ஜெயில் தண்டனை கிடைத்தது.

தந்தை கொலையுண்டதால் மம்பட்டியான் ஆத்திரத்துடன் திரிந்தான்.

### ஒரே நேரத்தில் 9 பேர் படுகொலை

இந்த நிலையில் 02.08.1959 அன்று முத்துசாமியும், அவனது மகன்களும் மேச்சேரியில் கடையில் உட்கார்ந்து வியாபாரம் பார்த்துக் கொண்டிருந்தனர். அங்கு திரளாக கூட்டம் இருந்தது.

காலை சுமார் 11 மணி இருக்கும். மம்பட்டியானும், அவனது கோஷ்டியும் பயங்கர ஆயுதங்களுடன் வந்தனர். கடையில் இருந்தவர்களை சரமாரியாக வெட்டினார்கள். இதில் முத்துசாமி, அவரது மகன்கள் வேலாயுதம், சின்னக்குட்டி, வைத்தி ஆகிய 4 பேரும் அதே இடத்தில் துடிதுடித்துச் செத்தனர்.

இன்னொரு மகன் பரமசிவம் வெட்டுக்காயங்களுடன் ஓடி அருகில் இருந்த வீட்டிற்குள் நுழைந்தார். அவரை மம்பட்டியான் கோஷ்டி விரட்டிச்சென்று தேடியது. அந்த வீடு முழுவதும் சோதனை போட்டது.

அந்த வீட்டுக்காரப்பெண் தந்திரமாக பரமசிவத்தை ஒரு பெரிய பாத்திரத்தைப் போட்டு மூடி வைத்துவிட்டாள். இதனால் பரமசிவம் கொலைகாரக் கும்பலிடம் இருந்து உயிர் தப்பினார். (இவர் பிற்காலத்தில் தாரமங்கலம் தொகுதி எம்.எல்.ஏ.ஆனார்.)

பிறகு மம்பட்டியான், அவனுடைய அண்ணன் ஊமையன் உட்பட 7 பேர் சொந்த ஊருக்குத் திரும்பிச்சென்று முத்துசாமியின் உறவினர்களை வீடு வீடாக புகுந்து தாக்கினார்கள். சுப்பிரமணியம் என்பவரைத் தாக்கிக் கொன்றனர்.

அவர் இருந்த தறி கொட்டகையும் தீ வைத்துக் கொளுத்தினர். பிணம் தீயில் எரிந்து கரிக்கட்டையானது. அயுண்டன், பச்சான் மேலும் 2 பேரும் படுகொலை செய்யப்பட்டனர்.

சுமார் ஒரு மணி நேரத்தில் 9 பேரைக் கொன்று மம்பட்டியான் பழிக்குப்பழி தீர்த்தான். கொலைப் படலத்தை முடித்ததும் மம்பட்டியான் கோஷ்டி காட்டுக்குள் தப்பி ஓடிவிட்டது.

இந்த படுகொலை சேலம் மாவட்டத்தையே உலுக்கியது. சம்பவ இடத்தைக் கலெக்டர் அம்புரோஸ், பொலிஸ் அதிகாரி ஏ.சி.ஆதித்த நாடார் ஆகியோர் சென்று பார்வையிட்டார்கள். மம்பட்டியான் உட்பட 9 பேர் மீது வழக்குப்பதிவு செய்து தேடினார்கள்.

### கொள்ளையனாக மாறினான்

காட்டில் மறைந்து வாழ்ந்த அந்த சமயத்தில் மம்பட்டியான் கொள்ளைக்காரனாக மாறினான். மேச்சேரி, பெண்ணாகரம், கொல்லேகால் ஆகிய பகுதிகளில் ஊருக்கு வெளியே இருக்கும் வீடுகளில் புகுந்து கொள்ளையடித்தான். தனியாக வரும் ஆட்களை மிரட்டி வழிப்பறி கொள்ளை நடத்தினான்.

இப்படி 2 ஆண்டுகள் வரை மம்பட்டியானும், அவனது அண்ணன் ஊமையனும் ஒன்றாக காட்டில் திரிந்தனர். திடீரென்று அண்ணன் - தம்பிக்குள் மோதல் ஏற்பட்டது. மம்பட்டியானை விட்டு ஊமையன் பிரிந்தான்.

### ஊமையன் சுட்டுக்கொலை

இந்த தகவலை அறிந்த பொலிஸார் தனிப்படை அமைத்து தீவிர தேடுதல் வேட்டை நடத்தினார்கள். 06.03.1961 அன்று சப்-இன்ஸ்பெக்டர்கள் தவுலத் அலி, நாகராஜன் ஆகியோர் தலைமையில் ஆயுதப்படை பொலிஸார் மேச்சேரி அருகில் காட்டுக்குள் நுழைந்து தேடினர்.

அங்கு பதுங்கி இருந்து ஊமையனைச் சுற்றி வளைத்தனர். அங்கு நடந்த துப்பாக்கிச் சண்டையில் ஊமையன் சுட்டுக் கொல்லப்பட்டான்.

### துப்பாக்கிச் சண்டை

மேட்டூர் பகுதியில் மம்பட்டியான் இருப்பதாகப் பொலிஸிக்கு தகவல் கிடைத்தது. 08.07.1963 அன்று சப் - இன்ஸ்பெக்டர் மயில்சாமி தலைமையில் பொலிஸ் படை மேட்டூரில் இருந்து 20 கிலோ மீற்றர் தொலைவில் இருக்கும் தண்டைக்காய் மலைக்கு சென்றனர்.

அங்கு மம்பட்டியான் கோஷ்டி சமையல் செய்து கொண்டிருந்தனர். இரு தரப்பினருக்கும் இடையே கடுமையான துப்பாக்கிச் சண்டை நடந்தது.

இதில் மம்பட்டியானின் கோஷ்டியைச் சேர்ந்த கண்ணு போயன், கோவிந்தன் ஆகியோர் கொல்லப்பட்டனர். சப்-இன்ஸ்பெக்டர் மயில்சாமி குண்டு பாய்ந்து காயம் அடைந்தார்.

மம்பட்டியானும், வேறு சிலரும் ஓடினார்கள். பொலிஸார் விரட்டிச்சென்று 2 பேரை பிடித்தார்கள். ஆனால் மம்பட்டியான் பொலிஸிடம் சிக்காமல் தப்பி விட்டான்.

பின்னர் மம்பட்டியானுக்கு எப்படி வலை விரிக்கப்பட்டது? அவன் எவ்வாறு சுட்டுக் கொல்லப்பட்டான் என்பதை அடுத்தவாரம் எதிர்பாருங்கள்.

# முட் பாதையில் மரித்த மிதவாதம்

**இரு எழுத்தாளர்கள் சேர்ந்து எழுதும் இலங்கைத் தமிழ் அரசியல் தொடர் இது.**

## இந்தியப் படை வெளியேறியதும் வடக்கு - கிழக்கு புலிகளின் கைகளுக்குள் வந்தது

**இலங்கையை** விட்டு வெளியேறிய இந்தியப் படை, தமிழ் நாட்டுக் கரையைச் சென்றடைந்தபோது, அப்போது தமிழகத்தில் பதவியிலிருந்த கருணாநிதியின் அரசாங்கம் இந்தியப் படையை வரவேற்கவில்லை. இலங்கையினதும் இந்தியாவினதும் நலன்களைப் பாதுகாப்பதற்காகவே இந்தியப் படை இலங்கையின் வடக்கு - கிழக்குக்குள் சென்றதெனக் கருதிய தமிழகத் தலைவர்கள், கருணாநிதியின் இந்தச் செயல் குறித்து வேதனையும் ஆத்திரமும் அடைந்தனர். ஆனால் புலிகள்




இயக்கத்துக்கு ஆதரவும் உதவியும் வழங்கி வந்த கருணாநிதியின் அரசு, இந்தியப் படையை ஆக்கிரமிப்புப் படையாகக் கருதியதால் வரவேற்பளிக்கத் தவறியது. அப்போது தமிழகத்திலிருந்த சில புலிச்சார்பு அரசியல் சக்திகள், இந்தியப் படையை "தமிழர்களைக் கொல்லும் இந்தியப் படை" என்று கூட விமர்சித்தன. இதற்கிடையில், புலிகள் இயக்கம் "இந்தியாவின் சாத்தான் படை" என்ற தலைப்பில் கைநூலொன்றினை வெளியிட்டது. அதில் இந்தியப் படையின் நடவடிக்கைகள் குறித்து பல்வேறு விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டிருந்தன. ஆதாரமில்லாத குற்றச்சாட்டுகளும் தெரிவிக்கப்பட்டிருந்தன.

இந்திய அமைதிப்படை இலங்கையை விட்டு வெளியேறிய ஒரு வார காலத்துக்குள் இலங்கையின் வடக்கு - கிழக்கைப் புலிகள் இயக்கம் தனது பூரண கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தது. இதனைத் தடுக்கப் பிரேமதாசா அரசாங்கத்தினால் முடியவில்லை. அப்போது கலந்துரையாடல்கள் மூலமோ அல்லது இராணுவ நடவடிக்கைகளின் மூலமோ இதனைத் தடுக்க பிரேமதாசா அரசாங்கம் முன்வரவில்லை. இலங்கையின் வடக்கு - கிழக்கு 1983 முதல் 1987 வரை இருந்த நிலைக்கு மீண்டும் 1990 ஏப்ரலில் திரும்பியது. தமிழ்நாட்டிலிருந்து புலிகள் இயக்கத்



1961ஆம் ஆண்டு நடைபெற்ற சத்தியாக்கிரகத்தின் போது கைது செய்யப்பட்டுத் தடுப்பு காவலில் வைக்கப்பட்டிருந்த அமிர்தலிங்கம் சிறை மீண்ட போது தமிழகக் கட்சி தலைவர்கள் வரவேற்பதை படம் காட்டுகிறது.

துக்கு அரசியல் ஆதரவும் ஆயுதங்களும் வரத் தொடங்கியதால், தாக்குதல் நடவடிக்கைகளுக்கு அந்த இயக்கம் தன்னைத் தயார் செய்யத் தொடங்கியது. 1989ஆம் ஆண்டு மே மாதம் இலங்கை அரசாங்கத்துக்கும் புலிகள் இயக்கத்துக்குமிடையில் ஆரம்பமான பேச்சுவார்த்தைகளை ஆட்டங்காணச் செய்யும் நடவடிக்கைகளில் புலிகள் இயக்கம் ஈடுபட்டது. 1990இன் மத்திய பகுதியில் பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்தது. பேச்சுவார்த்தைக்கென யாழ்ப்பாணம் சென்றிருந்த அமைச்சர் ஏ.சீ.எஸ். ஹமீத், கொழும்பு திரும்புவதற்காக விமானமேற வந்தபோது, புலிகளின் ஏவுகணைக் குண்டுகள் அவருக்கண்மையில் வீழ்ந்து வெடித்தன. அவர் மயிரிழையில் உயிர் தப்பினாரென்றே கூற வேண்டும்.

(அரசியல் தொடர்)

புலிகள் இயக்கத்துடன் ஜனாதிபதி பிரேமதாசா கொண்டிருந்த தொடர்புகளை விமர்சித்துவந்த எதிர்க்கட்சிகளுக்கு இது நல்ல சந்தர்ப்பமாக அமைந்தது. பிரேமதாசா மீதும் அவரது அரசாங்கத்தின் மீதும் கடுமையான தாக்குதல்களை மேற்கொள்ளத் தொடங்கின. இலங்கை அரசாங்கம் வடக்கு - கிழக்கில் தனது அதிகாரத்தை நிலைநாட்ட முனைந்தது. புலிகள் இயக்கம் மீண்டும் வன்செயல் நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கான நியாயங்களைக் கற்பிக்க முனைந்தது. 1989ஆம் ஆண்டு மே மாதம் ஆரம்பிக்கப்பட்ட பேச்சுவார்த்தைகளை தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் அமிர்தலிங்கம் வரவேற்றுப் பேசினார். ஜுலை மாதம் நான்காம் திகதி பாராளுமன்றத்தில் ஆற்றிய உரையின்போது, பேச்சுவார்த்தையை வரவேற்ற அமிர்தலிங்கம், ஏற்படக்கூடிய ஆபத்துகள் பற்றியும் எதிர்வு கூறினார். பேச்சுகள் முறிந்தால் ஏற்படக்கூடிய ஆபத்துப் பற்றியும் அவர் எச்சரித்தார். அமிர்தலிங்கம் தனது உரையில் கீழ்க்கண்டவாறு கூறினார்: "எல்.ரி.ரி.ஈ.யுடன் பேச்சு வார்த்தையை ஆரம்பிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கையை நாம் வரவேற்கிறோம். ஆனால் இத்தகைய பேச்சுவார்த்தை முன்னெடுப்புகளின் மூலம், ஏற்கனவே ஜனநாயக வழிமுறைக்கு வரத் தூண்டப்பட்டவர்களை மீண்டும் காடுகளுக்குள் நாம் விரட்டக் கூடாது. பேச்சுவார்த்தை மேலும் பரவலாக்கப்பட வேண்டும். மேலும் பலரை இப் பேச்சுகளில் கலந்து கொள்ளுமாறு அழைக்க வேண்டும். இந்தியாவும் அழைக்கப்பட வேண்டும். தற்போதைய நிலைமையைப் பயன்படுத்தி, அரசியல் இலாபம் தேட எவரும் முனையக் கூடாது" என்று அமிர்தலிங்கம் குறிப்பிட்டிருந்தார்.

தமிழ் மக்களின் பிரச்சினைகளைப் பயன்படுத்தி சிங்களத் தலைவர்கள் அரசியல் விளையாட்டு நடத்துகின்றனர் என்பதே அமிர்தலிங்கத்தின் முக்கிய ஆதங்கமாக இருந்தது. தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான அணுகுமுறையை, குறுகிய அரசியல் நோக்கமின்றி மேற்கொள்ளுமாறு அவர் ஐ.தே.க.வினதும் சுதந்திரக் கட்சியினதும் தலைவர்களை வற்புறுத்தி வந்துள்ளார். இனப்பிரச்சினைக்குத் தீர்வொன்றினைக் காண்பதற்கு ஐ.தே.க.வும், சுதந்திரக் கட்சியும் இணையாத வரை எவ்விதப் பயனும் ஏற்படப் போவதில்லையென்பதே அவரது கருத்தாகும். அமிர்தலிங்கம் சுட்டுக் கொல்லப்படுவதற்கு ஒரு வாரம் முன்னதாக சுதந்திரக் கட்சித் தலைவி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவைச் சந்தித்துப் பேசியிருந்தார். தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணுமுகமாக ஐ.தே.க. அரசாங்கத்துடன் ஐக்கியப்பட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அப்போது அவர் வலியுறுத்தினர்.

**இணைந்து எழுதுவது**
**த. சபாரத்தினம்**
**+**
**அம்பி மகன்**

புலிகளுக்கும் பிரேமதாசா அரசுக்குமான பேச்சு வார்த்தைகள் முறிவடைந்ததையடுத்து பாராளுமன்றக் கமிட்டிகளுக்கூடாக இனப் பிரச்சினைத் தீர்வு யோசனைகளை எடுக்கும் முயற்சிகளும் முறிவடைந்தன. ஒட்டு மொத்தத்தில் கூறுவதானால், புலிகளின் வழமையான வன்செயல் நடவடிக்கைகளால், பிரேமதாசா மேற்கொண்டு வந்த இனப் பிரச்சினைத் தீர்வு முயற்சிகள் இயற்கை மரண மெய்தின. இதற்கிடையில் ஐ.தே.க. அரசிலிருந்து அமைச்சர்கள் காமினி திஸாநாயக்கா, லலித் அதுலத் முதலி ஆகியோர் பிரிந்து சென்று புதிய கட்சி தொடங்கினர். பிரேமதாசா பாரிய நெருக்கடிகளைச் சந்திக்கத் தொடங்கினார். அவருக்கெதிராக பாராளுமன்றத்தில் அரசியல் குற்றப் பிரேரணையும் சமர்ப்பிக்கப்பட்டது. இருந்தாலும் பிரேமதாசா கெட்டித்தனமாகவும் தந்திரோபாயமாகவும் அதனை முறியடித்தார். 1989 ஜூனில் ஆட்சிக்கு வந்த வி.பி.சிங் அரசாங்கம், இலங்கைப் பிரச்சினையில் இந்தியா தலையிட்டமை தவறானது என்ற முடிவுக்கு வந்தது. ராஜிவ் காந்தியும் ஜெயவர்த்தனாவும் செய்து கொண்ட இலங்கை - இந்திய ஒப்பந்தம், இருநாடுகளுக்குமிடையில் மனக் கசப்பை ஏற்படுத்தியதாகவும் சிங் அரசாங்கம் கருதியது. அத்துடன் இந்திய அமைதிப் படையை இலங்கைக்கு அனுப்பியதானது, இலங்கையின் உள்விவகாரங்களில் மேற்கொள்ளப்பட்ட அநாவசியத் தலையீடென்றும் கருதியது.

வி.பி.சிங் அரசுக்கு பல்வேறு நாடுகள் நற்சான்றுகளை வழங்கிய போதிலும், புலிகள் இயக்கத்தின் வன்செயல் நடவடிக்கைகள் இலங்கையில் மட்டுமல்ல, தமிழகத்துக்கும் விஸ்தரிக்கப்பட்டது. 1990ஆம் ஆண்டு ஜுன் மாதம் 19ஆம் திகதி சென்னையிலுள்ள சாக்காரியா காலனியில் வைத்து ஈ.பி.ஆர்.எல்.எப். தலைவர் பத்நாபா உட்பட பதின்மூன்று பேர் புலிகள் இயக்கத்தினால் சுட்டுக் கொல்லப்பட்டனர். யோகசங்கரி எம்.பி., தருமன், பாட்டு ரவி, புவிநாதன், லிங்கன், ரவி, அன்பு முகுந்தன், கோமளராஜா, மிதிலன், கவிதா, ஜசிந்தா, வடக்கு- கிழக்கு மாகாண சபையின் அமைச்சராக விளங்கிய கிருபாகரன் ஆகியோரே சுட்டுக் கொல்லப்பட்டவர்களாவர். 1989ஆம் ஆண்டு ஜுலை மாதம் 13ஆம் திகதி கொழும்பில் கூட்டணித் தலைவர் அமிர்தலிங்கம் மற்றும் கூட்டணி முக்கியஸ்தர்களான யோகேஸ்வரன், சிவசிதம்பரம் ஆகியோர் புலிகள் இயக்கத்தினரால் சுடப்பட்டனர். இவர்களில் சிவசிதம்பரம் மயிரிழையில் உயிர் தப்பினார். ஏனைய இருவரும் கொல்லப்பட்டனர். இவர்களைச் சுட்டுக் கொன்றவர்கள் விசு, அலோசியஸ், அனந்தராஜ் (புலிகளின் வவுனியா பொறுப்பாளர்) ஆகியோர்களாவர்.

(தொடர்ந்து வரும்....)




தன்னை நோக்கி வந்த மூவரையும் லாவமாகத் தூக்கி வீசியெறிந்து விட்டு அவர்களை அலட்சியப்படுத்தாமல் பிரபாகரன் 'லாப்'பை நோக்கி நடந்தான். ஸ்ரீதேவியின் எலும்புக்கூட்டிலிருந்து எடுத்துக் கோணிப்பையில் போட்டுக்கொண்டு கிளம்பினான். ஏற்கனவே விழுந்து கிடந்த அந்த மூவரும் எழுந்து 'திருடன் திருடன்!' எனக் கத்தினர்.

பிரபாகரன் கோணிப்பையுடன் கேட்டை நோக்கி ஓடினான். காவற்காரர் அவனைக் கவனித்து விட்டார். அவன் கேட்டின் மீது ஏறும்போது காவல்காரர் அவனை பின்புறமாகக் கட்டிப் பிடித்தார்.

**உடனே** கேட்டிலிருந்து கீழே இறங்கிய பிரபாகரன், காவல்காரரை எரித்து விடுவது போல் பார்த்தான்.

"என்னை விட்டு விலகி நில்!" பிரபாகரன் கடுமையான குரலில் கட்டளையிட்டான். "இந்த மூட்டையுடன் உன்னை இங்கிருந்து போக நான் அனுமதிக்க முடியாது." காவல்காரரின் கையில் அடுத்த கணம் கத்தி மின்னியது.

"இந்தத் தகரம் எதுக்கு?"

"கோணி மூட்டையை நீ இங்கேயே போடலேன்னா, உன்னைக் கொல்லுறதைத் தவிர எனக்கு வேற வழி கிடையாது. நான் ரிட்டயர்டு மிலிட்டரிக்காரன்." காவல்காரர் மீசையை நீவி விட்டபடி பேசினார்.

"அப்படியா சொல்றீங்க? அப்ப நான் கட்டுப்பட்டுத்தான் ஆகணும்!" - பிரபாகரன் மீண்டும் கேட்டைப் பிடித்தான்.

"விளையாடாத...நான் பொல்லாதவன்!" - காவல்காரர் எச்சரித்தார் மீண்டும்.

சட்டென்று திரும்பிய பிரபாகரன், காவல்காரரின் சட்டையைக் கொத்தாகப் பிடித்துத் தூக்கினான். காவல்காரரின் கைகள் காற்றில் பிடியைத் தேடி அலைந்தன. கண்ணிமைப்பதற்குள் அவரைக் காவல் கூண்டுக்கு மேலாக வீசியெறிந்தான்.

இப்படியொரு தாக்குதலை காவல்காரர் எதிர்பார்க்கவில்லை என்பது புரிந்தது. சுதாகரிப்பதற்குள் உச்சியிலிருந்து உருளத் தொடங்கியவர் சுவரில் மோதி பொத்தென்று தரையில் விழுந்தார். அதன்பிறகு அவர் எழுந்திருக்க முயன்றும் முடியவில்லை.

ஆனால், திருடன் யார் என்பது அவருக்கு நன்றாக விளங்கவே செய்தது.

குமார் சாரின் நண்பர் மாதிரிதான் தெரிகிறார். அவரைப்

**எழுதுவது**
**சிவன்**

பார்ப்பதற்காக இரண்டு மூன்று தடவை காலேஜுக்கு வந்திருப்பதும் ஞாபகம் வந்தது.

அதன் பிறகு பிரபாகரன் அங்கு நிற்கவில்லை. விரைவாகக் கேட்டைத் தாண்டி வெளியேறினான்.

பன்னிரண்டு மணிக்கு மேல் ஆகியிருந்தது. அப்போது மேற்குப் பக்கத்திலிருந்து இரண்டு பொலிஸ்காரர்கள் வந்து கொண்டிருந்தனர். சமீபகாலமாகத் திருட்டுப் பயம் அதிகரித்திருந்ததால், பிரத்தியேகமாக "பீட்" போட்டிருந்தனர்.

கோணிப்பை ஒன்றைத் தோளில் போட்டுக் கொண்டு வரும் பிரபாகரனை அவர்கள் கவனித்தனர். வருபவன் நிச்சயமாகத் திருடன்தான் என்று நினைத்தனர்.

"டேய்... நில்லுடா அங்கேயே!" - ஒரு பொலிஸ்காரர் குரல் கொடுத்தார்.

சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு பிரபாகரன் அப்படியே நின்றான்.

அந்த முச்சந்தியில் அப்போது அவர்களைத் தவிர வேறு யாருமே இல்லை.

பொலிஸார் அவனை நெருங்கினார்.


"சாக்குக்குள்ள என்னடா?" - பொலிஸ்காரரின் குரல், மிரட்டல் தொனியில் இருந்தது.

"எலும்புத்துண்டுங்க!"

"மனுஷ எலும்பா?"

"ஆமாம்!"

"ஆகா நல்ல திருட்டுதான். எங்கேயிருந்து திருடிட்டு வர்ற?"



"சுடுகாட்டிலயிருந்து!" - தயங்காமல் பதிலளித்தான்.

"எங்களைத் தெரியுதில்லையா?"

"அதனாலதான உண்மையைச் சொன்னேன். சந்தேகமா இருந்தா மூட்டையை அவிழ்த்தே காட்டுறேனே!" - கோணியைத் தோளிலிருந்து இறக்கி வாய்ப் பகுதியைப் பிரித்துக் காட்டினான்.

அவர்கள் பரஸ்பரம் பார்த்துக் கொண்டனர்.

"எதுக்கு இது?" - மற்ற பொலிஸ்காரர் கேட்டார்.

"மந்திரவாதம் பண்றதுக்கு!" - பிரபாகரன் வெகு சாதாரணமான ஒரு விஷயம் என்பது போல் பேசினான்.

"சரி. எதுக்காக இருந்தாலும் நாம ஸ்டேஷனுக்குப் போயிடலாம். அங்க போன பிறகு வேணும்னா உன் மந்திரவாதத்தைச் செய்யலாம். ஸ்டேஷனில இருக்கிற மத்தவங்களும் வேடிக்கை பார்க்கலாம் என்ன சொல்ற?" மற்ற பொலிஸ்காரரைப் பார்த்து கண்சிமிட்டியபடி பேசினார்.

பிரபாகரன் சாதாரணமான ஒரு மனிதன் என்று நினைத்துத்தான் பொலிஸார் அவனிடம் பேசிக் கொண்டிருந்தனர். ஏதோ கிளம்பி வந்ததற்குப் பலனாக ஒரு புதிய கேஸ் கிடைத்ததாகவும் இருக்குமென்று கருதினர்.

"சரி, கிளம்பு ஸ்டேஷனுக்கு!"

"அங்கேயெல்லாம் வர்றதுக்கு எனக்கு நேரமில்லையே. வரவும் மாட்டேன்." பிரபாகரன் தன் வழியே நடக்க முயன்றான்.

"நில்லுடா... டேய்.... நாங்க சொல்லிக்கிட்டே இருக்கோம், நீ பெரிய ரவுடி மாதிரி போய்ட்டே இருக்க... போனாப் போகட்டும்னு பொறுமையாப் பேசினா, விளையாட ஆரம்பிச்சுட்டியா?"

ஒருவர் சட்டென்று பாய்ந்து அவனைப் பிடித்தார். ஆனால், பிரபாகரன் இரண்டு பேரையும் ஒரே நேரத்தில் இரண்டு கைகளால் தூக்கி வலுவுடன் வீசியெறிந்தான்.

அந்தரத்தில் சற்று நேரம் பறந்தவர்கள் அருகிலிருந்த ஒரு காம்பௌன்ட் சுவருக்குள் போய் விழுந்தார்கள். பிறகு எதுவுமே நடக்காததைப்போல அவன் பாட்டுக்கு நடக்கத் தொடங்கினான்.

தட்டுத்தடுமாறி எழுந்து வெளியே வந்து பார்த்தபோது பிரபாகரன் காணாமல் போயிருந்தான்.

லாறி ஒன்று அந்தப் பக்கமாக வந்தபோது கைகாட்டினான் . லாறி நின்றது. விசாரித்த பிறகு ஏறி உட்கார்ந்தான்.

"சாக்கு மூட்டையில் என்ன?" - லாறி டிரைவர் கேட்டார்.

"எடைக்குப் போட வேண்டிய பழைய அலுமினியப் பாத்திரங்க கிடக்குது!" - என்றவாறு கோணியைத் தனது காலடியிலேயே போட்டுக் கொண்டான்.

ஊரை அடையும் போது விடியற்காலை மூன்றுமணி ஆகியிருந்தது.

கோணிப் பையுடன் சந்துநாயரின் தேங்காய் கோடவுனை நோக்கி நடந்தான்.

பிரபாகரன் என்கிற கோவிந்தனை எதிர்பார்த்தபடி அங்கு ஜயந்தனும், சந்து நாயரும் கட்டிலில் படுத்திருந்தனர்.

பிரபாகரன் கதவைத் தட்டினான்.

இருவரும் எழுந்தனர்.

அவனிடமிருந்த கோணிப் பையைப் பார்த்ததும் இருவரது முகங்களிலும் மகிழ்ச்சி தாண்டவமாடியது.

"இதுதான் நமக்குத் தேவைப்பட்டதா?"

"ஆமாம்!" என்றபடி பிரபாகரன் கோணி மூட்டையைப் பிரித்தான்.

"காலதாமதம் செய்யாம உடனே எரிச்சுட வேண்டியதுதான்." - ஜயந்தன் கூறினார். (வாசனை வீசும்....)

## மனதுக்கு நிம்மதி

# ஒரு குரங்கு; நூறு அம்புகள்!

**அவசரம்...** அவசரம்.... இதுதான் இன்றைய உலகின் தாரக மந்திரம்.

'நாய்க்கு வேலையில்லை. ஆனால், நிற்க நேரமில்லை' என்று கிராமப்புறங்களில் ஒரு பழமொழி சொல்வார்களே... அதுபோல 'நான் என்ன வேலை செய்கிறேன் என்றே தெரியவில்லை. ஆனால், காலையில் எழுந்ததிலிருந்து இரவு தூங்கச் செல்லும் வரை பரபரப்பாகவே



இருக்கிறேன்....' - சமீபத்தில் என்னைச் சந்தித்த தனியார் கம்பனி மானேஜர் ஒருவர் இப்படிக் குறைப்பட்டுக் கொண்டார். அவரிடம் நான் சொன்ன கருத்துக்களை உங்களிடமும் பகிர்ந்து கொள்ள ஆசைப்படுகிறேன்.

பாஸ்ட் புட்... ஸ்பீட் போஸ்ட்... இன்ஸ்டன்ட் காபி என்றுதான் நாம் சிந்தித்துக்கொண்டிருக்கிறோம். பில்கேட்ஸ் சொல்வது மாதிரி Business @ the speed of thought என்பது மாதிரி சிந்தனையின் வேகத்தில் செயலாற்ற முடியுமா என்று சீறிப் பாய்ந்து பறந்துகொண்டிருக்கிறோம். வேகமாக ஓடுகிறோமே தவிர, சரியான ஓடுபாதையில்தான் ஓடிக் கொண்டிருக்கிறோமா என்று ஒரு நிமிடம் நின்று சரிபார்ப்பதற்குக் கூட நம்மில் பலருக்கு நேரமில்லை.

மனைவியிடம் மனம்விட்டுச் சிறிது நேரம் பேசுவது, குழந்தைகளுடன் விளையாடுவது - இதெல்லாம் 'வேலை வெட்டியில்லாதவர்கள் செய்யும் வேலை'என்று கருதும் அளவுக்குப் பலரின் வாழ்க்கைமுறை மாறிவிட்டது.

திறமையும், வெற்றியும் வாழ்க்கையில் முக்கியம்தான். ஆனால், அதை அடைய வேண்டுமானால், 'சுறுசுறுப்பாக இருக்கிறேன் பேர்வழி' என்று வெறும் படபடப்பாக இருந்தால் மட்டும் போதாது.

ஒரு வேட்டைக்காரனையே உதாரணமாக எடுத்துக் கொள்ளுங்கள்.... வேட்டையாடுவதில் உள்ள சுகம் ஒன்றுக்காகவே அவன் பறவைகளைச் சுடும் போது பெலும்பாலான சமயம் அவன் குறி தப்புவதில்லை. ஆனால், அதே வேட்டைக்காரனை ஆசிய விளையாட்டுப் போட்டிக்குக் கொண்டு சென்று, துப்பாக்கி சுடும் போட்டியில் கலந்து கொள்ளச் சொன்னால் அவனுக்கு கை, கால் எல்லாம் நடுங்கும்.

காரணம் - வேட்டையாடும் போது அவனுக்கு இருந்தது ஒரே இலக்கு. ஆனால், விளையாட்டுப் போட்டி என்று வந்துவிட்டபின், அவன் முன்னால் இரண்டு இலக்குகள் தெரியும். ஒன்று - துப்பாக்கியால் சுட வேண்டிய இலக்கு. இரண்டாவது - தங்கப் பதக்கம். இது போன்ற சூழ்நிலையில் வேட்டைக்காரனின் சிந்தனை துப்பாக்கியின் இலக்கைவிட, போட்டியில் ஜெயித்துப் பெறும் தங்கப்பதக்க இலக்கில்தான் குவிந்திருக்கும் என்று சொல்லித் தெரியவேண்டியதில்லை.

ஒரு விஷயத்தை நன்றாக யோசித்துப் பார்க்க வேண்டும். தேவையில்லாத வேகமும் படபடப்பும் வரும்போது வேட்டைக்காரனின் திறமை சிதறிவிடாது. ஆனால், அவன் சிந்தனை சிதறிவிடும்.

பாடகி ஒருவர் கிராமிய இசைப் போட்டியில் பாடுவதைவிடவும் தனக்காக, தன் சந்தோஷத்துக்காகத் தனிமையில் பாடும்போதுதான் மிக இனிமையாக இருக்கும் என்பார்கள். அதே மாதிரிதான் அடுத்தவரின் பாராட்டுக்காகவோ, பரிசுக்காகவோ செய்யாமல் ரசித்து, அனுபவித்துச் செய்யும் வேலைதான் சிறப்பானதாக இருக்கும்.

தாவோயிஸத்தில், "நல்லவனாக இருப்பது எப்படி?" என்பதற்கு ஓர் உபாயம் சொல்வார்கள். இந்த உபாயத்திலேயே திறமையானவனாக இருப்பது எப்படி என்பதற்கான சூட்சுமமும் ஒளிந்திருப்பதாக நான் நினைக்கிறேன்.

அவர் மிகப் பெரிய ஞானி. அவரிடம் ஒரு நாள் அவரின் சீடர்கள், "சுவாமி, எது நல்லது, எது கெட்டது என்ற குழப்பம் அடிக்கடி எங்களுக்கு வந்துவிடுகிறது. கெட்டதைப் புறம் தள்ளி நல்லதை மட்டுமே செய்து நல்லவர்களாக வாழ நாங்கள் விரும்புகிறோம். எங்களுக்கு வழிகாட்டுங்கள்!" என்று கேட்டுக்கொண்டார்கள்.

அதற்கு அந்த ஞானி சொன்னார்... "செருப்பு நம் காலைக் கடித்துக் கொண்டிருக்கும் வரை நம் கவனம் முழுதும் காலிலேயே இருக்கும். செருப்பு எந்தவிதப் பிரச்சினையும் இன்றி காலில் பொருந்திவிட்டால் அதன்பின், நாம் காலையே மறந்து விடுவோம். அதே போலத்தான் நல்ல எண்ணங்கள் நம் மனதில் சரியாகப் படியாதவரை எது நல்லது, எது கெட்டது போன்ற உறுத்தல்களும், குழப்பங்களும் இருந்துகொண்டே இருக்கும். நல்ல எண்ணங்கள் மனதில் சரியாகப் பொருந்திவிட்டால் இந்த மாதிரி கேள்விகளுக்கே இடமிருக்காது."

இப்போது திறமையானவராக ஆவது எப்படி என்ற கேள்விக்கு மீண்டும் வருவோம்.

'திறமையானவன் என்று பெயர் எடுப்பது எப்படி? திறமையானவனாகக் காட்டிக் கொள்வது எப்படி?' என்பது மாதிரியான கேள்விகள் குடைந்து கொண்டேயிருந்தால் ஒருவர் பரபரப்பும் பதற்றமும் மட்டுமே நிறைந்தவராக இருப்பார்.



இந்த இடத்தில் தாவோயிஸத்தில் இருந்து மீண்டும் ஒரு கதையைச் சொல்வது பொருத்தமாக இருக்கும் என நினைக்கிறேன்.

ஒரு நாள் இளவரசன் ஒருவன் தன் படைகளோடு காட்டுக்குச் சென்றான். அவனைப் பார்த்ததும் மரக்கிளைகளில் விளையாடிக்கொண்டிருந்த குரங்குகள் எல்லாம் ஓடிவிட்டன. ஆனால், ஒரே ஒரு குரங்கு மட்டும் இவனைச் சற்றும் சட்டைசெய்யாமல் மரத்துக்கு மரம் தாவித் தாவி விளையாடிக் கொண்டிருந்தது. இது அந்த இளவரசனுக்கு எரிச்சலை ஏற்படுத்த... அந்தக் குரங்கை நோக்கி ஓர் அம்பை எய்தான். அந்தக் குரங்கோ தன்னை நோக்கிப் பாய்ந்து வந்த அம்பை அநாயாசமாகக் கையால் பிடித்துத் தூர வீசியது.

கோபமடைந்த இளவரசன், தன் படையினர் அத்தனை பேரையும் குரங்கை நோக்கி அம்புகளை வீசச் சொல்லி உத்தரவிட்டான். அடுத்த கணம் நூற்றுக்கணக்கான அம்புகள் அந்தக் குரங்கின் மீது பாய.... அது அந்த இடத்திலேயே பரிதாபமாக உயிர்விட்டது.

ஒருவனுக்குத் திறமை இருந்தால் அதை அத்தனை பேருக்கும் எக்ஸிபிஷன் வைத்துக் காட்டக்கூடாது. நீங்கள் போட்டிகள் நிறைந்த தனியார் அலுவலகங்களில் பணிபுரிபவராக இருந்தால் இந்தக் கதை சொல்லும் நீதியை உங்களால் எளிதில் புரிந்து கொள்ள முடியும். வெறுமே ஷோவுக்காக ஒருவர் தன் திறமையை அடுத்தவருக்குக் காட்டிக்கொண்டிருந்தால் அதுவே அவரின் அழிவுக்குக் காரணமாகிவிடும்!

(தொடர்ந்து வரும்.....)

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே! உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும். பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

குறுக்கெழுத்துப் போட்டி இல. 193க்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.

தவகுமார் அபிலாஷ், ஆண்டு 2F, இந்துக் கல்லூரி, பம்பலப்பிட்டி.

### பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.

1. எம். ஜே. பெர்னாண்டோ, கொட்டாஞ்சேனை, கொழும்பு - 13
2. ஆர். ஜெகதீஸ்சன், பதுளை.
3. எம். ராமமூர்த்தி, 46, குமரன் ரத்தனம் வீதி, கொழும்பு -02.
4. அ. சந்தியாகோ, அசோகா வித்தியாலயம், கண்டி.
5. க. கார்த்திகேசன், பாபாபதி இல்லம், 89, ரொசிட்டா வீடமைப்புத்திட்டம், கொட்டகலை.
6. க. கமால்தீன், புன்னக்குடா வீதி, ஏறாவூர் -03
7. பைசுல் அமீனா ஜலீல், 61/1A/1, மகாபுத்கமுவ, முல்லேரியாவ.
8. கே. பாக்கியநாதன், 35, ஹொரவப்பொத்தான, வீதி, வவுனியா.
9. எம்.பி. அகிலன், 39, கல்லூரி வீதி, திருமலை.
10. எம். சி. கலீல், 72, ஹனிபா வீதி, கல்முனை -05

### குறுக்கெழுத்துப் போட்டி 195

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | | 10 | 11 | |
| 13 | 14 | 15 | | 17 | 18 |
| | 20 | | 22 | 23 | 24 |
| 25 | | 27 | 28 | | 30 |
| 31 | 32 | 33 | 34 | | |

### இடமிருந்து வலம்

1.அண்மையில் பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட்ட முக்கிய விடயம்.
7.தந்திரத்திற்கு உவமிக்கப்படுவது.
10.பெண் ஆடு (திரும்பியுள்ளது).
13விவசாயம் என்றும் பொருள்படும் (திரும்பியுள்ளது).
17.கேடு அல்லது யுகமொன்று.
22.பிணம் என்றும் கூறலாம் (குழம்பியுள்ளது).
27.மரம் என்றும் பொருள்படும் (திரும்பியுள்ளது).
31.நிழல் அல்லது பிரதி என்று கூறலாம்.

### மேலிருந்து கீழ்

1. ஒன்பது என்றும் பொருள்படும் (குழம்பியுள்ளது).
2. பழங்காலத்து ஆடை (குழம்பியுள்ளது).
4. நெருக்கம் என்றும் கூறலாம்.
5. தாமரை (குழம்பியுள்ளது).
18. பனைமரத்தின் இளையது (குழம்பியுள்ளது).
22. நூறு என்ற எண்ணிக்கையையும் குறிக்கும்.
27. பெண்களுக்கு அதிகம் தொல்லை தருவது (தலைகீழ்).

### குறுக்கெழுத்துப் போட்டி 193 விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| நி 1 | ஷ 2 | யா 3 | ழை 4 | | யு 6 |
| ஜு 7 | சா 8 | | ஆ 10 | கு 11 | தீ 12 |
| வ 13 | | ள 15 | | மா 17 | ர் 18 |
| ல் 19 | கி 20 | லி 21 | | | |
| | ஜா 26 | | ஆ 28 | ள் 29 | கொ 30 |
| ம் 31 | ண 32 | வ 33 | | யு 35 | லை 36 |

### போட்டி விதிகள்:

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி, அஞ்சலட்டையில் ஒட்டி 28.11.2006 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள். அனுப்ப வேண்டிய முகவரி :

குறுக்கெழுத்துப் போட்டி இல-195
தினமுரசு வாரமலர்,
த.பெ. இல. - 1772,
கொழும்பு.

தங்கள் சரியான முகவரியையும், காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.

சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250 ரூபா பரிசுண்டு. அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

## மின்சாரக் கதைகள்

- வழங்குவது ராஹுல்

# அமுத நெருப்பு

நீ பக்கத்துப் போசனில் குடிவந்தாய்.
அந்த அடுக்குமனையே
பூந்தொட்டியானது.
வாலிபக் கண்கள் தேனீக்களாகின.
யுவதிகள் இதயங்கள் இனிப்பு
இழந்தன.
உன்னை என் கண்கள்
உண்டதிலிருந்து இதயத்துடிப்பு
ஆயிரம் கிலோ மீற்றர் வேகமானது.
உன் நிறம் கண்டால் தங்கம்
பொறாமைப்படும்.
நீ பூஞ்சோலைப் பக்கம் சென்றால்
பூக்களெல்லாம் உன்னை வணங்கும்.
நீ பகலில் குளித்தால் விண்மீன்கள்
எட்டிப்பார்க்கும்.
என் விழிகளை
நட்சத்திரங்களாக்கினாய் நீ.
உன்னைப் பார்த்த கிளைகள் 'இவள்
போல் ஒரு பூ பூக்கச் செய்' என்று வேரிடம்
விண்ணப்பிக்கும்.
நீ என் கண்களின் சொர்க்கமானாய்.
மனதின் அமுதமானாய்.
நீ கல்லூரிக்குக் கனவு கொடுக்கச்
செல்லும்போது உன் முகத்தை என்
கண்கள் தொட்டுக் கொள்ளத் தவறுவதே
இல்லை.
உன் ஈரத்துணிகளை
உலர்த்துவதற்காக நீ கொடியில்
போட்டிருந்தபோது என் கண்களுக்கு
விழா நடந்தது.
என் வயதுக்கு விருந்து கிடைத்தது.
ஆபிஸிலிருந்து வீட்டுக்குள் விழுந்தேன்.
நீ என் அம்மாவோடு வார்த்தைகள் செய்து
கொண்டிருந்தாய்.
என் இதயம் தேன் ஆற்றில் மிதந்து
சென்று கொண்டிருந்தது.
என் வாலிபம் வசந்தம் சுமந்தது.
'இது பக்கத்துப் போசனில்
குடிவந்திருக்கிற பொண்ணு'
அம்மா அறிமுக உரை நிகழ்த்தினாள்.
நான் உன் அழகு தொழுதேன்.
'லோ...! என்றேன்
நீ புன்னகை ஊற்றினாய்.
உன் பார்வையை நேரடியாகக்
குடித்தேன். காதல் போதை கண்டேன்.
'உங்கக் கிட்டே இங்கிலிஸ் படிக்க
வேணுமாம்...'என்றாள் அம்மா.
உனக்காக நான் பிரென்சு, ஜெர்மன்
பாஷைகள் கூட கற்றுக் கற்பிக்கத் தயார்.
நீங்க...இங்கிலிஸ்ல கவிதைகள்
எழுதுவீர்களாமே...? என்றாய் நீ.
நான் மௌனமாக மலர்ந்தேன்.
என் புகழ் உன்னை அடைந்ததில்
மகிழ்ந்து போனேன் நான்.
நான் இதயத்தால் வேர்த்தேன்.
உன் புல்லாங்குழல் குரல் பருகி நான்
பூத்தேன்.
சில நிமிடங்களில் சென்று விட்டாய் நீ.
அந்த நிமிடங்களைப் பிடித்துவைத்தேன்,
ஆயுள் வரை பாதுகாப்பதற்காக!
அவை மிக அழகான நிமிடங்கள்.
ஒரு பேரழகியைப் பக்கத்தில் வைத்துப்
படம் பிடித்த நிமிடங்கள் அவை.
உன்னில் என் இதயம் புகுந்து
கொண்டதிலிருந்து தூக்கம் திருடிவிட்டாய் நீ.
நீ சில சொற்கள் செய்த பிறகு என் மூச்சு
உன் பெயர் உச்சரிக்கத் தொடங்கியது.
நீ நடந்து வரும் அழகு பார்த்து
தாமரைகள் குளத்தில் மூழ்கிச் செத்தன.
நீ விழிகளால் விண்ணப்பித்ததுபோல்.
உன் மொழியை எனக்காக நீ
கொண்டுவந்தது போல் எனக்குள் பூரிப்பு.
எனக்குள் தென்றலாக நீ வீசினாய் என்
உயிர் பூவாக அசைந்தது.
என் கண்களுக்குள் உன் முகம் வைத்தாய்
என் உடலெங்கும் கவிதைகள் முளைத்தன.
என் இதயம் அந்த இரவில் உன்னுடனேயே
கிடந்தது.
நீ என்னிடம் கற்க வரும் அந்த சொர்க்கப்
பொழுதுக்காக என் இதயத்தைத் தயார்
செய்தேன்.
'I have many new words
those for you.
Mywords are change
in ti the flowers.

I will be waitting for you
Until you come for me

If we joint
We can fly!' இப்படி...ஆங்கிலத்தால்
உன்னை ஏந்தினேன்.
நீ என் கவிதைகளை இன்னும் செதுக்க
வந்தாய்.
உன் கனவுகளை எனக்காக ஒதுக்கி
வைப்பாயா?
என் மனதைச் சலவை செய்து புத்தம்
புதிதாக உன்னிடம் கொண்டு வந்தேன்.
நீ என் அருகில் மலர்ந்தாய்.
'இங்கிலிஸ் மீது அதிக ஆசையா...?'
என்றேன் நான்.
நீ மௌனம் காட்டினாய்.
நான் உன் கண்கள் தொட்டேன்.
'எனக்கு இங்கிலிஸ்மேல்ல
ஆசையில்ல...ஆனா...என்னைக் கட்டிக்கப்
போகிறவர் விரும்புகிறாரோ. அதான்...' என்றாய்
நீ.
என் காதல் என் முன்னாடியே தீப்பிடித்து
எரிந்தது.

## இவ்வாரச் சிறு கதைகள்

# விட்டில்கள்

**எல்லாமே** கனவு போல் இருந்தது மாதவிக்கு. வாழ்க்கையின் நிலையாமைகளை உள்வாங்கிக் கொள்ள முடியாத மனம், சதா ஒரு நெருடலில் உழன்றுக் கொண்டேதான் இருக்கிறது. இதயம் கிழித்து இரத்தம் அருந்தும் அர்த்தமற்ற சமூக தேடல்களின் உள்ளார்த்தங்கள் புரியாமல் போகவே குழம்பிப் போகிறாள் மாதவி.

எல்லா நியதிகளுக்கும் நம்மால் விளக்கம் கூற முடிவதில்லை என்பதற்காக, புதுப்புது அர்த்தங்களைக் கற்பித்து புனிதத்தைக் கூட பூதக் கண்கள் கொண்டு பார்க்கும் ஊன உலகினை என்னவென்று சொல்வது. நடக்கும் எல்லா விடயங்களுக்கும் பொறுப்பாளிகளைத் தேடிப் பெற துடிக்கும் அவளின் மனம் இப்போது அதிகமாய் சோர்வடையத் தொடங்கியிருக்கிறது.

இழப்புகள் வாழ்க்கையில் மகா வேதனைதான். ஒப்புக் கொள்கிறேன்; அதற்காக ஒன்றின் இழப்போடு எல்லாமே முடிந்துவிட்டது என்ற நொண்டி பிரஸ்தாபங்களில் மாதவிக்கு உடன்பாடு கிடையாது. வாழ்க்கைத் திரைகளை விலக்கி, வசந்தங்களுக்கான வழிகளைக் காட்டும் காதல் புனிதமானது தான். மாதவிக்கும் கூட வசந்தங்களை காட்டியது காதல் என்பது உண்மைதான்.

உதயா அவன்தான் அவளின் வாழ்க்கை முகவரி. எல்லா மனிதர்களையும் எல்லோருக்கும் பிடிப்பதில்லை. ஆனால் உதயாவை எல்லோருக்கும் பிடிக்கும். அப்படியொரு தீட்சண்யம் அவனது முகத்தில். அதனால்தானோ என்னவோ அனுமதி இல்லாமலே அவளின் ஆன்மா அவன் வசம் அடைக்களம் பெற்றது.

ஒவ்வொரு தனி மனிதனுக்கும் வாழ்க்கையில் சில காலங்களை மறக்க முடியாது. மாதவியும் கூட உதயாவோடு நகர்ந்த அந்த நந்தவன நாட்களை ஆன்ம மூலத்தில் அப்படியே பதித்து வைத்திருக்கிறாள். எல்லோரையும் கவர்ந்த உதயாவால் மாதவியின் பெற்றோரை மட்டும் கவரவே முடியவில்லை. மாதவியும் தன் பக்க நியாயங்களை எவ்வளவோ எடுத்துச் சொன்னாள். அவர்கள் புரிந்து கொள்வதாய் இல்லை. சராசரி பெண்களோடு ஒப்பிடும்போது அவள் கொஞ்சம் தைரியசாலி. அதனால்தான் பெற்றோரை எதிர்த்து உதயாவைச் சேர்ந்தாள் மாதவி. பிறவிப்பயனை அடைந்துவிட்ட சந்தோஷத்தை நீங்கள் உணர்ந்ததுண்டா. அவள் உணர்ந்திருக்கிறாள். அதற்காக அநேகமான நாட்கள் ஆண்டவனுக்கு நன்றியும் சொல்லியிருக்கிறாள். அப்போதெல்லாம் அவளுக்குத் தெரியாது இந்த புனித உறவுக்கு ஆயுள் மிக சொற்பம் என்பது. காலமாற்றங்களில் அவள் கனவுகள் எல்லாம் கலைந்துப் போனது, உலக நடப்புகளுக்கெல்லாம் எப்படி நம்மால் விளக்கம் தர முடியாதோ அதே போல் விதிக்கப்பட்டவைகளில் மாற்றங்களை கொண்டு வருவதும் கூட சிரமமானது என்பதை உணர்ந்த மாதவி, அவளுக்கென்று ஒரு வாழ்வினை வடிவமைத்துக் கொண்டு வாழத்தலைப்பட்டாள். வரவுகளும் இழப்புகளும் வாழ்வில் சகஜமே. அதற்காக ஓரேயடியாக ஓரங்கண்டுக் கொள்வதில் அவளுக்கு உடன்பாடு கிடையாது.

சமூக பார்வைகளில் அவளுக்கான வாழ்க்கை முடிந்து போயிருக்கலாம். கணவனை இழந்தவுடன் வாழ்க்கையே முடிந்து விட்டதாய் தன் உரிமைகளையும் உணர்வுகள்ளையும் துறந்து ஓரங் கண்டுக் கொள்ளும் பெண்ணினத்தின் சாபக்கேடுகள் மீதுதான் அவளின் கோபம் எல்லாம். அவளுக்கும் ஆயிரமாயிரம் கனவுகள். எல்லாவற்றையும் தொலைத்து விட்டு நிராயுதபாணியாய் நிற்கும் அவளால், வாழ்க்கை முடிந்து போனதாய் முகம் மறைத்துக் கொள்ள முடியவில்லை.

இப்போதுதான் அவளுக்கு வாழ்க்கையின் மீதான பிடிமானங்கள் அதிகரித்திருக்கிறது. உள்ளுக்குள் புதிய புதிய உத்வேகங்கள் எண்ணங்களில் உரசி வாழ்க்கை குறித்த வழிகளை காட்டுகிறது.

அவளுக்காக இல்லாவிட்டாலும் அவளுக்கான கடமைகளுக்காவது வாழ வேண்டும் என எண்ணுகிறாள். ஆனால் சமூகத்து கழுகுப் பார்வைகள் அவளை கருணையின்றி கடித்துக் குதற காத்திருப்பது அப்போது அவளுக்குத் தெரியாது. அன்றும் அலுவலகம் செல்வதற்காக பஸ்ஸை எதிர்பார்த்து நிற்கிறாள். அவளே எதிர்பாராத விதத்தில் அவளின் உள்ளிடை உயரங்களை உரசிப் பார்க்கும் சமூகத் தேடல்கள் ஒரு கணம் இதயத்தை உலுக்கி நிசப்தம் கண்டது.

ஏண்டி பிரபா புருஷன் செத்து முழுசா மூனு நாள் முடியல. அதுக்குள்ள ஊர்சுத்த தொடங்கிட்ட...என்னடி செய்யிறது வயித்து பொழப்ப பார்க்கணும் இல்ல என்றதும் ஆடிப் போனாள் மாதவி, வெந்த புண்ணில் வேல் பாய்ச்சும் இந்த சமூக கட்டமைப்பில் என் பக்க நியாயங்களை கேட்கவும் கூட தயாரில்லாத மனித ஜந்துக்களில் எதை எதிர்பார்த்து என்ன புண்ணியம் என்ற சிந்தனையோடு மௌனித்துப் போனாள் மாதவி.

அன்றைய நாள் முழுவதுமே நரகமாக இருந்தது மாதவிக்கு. மனம் சங்கடப்படும் போதெல்லாம் ஆண்டவனின் சந்நிதியில் அடைக்கலம் பெறுவதுதான் வழமை. அன்றும் கோயிலுக்குச் சென்று வீடு திரும்பியவளுக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி. காரணம் நண்பி மதுரா வந்திருந்தாள்.

ஹாய் மது எப்படி இருக்க ரொம்ப நாளுக்குப் பெறகு என்னோட ஞாபகம் வந்திருக்கு போல. என்னடி ஏதாவது விஷேசமா என்றாள் மாதவி. இங்க பாரு மாதவி உன்னோட லைப் பத்தி கொஞ்சம் பேசணும். என்னோட லைப் அதுதான் எப்பவோ முடிஞ்சி போச்சே புதுசா அதப் பத்தி என்ன பேச போற...ஒன்னப் பார்த்தா லைப் முடிஞ்சி போனவ மாதிரி இல்லையே, அதுதான் பேச வந்திருக்கிறேன். உன்னோட பிரண்டா எத்தனையோ விடயங்களில் உனக்கு உதவியிருக்கிறேன்.


–சிவனு மனோஹரன், ஹட்டன்.


இப்பவும் சொல்றேன் இதுகூட உன்னோட நன்மைக்காகத்தான். உன்னப் பத்தி எல்லா இடமும் தாறுமாறா பேசுறாங்க. கேட்கவே ரொம்ப அசிங்கமா இருக்கு. ஒன்ன மாதிரி புருஷன் செத்தவங்க எல்லாம் இப்படியா இருக்காங்க. நமக்குக்னு ஒரு பாரம்பரியம் இருக்கு. அத மறந்திடாத உனக்கு, ஏற்பட்டிருக்கும் இழப்பு கொடுமையானதுதான். அதற்காக இப்படியா? ரொம்ப அசிங்கமா இருக்கு என்று கொட்டித் தீர்த்தாள் மதுரா.

பேசிட்டியா இல்ல இன்னும் ஏதாவது இருக்கா என்னைப் பற்றி இவ்வளவு அக்கறை எடுத்துக் கொள்ளும் சமூக அக்கறைக்கு ஒரு சலாம். அது எல்லாவற்றையும் விட என் மேல் உனக்கு இருக்கும் நம்பிக்கை எவ்வளவு ஸ்திரமாக இருக்கிறது. எனக்காக இந்த சமூகம் காட்டும் அக்கறை என்னை வளர்த்து விடுமானால் சந்தோஷம். அது என் கால் இடறி சந்தோஷிக்க காத்திருக்கும் செய்தி உன்னையும் வந்தடையும். அப்போது நீ பேசிய வார்த்தைகளுக்காக நாணப்பட வேண்டியிருக்கும். இங்க பாரு மது, என்னோட பாதையில் நான் நிதானமாக பயணித்துக் கொண்டிருக்கிறேன். இடையில் வரும் சின்னச் சின்ன சங்கடங்களுக்காக என் பாதையில் மாற்றங்களை கொண்டு வருவேன் என்று மட்டும் நினைக்காதே. விளக்கினை சுற்றும் விட்டில்களுக்காய் என் வாழ்க்கை தவங்களை களைத்துக் கொள்ளுமளவுக்கு நான் முட்டாள் கிடையாது. இப்போதுதான் நான் தெளிவாக இருக்கிறேன். தயவு செய்து என்னை தொல்லைப்படுத்தாதே என்றதும் வாயடைத்துப் போனாள் மதுரா. உள்ளுக்குள் இருந்த புழுக்கங்களை எல்லாம் கொட்டி விட்ட பெருமிதத்தில் அறையை நோக்கி விரைகிறாள் மாதவி.

*(யாவும் கற்பனை)*

# காதலுக்குக் கண்ணில்லை!

**அண்ணாமலை**, தூரத்தில் அவன் தந்தை கனகவேல் சோர்ந்த நடையுடன் அழுக்கு வேட்டியும் கையில் மஞ்சள் துணிப் பையுடனும் வருவதைக் கண்டான். அவனுக்குக் கோபம், கோபமாக வந்தது. இன்னும் கொஞ்ச நேரத்தில் கோமளா அவனைப் பார்க்க வரப்போகிறாள். இந்த சமயத்தில் இவர் இங்கே வந்தால்


–பாலா.சங்குப்பிள்ளை, ஹட்டன்.

என்னாவது... இன்றுதான் கோமளாவிடம் அவன் மனம் விட்டு பேசப்போகிறான். அவன் வேகமாக அவரை நோக்கி நடந்தான்.

"அப்பா நீங்க ஏன் இங்கேயெல்லாம் வாரீங்க. போன மாசம் தானே நான் வந்துட்டு போனேனே..."

அதுக்கில்லை அண்ணாமலை, உனக்கு இந்த வருஷம் தானே கடைசி வருஷம். உன் படிப்புக்காக வாங்கிய கடன் கழுத்துவரை வந்திடுச்சி. தோட்டத்துல வறட்சியால வேலையில்லை. உன் அக்காவைப் பொண்ணுப் பார்த்துட்டுப் போனவங்க எப்போ டேட் வைக்கிறீங்கன்னு கேட்கிறாங்க. தங்கச்சிக்கு டீச்சர் வேலை சரிவரும் போல இருக்கு - அதுக்கும் செலவு இருக்கு... இதெல்லாம் தெரிஞ்ச கதை தானே. புதுசா எதுக்காக மறுபடியும் சொல்லுறீங்க. கதை பழசுதான். ஆனா உனக்கு அடிக்கடி ஞாபகப்படுத்த வேண்டியதா இருக்கு. இப்பல்லாம் நீ ரொம்ப மாறிட்டே. நான் கேள்விப்பட்டேன், ஒரு வசதியான யாழ்ப்பாணத்துப் பொண்ணை கல்யாணம் பண்ண போறியாம். நீ கூட உன்னை ஒரு தோட்ட உரிமையாளரோட மகன்னு அந்த பொண்ணுக்கிட்டே சொல்லியிருக்கியாம். உன்னை யூனிவர்சிட்டிக்கு அனுப்பி பெரிய படிப்பு படிக்க வைக்கிறதுக்காக நாங்க ரத்தத்தை வியர்வையா சிந்துறோம், ஆனா நீங்கல்லாம் வளர்த்த கடா மார்பில பாயிறமாதிரி எல்லாம் முடிஞ்சதும் உறவை முறிச்சிட்டு பறக்க பாக்குறீங்க...

"இங்க பாருங்கப்பா...யாரோ என்னமோ சொன்னதைக் கேட்டுக்கிட்டு இங்க வந்து தேவையில்லாம பேசாதீங்க... அப்புடியே ஏதாவது நடந்தாலும் எவ்வளவு பணம் வேணும்னு சொல்லுங்க தந்துடுறேன்..."போடா போ...உன் பணம் யாருக்கு வேணும். நீயெல்லாம் பெரிய படிப்பு படிச்சி என்னடா ஆகப் போகுது. பெத்தவங்க மனசை நோகடிக்கிற நீயெல்லாம் எப்படிடா நல்லாயிருப்பே...உன் உடன் பிறப்புகளைப் பற்றியெல்லாம் கவலைப்படாம எப்போ உன் வாழ்க்கை உனக்கு முக்கியம்னு நினைச்சியோ அப்பவே எல்லாம் முடிஞ்சிப் போயிடுச்சி. புல்லையும், புண்ணாக்கையும் போட்டு மாட்டுக்கிட்ட, பால் கறக்கிற மாதிரி எங்களோட உழைப்பையும், உடைமைகளையும் பறிச்சிக்கிட்டு நீங்களெல்லாம் பட்டம், பதவின்னு சுகமா இருப்பீங்க. நாங்க நாதியில்லாம வீதியில கிடப்போம் அப்புடித்தானே. நல்லாயிரு. உன் இஷ்டப்படி செஞ்சிக்கிட்டு நல்லாயிரு...

கனகவேல் துண்டை விசிறி தோளில் போட்டுக் கொண்டு அந்த இடத்தை விட்டு வேகமாக நடந்தார். அண்ணாமலை எதுவும் பேசாமல் அந்த பல்கலைக்கழக வாசலிலிருந்த பெரிய மரத்தில் சாய்ந்து கொண்டான். அவன் தந்தை சொன்னது எதுவுமே அவனுக்குப் பெரிதாக உறைக்கவில்லை. ஆரம்பத்தில் அப்படித்தான் கத்துவார். பின்பு எல்லாம் சரியாகி விடும். என்னதான் இருந்தாலும் அவனால் கோமளாவை மறக்கமுடியாது. பெரிய இடத்துப் பெண்ணான அவளை கைப்பிடிப்பதற்காக அவனும் தன்னை வசதியுள்ளவனாகக் காட்டிக் கொண்டான். அவனுக்கு அவளுடைய காதல் தேவை. அதற்காக எத்தனை பொய்கள் வேண்டுமானாலும் சொல்வதற்கு அவன் தயாராக இருந்தான். இதில் வேடிக்கை என்னவென்றால் அவனோ அவளோ இன்னமும் தங்களின் காதலைப் பற்றி ஒருவரிடமொருவர் பேசியதில்லை.

"என்ன அண்ணாமலை நான் வந்தது கூடத் தெரியாமல் அப்படியென்ன கடுமையான யோசினை?"

அண்ணாமலை சட்டென நிமிர்ந்தான். எதிரே கோமளா நின்றிருந்தாள்.

அட கோமளாவா...வாயேன். கேன்டின் போய் பேசுவோம்...

இருவரும் அந்த தேநீர்சாலையை அடைந்தார்கள். அண்ணாமலை தேநீருக்கு ஓடர் செய்தான்.

அண்ணாமலை இண்டைக்கு நான் உங்களோட முக்கிய விடயமொன்று கதைக்கப் போறன்... சொல்லு கோமளா... நீங்க பெரிய வசதியான இடத்துப்பிள்ளை... நீ மட்டும் என்னவாம்...

இல்லையில்லை நீங்கள் என்னைப் பிழையா விளங்கிப் போட்டியள்...நான் தினம் புதுசு புதுசா போடுற உடுப்பைப் பார்த்து என்னை பெரிய பணக்காரின்னு நீங்க நினைச்சிட்டியள் போல. இதெல்லாம் என்னோட உயிர்த்தோழி கல்பனாவோட உடுப்புகள். அவளும் நானும் சகோதரிகள் மாதிரி பழகுறோம். வசதியான அவள், தனக்கு என்ன வாங்கினாலும் எனக்கும் சேர்த்தே வாங்குவாள். நாங்க ஒரே அறை, ஒரே பாடம், பாசத்திலயும் ஒரே மாதிரி. நான் யாழ்ப்பாணத்துல விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவள். எங்களோட வீட்ல நான் தான் பெரிய படிப்பு படிக்கிறன். எனக்குப் பின்னால மூன்று சகோதரிகள் இருக்காங்க. நான் பட்டம் பெற்றதும் நல்ல வேலையில சேர்ந்து என்னை நம்பியிருக்கிறவங்களைக் கவனிக்கவேணும். அதை விட்டுப் போட்டு எண்ட இஷ்டத்துக்கு எதையாவது செஞ்சா அது நம்பிக்கைத் துரோகம்தானே. அதுவும் போக நீங்க பணக்காரர் நான் ஏழை. மலைக்கும் மடுவுக்கும் எப்புடி பொருத்தமா இருக்கும். என்னோட சுகத்துக்காக நான் சுயநலத்தோட ஏதாவது முடிவு எடுத்தா அது என் பெற்றோருக்கு நான் செய்யும் பெரிய துரோகம் இல்லையா. காதலிக்கிறது குற்றமில்லை. ஆனா கடமையை மறக்கக் கூடாது. எப்படியிருந்தாலும் உங்களோட அந்தஸ்துக்கு முன்னால நான் ரொம்பச் சாதாரணமானவள். நாம் தொடர்ந்து நண்பர்களாவே இருப்போம். இதுதான் என்னோட தீர்க்கமான முடிவு...!

அவள் சொல்லிக் கொண்டே போனாள். அண்ணாமலை எதுவுமே பேச முடியாமல் கன்னத்தில் யாரோ 'பளார்' என அறையப்பட்ட நிலையில் சிலையாக அமர்ந்திருந்தான். காதலுக்காகப் பொய் சொல்லப் போய் இப்போது காதலே இல்லாமல் போய் விட்டது. பாவம் அவனுடைய காதலுக்குக் கண்ணில்லாமல் போய்விட்டது.

*(யாவும் கற்பனை)*

படித்துச் சுவைத்தவற்றில் சிலவற்றை உங்கள் சிந்தனைக்காக முன்வைக்கிறோம். உங்கள் அநுபவத்தையும் எம்முடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

## சிந்தித்துப் பார்க்க...

# குறள் சொல்லும் வாழ்க்கைத் தத்துவம்

இப்பரந்த உலகில் எத்தனையோ தரப்பட்ட மனிதர்கள்! இவர்களுள் சமூகத்தின் ஒழுங்குமுறைக்கேற்ப ஒழுகுபவர்கள் ஒருபுறமும், அதைவிட்டு விலகி தன்னிச்சையாக வாழ்பவர்கள் மற்றொரு புறமும், இவை இரண்டையும் விடுத்து, மற்றவரையும் வாழவிடாது தானும் நல்வழியில் செல்லாது வாழும் சிலரும் உண்டு. அவர்களின் மன இயல்பும், நீதி வழுவிய தன்மையும் ஒரு சமூகத்தையே பாதிக்கும் என்பதை அநேகர் சிந்திப்பதில்லை. இதனால், நெறியோடு வாழ நினைப்பவர்களுக்குச் சமூகமே வெறுத்து விடுகிறது. விளைவு....? சாது மிரண்டால் காடு கொள்ளாதென்ற நிலைமையைத் தோற்றுவிக்கிறது. ஒரு சமூகம் நல்ல நெறியைக் கையாளுமானால், தனிப்பட்ட மனிதன் துன்பப்பட நேரிடாது என்பதை பல உதாரணங்கள் மூலம் விளக்கலாம். ஆனால், கீழோரின் இயல்பு மேலோங்குமானால், அதுவே ஒழுக்கமாகிவிடக்கூடும் என்பது துணிபு. ஒவ்வொரு தனி மனிதனும் வள்ளுவன் விலக்களித்துள்ளவைகளைச் சிந்தனையில் எடுத்துக் கொண்டால் உலகம் உய்யும் என்பது திண்ணம்.

**"நாணாமை நாடாமை நாரின்மை யாதொன்றும்**
**பேணாமை பேதை தொழில்"**


*குறள் : 833*

பழிக்கு நாணாமையும், நல்லதை நாடாமையும், பிறரிடம் அன்பில்லாமையும், யாதொரு ஒழுக்கத்தையும் பின்பற்றாமையும் அறிவற்றவரின் செயலாகும்.

# கண்ணுக்குத் தென்படாத வெண்ணிலா!

இலக்கிய நயம்

அங்கயற்கண்ணியின் அறைக்குள் சென்ற கயல்விழி அந்த விசாலமான அறையை நோட்டமிட்டாள். ஆனால் அவள் கண்களில் அங்கயற்கண்ணி தென்படவில்லை. "எங்கே சென்றிருப்பாள்? ஒருவேளை உப்பரிகையில் இருப்பாளோ?" என்ற எண்ணம் தோன்றவே மெதுவாக நிலாமுற்றத்தை நோக்கி நடந்தாள். அவள் ஊகம் சரியாகத் தான் இருந்தது.



நிலாமுற்றத்தில் கருமேகங்களுக்குள் மறைந்திருக்கும் நிலாவின் வருகையும், மீண்டும் அதை வேறோர் முகிற் கூட்டம் வந்து மூடிக்கொள்வதையும், தளத்தின் கீழ் உள்ள மலர்வனத்தில் இருக்கும் தடாகத்தில் இருக்கின்ற அல்லி மொட்டுக்கள், நிலவின் வரவு கண்டு மலர்வதையும், நிலவை கருமேகங்கள் மூடும் வேளையில் கூம்புவதையும் அவதானித்துக் கொண்டிருந்த அங்கயற்கண்ணியைக் கண்டதும் மெதுவாக அவளருகில் சென்றாள். கயல்விழி தன்னருகில் வந்ததை அங்கயற்கண்ணி கவனித்ததாகத் தெரியவில்லை. கண்கள் மட்டும் முன்னால் தெரியும் காட்சிகளை நோட்டமிட்டதே தவிர அவள் எண்ணமெல்லாம் வேறு எங்கோ இருந்தது.

வெகு நேரமாக அவளருகில் எதுவும் பேசாமல் நின்ற கயல்விழி, 'இளவரசி!" என்றவாறு அவள் தோள்பட்டையில் கைவைத்ததும், திடுக்கிட்டுத் திரும்பினாள் அங்கயற்கண்ணி. திரும்பியதும் கயல்விழி அருகில் நிற்பதைக்கண்டதும் "கயல்விழி இப்போதுதான் வந்தாயா?" என்று அவள் கேட்டபோது அவள் குரலில் தடுமாற்றம் தொணித்ததை கயல்விழி கவனிக்கத் தவறவில்லை. என்ன இருந்தாலும் அவள் இளவரசியல்லவா! வெளிப்படையாக எதையும் கேட்டுவிடமுடியாதே என்ற நிலையில் அவளால் எதுவும் கேட்க முடியவில்லை. அதற்கான தருணம் வரும்வரை அவள் காத்திருந்தாள்.

அங்கயற்கண்ணியே பேச்சை ஆரம்பித்தாள். "கயல்விழி நீ ஏது இந்தப் பக்கம்?" என்றதும், கயல்விழி மெதுவாகச் சிரித்தாள். அந்தச் சிரிப்பில் ஏதோ அர்த்தமிருப்பதாக அங்கயற்கண்ணிக்குப் பட்டது. "கேட்ட கேள்விக்குப் பதிலளிக்காமல் சிரிக்கிறாயே!" என்றாள் அங்கயற்கண்ணி. "இந்தக் கேள்வியை நான் கேட்கலாமென்று எண்ணினேன், நீங்கள் முந்திக் கொண்டீர்கள்." என்றாள் கயல்விழி. "ஓ என்னைப் பற்றிக் கேட்கிறாயா? தூக்கம் வரவில்லை." என்று அங்கயற்கண்ணி கூறியதும், "இன்றைக்கு மட்டும் ஏன்?" என்று கயல்விழி கேட்டபோது, "ஒன்றுமில்லையடி. தூக்கம் வரவில்லை". "ஒன்றுமில்லை என்று நீங்கள் சொல்லும் பொழுதே ஏதோ இருக்கிறது என்று சொல்வது போலிருக்கிறதே?" என்றதும், அவளையறியாமலேயே நெடு மூச்சொன்று அங்கயற்கண்ணியிடமிருந்து வெளிப்பட்டது. அவள் மனதிலுள்ள ஏமாற்றத்தின் வெளியீடாக இருந்தபோதிலும், நேரடியாகக் கயல்விழியிடம் எப்படிக் கூறுவது என்பதுதான் அவள் மூளையைக் குடைந்து கொண்டிருந்தது. ஆனால், அன்று காலை கீர்த்திவர்மன் புறப்படப் போகும் நேரத்தைக் கேட்டுவரும்படி தன்னிடம் அவள் கூறியதும், அவன் சென்றுவிட்டபிறகு அவள் எதையோ பறிகொடுத்தவள் போல் தன்னினைவற்றவள் போல் காட்சியளிப்பதும், கீர்த்திவர்மனின் மேல் இவளுக்குக் காதல் ஏற்பட்டுவிட்டது என்பதை ஓரளவுக்கேனும் கயல்விழியால் ஊகிக்க முடிந்தது. அதனால் அங்கயற்கண்ணியிடம் துணிந்து கேட்டுவிடுவது என்ற எண்ணம் மேலெழுந்தபோது, விக்கிரமன் கூறியதும் அவளுக்கு மேலும் உற்சாகத்தைக் கொடுத்தது. "இளவரசி! உங்களை ஒன்று கேட்பேன், கோபித்துக் கொள்ளமாட்டீர்களே?" என்று கயல்விழி கேட்டதும், அவள் முகத்தைக் கூர்ந்து நோக்கினாள் அங்கயற்கண்ணி. அவளது புருவங்கள் உயர்ந்து தாழ்ந்தன, "என்ன கேட்கப்போகிறாய்?" என்று அவள் கேட்பது போலிருந்தது.

"நேற்று இரவு விருந்தினர் விடுதியில் தங்கியிருந்தவர் எப்போது புறப்படப் போகிறார் என்று என்னைக் கேட்டுவரச் சொன்னீர்களே, முன்பே அவரை உங்களுக்குத் தெரியுமா?" என்று கயல்விழி கேட்டதும், அங்கயற்கண்ணியின் முகத்தில் ஒருவித மாறுதல் ஏற்பட்டதை அவள் கவனித்த போது மேலும் அவளுக்குத் தெம்பு பிறந்தது. "இளவரசி! ஏன் தயங்குகிறீர்கள்? அவரை உங்களுக்குப் பிடித்திருந்தால், இளவரசரிடம் தெரிவிக்கலாமே!" "நிச்சயமாக உங்கள் விருப்பத்திற்கு தடை போடமாட்டார்" என்று முடித்தாள் கயல்விழி. இதைக் கண்டதும், அங்கயற்கண்ணியின் முகத்தில் வியப்புக்குறி தோன்றி மறைந்தது. அதில் ஓர் உற்சாகமும் தென்பட்டுத் தெறித்தது. "நீ என்னடி சொல்கிறாய்?" என்று அவள் கேட்டபோது கயல்விழி அவள் கைகளைப் பற்றியவாறு கூறினாள், "ஆம் இளவரசி! ஒரு நொடிப்பொழுது கூட நீங்கள் கவலையோடிருப்பதை இளவரசர் சகித்துக் கொள்ளமாட்டார். உங்கள் மகிழ்ச்சிதான் அவர் மகிழ்ச்சி. உங்கள் மகிழ்ச்சிக்காக அவர் எதையும் செய்வார் என்பதை நீங்கள் இன்னுமா அறியவில்லை?" என்று கயல்விழி கூறியது, அங்கயற்கண்ணியின் முகத்தில் ஆனந்தக் களிப்பைத் தூண்டியது. தன் கனவு நனவாகும் நாள் தூரத்தில் இல்லை என்பதை அவள் நினைத்தபோது, தன்னை அறியாமலேயே கயல்விழியின் கைகளைப் பற்றித் தன் கன்னங்களில் ஒற்றிக் கொண்டாள்.

அவள் இதயத்தின் இன்பநாதங்கள் ஓங்கி ஒலித்தன. அதில் பங்குகொள்ளத் தன் தலைவன் அருகில் இல்லையே என்ற ஏக்கம் மீண்டும் அவள் மனத்திரையில் கருமேகங்களாயினவோ? என்பது அவளுக்குத்தான் தெரியும்.

*"நோனா உடம்பும் உயிரும் மடலேறும்*
*நாணினை நீக்கி நிறுத்து."*

**அதிகாரம் : 114**
**குறள் : 1132**

## தருவது கற்பகன்

## சிந்தியா பதில்கள்

**'பட்ஜட்' பற்றிய சிந்தியாவின் 'பச்சக்' பதில் ப்ளீஸ்?**

*- வி. துரைசாமி, இரத்தினபுரி.*

பாதி அபிவிருத்தி, பாதி பயங்கர வாதம் - இரண்டுக்கும் நடுவே ஒரு அரசு சமர்ப்பிக்கக்கூடிய 'பட்ஜட்தான்'. பயங்கரவாதத்தைச் சமாளிக்க ஒதுக்கிய நிதியைவிட ஏனையவற்றுக்கான நிதி குறைவுதான்.

**சிந்தியா! அடுத்த 22ஆவது கூட்டமைப்பு எம்.பி யார் என்று கூற முடியுமா?**

*- சி. பரணீதரன், தலைமன்னார்.*

டிசம்பர் மூன்றாம் வாரத்துக்குப் பிறகு, இந்த விவகாரம் பற்றிப் பேசப் படுமென்று கூட்டமைப்புத் தகவல்கள் கூறுகின்றன. சிறீகாந்தா, சிறில் போன்றவர்களும் தயாராக இருக்கிறார்களாம்... முதலில் அன்னாரின் திருமதியை ஆலோசித்து விட்டுத்தான், அடுத்த கூட்டம் நடக்குமாம். நீங்கள் கேட்பதைப் பார்த்தால், "அண்ணன் எப்போது சாவான்? திண்ணை எப்போது காலியாகும்?" என்பது போல் காத்துக் கொண்டிருப்பவர்களுக்கு வசதியாக இருக்கிறதே?

**தமிழ் மக்கள் மனிதாபிமானப் பிரச்சினையை எதிர்கொண்டிருக்கையில், ஜனாதிபதி பிறந்தநாள் கொண்டாடுகிறார் என்று மகேஸ்வரன் எம்.பி கூறியிருப்பது துணிச்சலான கருத்து அல்லவா?**

*- வி. எஸ். நேரு, ஹெந்தளை.*

இந்தக் கேள்வியை ஜனாதிபதியிடம் கேட்க வேண்டும் என்று கேட்டாரா? இல்லை புலிகளின் தலைவரிடம் கேட்க நினைத்ததைக் கேட்டாரா என்பதை அவரே இன்னொரு அறிக்கையில் தெளிவு படுத்தினால் இன்னும் துணிச்சலாக இருக்கும்.

**இயக்குநர் பாலாவுக்கு என்ன நடந்தது? "நான் கடவுள்" படத்திலிருந்து முன்பு அஜீத்தைத் தூக்கினார். பின்னர் ஆர்யாவையும் தூக்கி விட்டாரே?**

*- பி. சரோஜா, நீர்கொழும்பு.*

அஜீத்தின் "வரலாறு" படம் தோல்வியடையும் என்று நினைத்த பாலாவுக்கு, அஜீத் நெத்தியடி கொடுத்தார். அதனால், "நான் கடவுள்" தோற்று விடக்கூடாது என்று பாலா யோசிக்கிறாராம். "அ, ஆ" எழுத்துக்களில் ஹீரோ இல்லாமல் "இ" எழுத்தில் இருந்தால் சொல்லுங்கள் என்று கூறும் பாலாவுக்கு "ஆழ்வார்" படம் வரட்டும் அடுத்த அதிர்ச்சி காத்திருக்கிறது என்கிறார் அஜீத்.

**ஈரான் அடுத்த ஆண்டு மார்ச் மாதம் தனது அணு ஆயுதத் திட்டம் வெற்றி பெற்றுவிடும் என்று கூறியிருக்கிறதே?**

*- ஏ.எம். ஜவ்பர், முறக்கொட்டான்சேனை.*

வட கொரியாவைத் தொடர்ந்து இப்போது ஈரான். இனி அடுத்த நாடுகளும் இந்த முயற்சியில் இறங்கும். அணு ஆயுதப் பரவலானது, பிராந்தியத்தில் பதற்றத்தை உருவாக்கும் என்பது நிச்சயம். இஸ்ரேலை அங்கீகரிக்கும் வரை அமெரிக்காவுக்கு இந்த நாடுகளைக் கட்டுப்படுத்தும் அருகதை இல்லை என்பதே உறுதியான நிலைப்பாடாக மாறி வருகிறது.



மனோஜ் – நந்தனா

**தமிழ் மக்களுக்கு உணவு அனுப்புவது தொடர்பில் இந்தியா சும்மா பம்மாத்துக் காட்டுவது போல் இருக்கிறதே?**

*- க.பழனிதாஸ், ஆலங்குளம்.*

உணவு அனுப்பி உதவுவது போல் பயங்கரவாதத்திற்கு எதிரான போராட்டத்திலும் இந்தியா உதவ வேண்டும் என்று ஜனாதிபதி கூறியது தொடர்பாக ஆலோசிக்கப்படுகிறது. ஜனாதிபதியின் விஜயம் இந்தச் சந்தேகங்களைத் தீர்த்துவைக்கும்.

**கால்பந்தாட்டப் போட்டிகளில் போல், கிரிக்கெட் போட்டிகளிலும், மஞ்சள், சிகப்பு அட்டைகளைக் காட்டும் நடைமுறை வந்தால் எப்படி இருக்கும்?**

*- எம்.எம்.நஸார் ஹுசைன், கல்கிஸை.*

இவ்வாறானதொரு முன்மொழிவை இங்கிலாந்து விளையாட்டுத்துறை அமைச்சர் 'ரிச்சட் கேப்ரன்' தெரிவித்துள்ளார். இதுபற்றி சர்வதேச கிரிக்கெட் சபை, ஏனைய நாடுகளின் கிரிக்கெட் சபையுடன் ஆலோசித்துவருகிறது. எழுதப்படாத சட்டங்கள் பொதுவாக குற்றங்களைக் குறைக்காது. நடுவரின் சட்டைப் பையில் கார்ட் இருப்பது நல்லது என்றுதான் நினைக்கிறேன்.

**அவுஸ்திரேலியாவில் நடக்கும் 'ஆஷஸ்' கிண்ணப் போட்டியில் யார் வெற்றி பெறுவர்?**

*- வை.சபேஷன், அக்கரப்பத்தனை.*

இங்கிலாந்தின் முக்கிய வீரர்கள் காயமடைந்து இருக்கிறார்கள். அவுஸ்திரேலியாவின் அனுபவமிக்க வீரர்கள் வெற்றியோடு ஓய்வு பெறுவது பற்றி யோசிக்கிறார்கள். பொன்டிங் மகிழ்ச்சியோடு இருக்கிறார். பிளின்டொப் சவால்களை எதிர்கொள்ள வேண்டியவராக இருக்கிறார். இம்முறை கிண்ணத்தை 'கங்காரு' கண் வைத்திருப்பது தெரிகிறது!

**சிந்தியா! நான் 'மொடலிங்' செய்ய விரும்புகிறேன். எனக்கு நீர் கூறும் ஆலோசனை?**

*- எம்.எச்.பரீட், தெமட்டகொட.*

முதலில் உங்கள் உயரம் 5 அடி 11 அங்குலமாக இருக்கவேண்டும். பெண்கள் என்றால் 5 அடி 6 அங்குலமாக இருக்க வேண்டும். சீரான உடற்பயிற்சி செய்ய வேண்டும். இவையெல்லாம் இருந்தாலும், உறுதியான அனுசரணையாளர்கள் இருக்க வேண்டும்.

**சிந்தியா! பத்மினி, ஸ்ரீவித்யா ஆகியோர் மரணமடைந்த செய்தியைப் போட்டு துக்கம் பகிர்ந்த நீர், ஈ.வி சரோஜாவின் மரணத்தை மறந்து விட்டீரா?**

*- கோ.மகேந்திரன், நாரஹேன்பிட்ட.*

எப்படி மறக்க முடியும்? அவரின் சொக்க வைக்கும் நடிப்பில் மயங்கிப் போன,அந்த நாட்களில் மதுரைவீரனில் "வாங்க மச்சான் வாங்க", குலேபகாவலியில் "குல்லா போட்ட நவாப்பு" ஆகிய பாடல்களையும் மறந்துவிட முடியுமா? 1951 ஆம் ஆண்டு திரையுலகுக்குள் பிரவேசித்த அவரின் முதல் படமே எம்.ஜி.ஆரின் தங்கையாக நடித்த "என் தங்கை" படம் தான். அதில் தொடங்கி, சுமார் 40 படங்களில் நடித்தவராயிற்றே. அந்தக் காலத்தில் அவரது கண்கள் தானே கதை பேசியது? என்ன மகேந்திரன்! திருப்தியா?



ஈ.வி. சரோஜா

# ஆஸி. கிழட்டு அணியா? கேப்டன் பொன்டிங் மறுப்பு

ஆஸ்திரேலிய அணியில் விளையாடும் பல வீரர்கள் வயது முதிர்ந்தவர்கள். அவர்களால் துடிப்புடன் விளையாட முடியாது என்ற குற்றச்சாட்டை ஆஸ்திரேலிய கேப்டன் பொன்டிங் மறுத்துள்ளார்.

இங்கிலாந்து - ஆஸ்திரேலியா அணிகளிடையே பரபரப்பான 'ஆஷஸ்' கிரிக்கெட் டெஸ்ட் தொடரில், முதல் டெஸ்ட் போட்டி இன்று வியாழக்கிழமை (நவ.23) பிரிஸ்பேனில் தொடங்குகிறது.


ரிக்கி பொன்டிங்

இந்த டெஸ்ட் போட்டியில் களமிறங்கும் ஆஸ்திரேலிய அணியில், 6 வீரர்கள் 35 வயதுக்கு மேற்பட்டவர்கள் என்பது அந்த அணிக்குப் பாதகமாக அமையும் என்று இங்கிலாந்து முன்னாள் கேப்டனும், சகலதுறை ஆட்டக்காரருமான இயான் போதம், ஆஸ்திரேலிய வேகப்பந்து ஜாம்பவான் டெனிஸ் லில்லி உள்ளிட்ட பிரபல முன்னாள் வீரர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இதற்கு கேப்டன் ரிக்கி பொன்டிங் மறுப்புத் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் கூறியதாவது: ஆஷஸ் தொடரை இங்கிலாந்திடம் இருந்து கைப்பற்றுவதற்கு, மூத்த வீரர்களின் அனுபவம் முக்கியமானது.

ஆஷஸ் போன்ற மிகப் பெரிய தொடரில் இந்த வீரர்களின் வயது ஒரு சுமையாக இருக்காது. அவர்களின் அனுபவம் அணிக்குக் கிடைத்துள்ள வரம். வீரர்களின் வயது பற்றிக் குறை சொல்வது முட்டாள்தனமானது. இது போன்ற வாதங்களை ஒதுக்கித் தள்ள வேண்டும்.

ஆஸ்திரேலியாவில் இப்போதுள்ள வீரர்களில் மிகச் சிறந்தவர்களையே தேர்வு செய்துள்ளோம். தொடரின் முடிவில் அதை நிரூப்பிபோம். இக்கட்டான நேரத்தில் எப்படி விளையாடுவது என்பதை, இந்த அனுபவ வீரர்கள் நன்கு அறிவார்கள். இதுதான் அவர்கள் கடைசியாக விளையாடும் டெஸ்ட் தொடர் என்பதை ஏற்க முடியாது.

இது குறித்து கவலைப்படாமல், சிறப்பான விளையாட்டை அவர்கள் வெளிப்படுத்த வேண்டும். இவ்வாறு பொன்டிங் கூறியுள்ளார்.

## ஹொக்கிப் போட்டி - ஆர்ஜென்டினா அணிகள் 'சாம்பியன்'!

**தென்** அமெரிக்க விளையாட்டுப் போட்டிகள் ஆர்ஜென்டினா தலைநகர் புவனஸ் அயர்ஸில் நடந்தது. இதன் ஆண்கள் ஹொக்கி இறுதிப் போட்டியில் ஆர்ஜென்டினா அணி, சிலி அணியை எதிர்த்து ஆடியது. தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்தி ஆடிய ஆர்ஜென்டினா அணி, தொடர்ந்து கோல் மழை பொழிந்த வண்ணம் இருந்தது. ஆனால் சிலி அணியால் ஒரு பதில் கோலைக்கூட திருப்ப முடியவில்லை. முடிவில் இந்த ஆட்டத்தில் ஆர்ஜென்டினா அணி 6 - 0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சாம்பியன் பட்டத்தை வென்றது.




இதன் பெண்கள் பிரிவில் நடந்த இறுதி ஆட்டத்தில் ஆர்ஜென்டினா அணி, சிலி அணியுடன் பலப்பரீட்சை நடத்தியது. சிறப்பாக ஆடிய ஆர்ஜென்டினா அணி 4 - 0 என்ற கோல் கணக்கில் சிலி அணியைத் தோற்கடித்து சாம்பியன் பட்டத்தை தட்டிச் சென்றது.


வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி...

நான் பிறந்தது உங்களுக்கு சேவை செய்ய மட்டுமே...

பண்டாரவளை மலையான மகா வசிய மாந்திரீகம்..

ஸ்ரீ மகா பத்திரகாளித் தாயின் அருளைப் பெற்றுள்ள



இன்றே தொடர்பு கொள்ளவும் 057-2224591-92

ஷர்மா சுவாமிகள்

உள்நாட்டு, வெளி நாட்டு அன்பர்களுக்கு சேவை செய்து அருள் அளிப்பார்.

நாம் வாழும் வாழ்க்கையில் பல பிரச்சினைகளை எதிர்கொள்கிறோம். அறிவிருந்து விடுபடுவதே எங்களின் நோக்கம். இப்படிப்பட்ட பிரச்சினைகளிலிருந்து விடுபட இருதடவை. யோசிக்காமல் என்னை சந்தித்தால் உங்களுக்கு வெற்றி நிச்சயம் என்பதை உறுதி செய்கிறேன்.

பார்த்துப் பார்த்துக் கொண்டிராதீர்கள் மன நம்பிக்கையோடு செய்து கொள்ளுங்கள்.

இன்றே சுவாமியவர்களைச் சந்தியுங்கள்

தொலைபேசி மூலம் பேசுங்கள். அல்லது முத்திரையுடன் கடித உறையொன்றை அனுப்புங்கள்.

சந்திப்பு

பண்டாரவளையில்
திங்கள் முதல் சனிக்கிழமை வரை
காலை 8.00 மாலை 6.00
நெடுஞ்சாலை காரியாலயத்திற்கருகில்
IDL நேர்சிங் ஹோம் மேல் பாதை

வெளிநாட்டவருக்கு விசேட ஏற்பாடுகள்!
தொ. பே. +94-572232441
+94-773227005

சகலவிதமான வசிய மாந்திரீகம்

- வீடு, வியாபார விருத்தி
- விவசாய விருத்தி
- நோய் நொடி சுகப்படுத்தல்
- விட்டுபிரிந்த கணவன் மனைவியர் மீண்டும் ஒன்று சேர.
- தாமதிக்கும் திருமணம் விரைவில் நிறைவேற
- குழந்தைப் பாக்கியம் கிட்ட
- விலைபோகாத காணிகள் விற்பனையாக
- எல்லா பரீட்சைகளிலும் சித்திபெற
- ஜாதகம் பார்ப்பது முதல் சகல ஜோதிட விடயங்கள்
- மண் பரீட்சை செய்தல்
- பிராணிகளை அகற்றுதல்

ஷர்மா சாமி அவர்கள்

P.O. Box 2, BANDARAWELA / பண்டாரவளை Regd. No. U/B 99/83
Tel. 077-3227005 057-2224591-92 078-5224681 Fax: 057-2232441
Website : sharmasami.com sribathrakaliamman_temple@yahoo.com

வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி...


# ஸ்போர்ட்ஸ்


ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ்

## வீடியோகான் டென்னிஸ் போட்டி சானியா - ருஷ்மி ஜோடி 'சாம்பியன்'

***வீடியோகான்*** டென்னிஸ் போட்டியில் சானியா - ருஷ்மி சக்கரவர்த்தி ஜோடி சாம்பியன் பட்டத்தை வென்றது.

வீடியோகான் கோப்பை அழைப்பு இரட்டையர் டென்னிஸ் போட்டி மேற்கு வங்காள மாநிலம், சிலிகுரியில் நடந்தது. இதில் பங்கேற்ற சானியா மிர்சா - ருஷ்மி சக்கரவர்த்தி ஜோடி, ஷிகா ஒபாராய் - நேகா ஒபராய் ஜோடியை எதிர்த்து ஆடியது.

தொடக்கம் முதலே இரு ஜோடியும் சமபலத்துடன் மோதின. முதல் செட்டை



கடுமையான போராட்டத்துக்குப் பின்னர் ஒபாராய் சகோதரிகள் 7-5 என்ற கணக்கில் கைப்பற்றினர். முதல் செட்டை இழந்ததால், 2ஆவது செட்டில் சானியா ஜோடி ஆக்ரோஷமாக ஆடியது. இதன் பயனாக 2ஆவது செட்டை சானியா ஜோடி 6-4 என்ற கணக்கில் தனதாக்கிக் கொண்டது.

இரு தரப்பும் தலா, செட்டைக் கைப்பற்றியதால் 3ஆவது செட் ஆட்டம் பலத்த பரபரப்புக்கு இடையே நடந்தது. டைபிரேக்கர் முறையில் நடந்த 3ஆவது செட் ஆட்டத்திலும் இரு ஜோடியும் கடுமையாக மோதின. முடிவில் 3ஆவது செட்டை சானியா ஜோடி 10-8 என்ற கணக்கில் கைப்பற்றியது. இதில் சானியா ஜோடி 5-7, 6-4, 10-8 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று சாம்பியன் பட்டத்தை வென்றது.

## ஆனந்த் 'சாம்பியன்'

**இ**ந்தப் போட்டியில் ஆனந்த், தனது 17 ஆட்டங்களில் 11 ஆட்டத்தில் வெற்றி பெற்றார். இதன் மூலம் 34 க்கு 23 புள்ளிகள் குவித்த இந்திய வீரர் ஆனந்த் சாம்பியன் பட்டம் வென்றார்.

உலகக் கோப்பைப் போட்டியில் சாம்பியன் பட்டம் வென்ற ஆர்மேனியா நாட்டு வீரர் அரோனியன் மொத்தம் 21 புள்ளிகள் குவித்து 2ஆவது இடம் பெற்றார். அவர் ஆனந்துக்கு எதிரான ஆட்டத்தில் 1-1 என்ற கணக்கில் டிரா செய்தார்.

இந்தப் போட்டியில் அஜர்பைஜான் வீரர் திமோர் ராஜபோவ், ரஷ்ய வீரர் பீட்டர் சீட்லெர் ஆகியோர் 3ஆவது இடம் பிடித்தனர். இருவரும் தலா 20.5 புள்ளிகள் எடுத்தனர்.

## பேனை...

06 ஆம் பக்கத் தொடர்ச்சி....

எழுத்துத்துறையோடு வேலையும் வாழ்க்கையும் என்று ஆன பிறகுதான் திருமண ஏற்பாடுகள் நடந்தன. அப்போதெல்லாம் சட்டைக்கு ஒரு பேனை என்று ஒவ்வொரு சட்டையிலும் பேனை இருக்கும். இருந்து என்ன பயன் விவாகப் பதிவாளர் கையொப்பம் இடுமாறு கூறும்போது, என் சட்டைப் பையில் பேனை இல்லை. பக்கத்தில் என் மனைவியின் தம்பி பிரேம் மச்சானிடம் பேனை வேண்டி கையொப்பம் இட்டதை மறக்கவே முடியாது. வாழ்க்கை அப்படித்தான் எல்லாமே நம்மிடம் இருப்பதாக உணர்வோம். அது முக்கியமான பொழுதுகளில் நம்மிடம் இருப்பதில்லை. நம் வாழ்க்கையில் மிகச் சாதாரணமாக கைமாறுவது பேனையாகத்தான் இருக்கும். அதுவும் வங்கிகளில் பேனை கைமாறு கேட்காதவர்கள் மிகவும் அரிது என்று கூறலாம். அதற்காகவே வங்கிகளில் பேனைகளுக்குத் தூக்குத்தண்டனை விதித்து போட்டிருப்பார்கள். நமக்கு உதவுவதற்காகவே பேனை தூக்கில் தொங்கிக் கொண்டிருக்கும். இதேநிலை தபால் நிலையங்களிலும் காணக்கூடியதாக இருக்கும். படையப்பா படப் பாடல்களை எழுதுவதற்காக கவிஞர் வைரமுத்துவுக்கு ஏ.ஆர்.ரஹ்மான் தங்கப்பேனை கொடுத்தார் என்று செய்தி படித்தேன். அதற்குப் பிறகு அண்மையில் முதல்வர் கருணாநிதிக்கு கலை உலகினர் நடத்திய வாழ்த்து விழாவில் வெள்ளிக் கதிரையும், தங்கப்பேனையும் கொடுத்தார்களாம். பரிசுப் பொருளாக தங்கமுலாம் பூசிய பேனை வழங்கப்படுவது ஒரு கௌரவமாகி வருகிறது. ●

## எண்களின் பலன்கள் எப்படி?

| எழுத்துக்கள் | எண்கள் | கிரகம் |
|---|---|---|
| A,J,I,Y,Q | - 1 எண் | சூரியன் |
| B,K,R | - 2 எண் | சந்திரன் |
| C,G,L,S | - 3 எண் | குரு |
| D,M,T | - 4 எண் | ராகு |
| E,H,N,X | - 5 எண் | புதன் |
| U,V,W | - 6 எண் | சுக்கிரன் |
| O,Z | - 7 எண் | கேது |
| F,P | - 8 எண் | சனி |

உதாரணம்: D.VISAGAN
4 6 1 3 1 3 1 5 = 24

## பிறப்பெண் - 7, கூட்டெண் - 8

7, 16, 25 போன்ற திகதியில் பிறந்து, திகதி, மாதம், வருடம் ஆகிய இம்மூன்றையும் கூட்டி வருகின்ற கூட்டு எண்ணாகிய உயிர் எண் 8 வருமேயானால் இவர்கள் கேது, சனி போன்ற ஆதிக்கத்தில் பிறந்தவராவர்.

இவர்கள் பார்ப்பதற்கு உயரமானவர்களாகவும், சிலர் குறைவான உயரத்துடனும் காட்சியளிப்பர். எவ்வளவு துயரம், துன்பம் வந்தாலும் தாங்கும் சக்தி பெற்றவர்கள். உழைத்து உயர்வு பெற நினைக்கும் இவர்களுக்கு, அடிக்கடி வாழ்க்கையில் சோதனை வருவதுண்டு. எதிர் நீச்சல்தான் நம் வாழ்க்கை என்பதனை உணர்ந்து போராடி வெற்றி பெற சளைக்காது உழைப்பர். உரமேறிய உடம்பு என்பதைவிட உறுதியான இதயம் என்பது குறிப்பிடத்தக்கது.

தனிமையில் சில நேரங்களில் தன்னுடைய வாழ்க் கையில் நடந்து வரும் நிகழ்ச்சிகளைச் சிந்தித்து வேதனை யுடன் ஆண்டவனிடம் பிரார்த்தனை செய்வர்.நல்ல குணம் படைத்த இவர்களுக்குத் திடீரென்று சில சந்தர்ப்பங்களில் முரட்டுக் குணம் தோன்றிவிடும். இதனால் இவர்களுக்குத் தீங்கு நேர்ந்து பின் வருந்துவர்.

ஒரு தவறைச் செய்ய மனம் இழுத்துக் கொண்டு செல்லும். உள் மனமோ ஏன் இதைச் செய்யப் போகிறாய் என்று திருப்பிக் கொண்டு வந்துவிடும். இப்படி மனப் போராட் டத்தில் தவிப்பர். பெயர் நன்றாக அமைந்தவர்கள் தனது முயற்சிகள் அனைத்தும் வெற்றியாக முடிவதாலும், நல்ல வாழ்க்கைத் துணைவர், நல்ல ஆரோக்கியம், நல்ல குழந் தைகள், நிறைந்த செல்வம் பெற்றதாலும், சிறப்புடன் வாழ்கின்றனர். ஆனால் பெயர் நன்றாக அமையாதவர்கள் ஆண்களாக இருந்தால் பெண்களாலும், பெண்களாக இருந் தால் ஆண்களாலும் பிரச்சினைக்கு உள்ளாகின்றார்கள். சிலருக்குத் திருமணம் ஆகி பிரிவு ஏற்பட்டுவிடுகிறது. இன் னும் சிலர் திருமணமே ஆகாது, தனிமையில் வேதனைப் பட்டு இளமை வீணாகிறதே என்று ஏங்குகின்றனர்.

பொதுவாக இந்த எண்ணிக்கைக்காரர்கள் முன் கோபியாக இருப்பதால் பலருடைய பகையும் உண்டாகிறது. இதனால் இவர்கள் பிறரிடம் பழகும்போது அளவோடு பழக வேண்டியது அவசியம். தன் மனதில் தோன்றுகின்ற கருத் துக்களை மறைத்து வைக்காது, பகிரங்கமாக வெளிப் படுத்துவர். சில நேரங்களில் ஊமை போன்று அமைதியா கவும் இருந்துவிடுவர். இவர்கள் மனம் எப்போதும் நிலையா னதாக இருக்காது. இந்த எண்ணிக்கையில் பிறந்த பலர் வாழ்க்கையில் திருப்தி காண முடியாது அமைதியில்லாது உள்ளனர்.

இதே நேரத்தில் பெயர் தனது பிறந்த திகதிக்குப் பொருத்தமானதாக அமையப் பெற்றவர்கள் உயர்ந்த முன் னேற்றம் பெற்று, தொழில் அல்லது உத்தியோகம் செய் கின்றனர். அதோடு நல்ல ஆரோக்கியம், நல்ல குழந் தைகள், நிறைந்த செல்வம் அமையப் பெற்று சிறப்புடன் வாழ்கின்றனர். சட்டம், சமயம், சோதிடம், மருத்துவம் போன்றவற்றில் ஆராய்ச்சி இருக்கும்.

பணம் ஈட்டுவதில் அதிக ஆர்வம் கொண்ட இவர்கள், பல்வேறு தொழில் மூலம் பணம் ஈட்டுகின்றனர். தூரதேசப் பயணங்கள் செய்வதன் மூலமும், இயற்கைக் காட்சிகளான மலைப் பிரதேசங்களைக் கண்டு களிப்பதனாலும் நீர்வீழ்ச்சி, நீர்த்தேக்கங்களைக் காண்பதனாலும் இவர்கள் மனம் அமைதி கொள்ளும். கலகலப்பாகப் பேசிப் பழகும் இவர்கள் திடீரென்று சிந்தனையில் மூழ்கிவிடுவர்.

பொதுவாக இவர்களுக்குப் பல்வேறு சோதனைகள் வந்தாலும், பெயர் பொருத்தமான நல்ல எண்களில் அமைந்து விட்டால், வாழ்க்கை சிறப்படையும். இதனால் வாசகர்கள் பெயரை நல்ல எண்களில் அமைத்துச் சிறப்பான வாழ்க்கையை அமைத்துக் கொள்வதே சிறந்தது.

***தொழில்*** : இந்த எண்ணிக்கைக்காரர்கள் கான்ட்ராக்ட் ஏஜென்ஸீஸ், கம்பியூட்டர், எலக்ட்ரானிக், எலக்ட்ரிக், மருந்து, சாப்பாட்டுப் பொருள், எழுத்து, பேச்சு போன்றவற்றாலும் மெட்டல் சம்பந்தமான அனைத்துத் தொழிலாலும், வாகனத்தாலும் உயர்வடைவர்.

***நோய்*** : இவர்களுக்கு வயிறு சம்பந்தமான கோளாறு, பல்வலி, நெஞ்சுவலி, முதுகுவலி, மூட்டுவலி, மனவியாதி போன்றவைகளும் இரத்த அழுத்தம், சர்க்கரை வியாதி போன்றவைகளும் வர வாய்ப்பிருப்பதால் சர்க்கரை, உப்பு போன்றவற்றைக் குறைத்துக் கொள்ளவும். வியாதியால் பாதிக்கப்பட்டவர்கள் 42 எண் வருகின்ற மாதிரி பெயரை மாற்றி அமைத்துக் கொண்டால் நோயிலிருந்து விடுபடலாம்.

***பெயர் அமைக்கும் முறை*** : இந்த எண்ணிக்கைக் காரர்களுக்கு சுக்கிரன், புதன் ஆதிக்கமான 15, 24, 33, 42, 51, 60, 69, 14, 23, 32, 41, 50, 59, 77 போன்ற எண்களில் பெயரை அமைத்துக் கொண்டு சிறப்படையலாம்.

***பின்பற்ற வேண்டியவை*** : யோகமான எண் - 2, 6, 5.
யோகமான திகதிகள் - 2, 11, 20, 29; 5, 14, 23; 6, 15, 24.
யோகமான மோதிரக்கல் - வைடூரியம், மூன்ஸ்டோன், டைகர்ஸ்-ஐ.
யோகமான நிறம் - பச்சை, நீலம், மஞ்சள்.
ஆகாத திகதி - 9, 18, 27; 8, 17, 26.
ஆகாத நிறம் - கறுப்பு, சிவப்பு.

அடுத்த வாரம் பிறப்பெண் 7, கூட்டெண் 9 பற்றிப் பார்ப்போம்.

# எர்னஸ்ட் ரதபோர்ட் (1871 - 1937)

**இருபதாம்** நூற்றாண்டின் தலைசிறந்த பரிசோதனை இயற்பியல் விஞ்ஞானி (Experimental Physics ) எனப் பொதுவாகக் கருதப்படுபவர் எர்னஸ்ட் ரதபோர்ட் (Ernest Rutherford ) ஆவார். கதிரியக்கம்(Radioactivity ) பற்றி இன்று நாம் பெற்றிருக்கும் அணுவியல் இயற்பியல்(Nuclear Physics ) பற்றிய ஆராய்ச்சியைத் தொடங்கி வைத்தவரும் அவரே. அவருடைய கண்டுபிடிப்புகள் அனைத்தும் அளவிறந்த கோட்பாட்டு முக்கியத்துவம் வாய்ந்தனவாகத் திகழ்ந்தவுடன், அணு ஆயுதங்கள், அணுமின் நிலையங்கள், கதிர் வீச்சு சுவடுகலங்கள்(Radioactive Tracers ) உள்ளடங்களாக பல்வேறு முக்கியப் பயன்பாடுகளையும் கொண்டிருந்தன.

# உலகை வியக்க வைத்தவர்கள்

எனவே உலகின் மீது அவருடைய செல்வாக்கு மிக ஆழமானது, இச்செல்வாக்கு நாளுக்கு நாள் வளர்ந்து வருகிறது, நீண்ட காலம் நீடித்து நிற்கக் கூடியது.


ரதபோர்ட், நியூசிலாந்தில் பிறந்து வளர்ந்தார். அங்குள்ள கான்டர்பரிக் கல்லூரியில் பயின்று, தம் 23 ஆம் வயதுக்குள்ளேயே மூன்று பட்டங்களை (பி.ஏ., எம்.ஏ., பி.எஸ்.சி.) பெற்றார். அடுத்த ஆண்டில், இங்கிலாந்திலுள்ள கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் படிப்பதற்கு அவருக்குப் படிப்புதவித் தொகை கிடைத்தது. அங்கு, அந்நாளில், தலைசிறந்த விஞ்ஞானிகளுள் ஒருவராகத் திகழ்ந்த ஜே.ஜே.தாம்சன்(J.J. Thomsan ) அவர்களின் கீழ் மூன்றாண்டுகள் ஆராய்ச்சி மாணவராக இருந்தார். பின்னர் தம் 27ஆம் வயதில் கனடாவிலுள்ள மக்கில் பல்கலைக்கழகத்தில் இயற்பியல் பேராசிரியரானார். ஒன்பது ஆண்டுகள் அப்பதவியில் நீடித்தார். 1907 இல் இங்கிலாந்து திரும்பி மாஞ்செஸ்டர் பல்கலைக்கழகத்தில் இயற்பியல் துறைத் தலைவரானார். 1919 இல் மீண்டும் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்திற்குத் திரும்பி, அங்குள்ள கேண்டிஷ் ஆய்வுகூடத்தின் (Cavendish Laboratory ) இயக்குநரானார். தம் ஆயுட் காலம் முழுவதும் அவர் அங்கேயே பணியாற்றினார்.

பிரெஞ்சு விஞ்ஞானி அன்டேய்ன் ஹென்றி பெக்கரல் என்பவர் 1896 இல் யுரேனியம் கூட்டுப் பொருட்களில் சில பரிசோதனைகளைச் செய்து கொண்டிருந்தபோது, கதிரியக்கத்தை தற்செயலாகக் கண்டுபிடித்தார். ஆனால், பெக்கரல் விரைவிலேயே இத்துறையில் அக்கறை இழந்தார். அதன் பின், இத்துறையில் நாம் பெற்றுள்ள அடிப்படைத் தகவல்கள் பெரும்பாலும் ரதபோர்டின் விரிவான ஆராய்ச்சிகள் மூலமே கிடைத்துள்ளன. (மேரி கியூரி, பியர் கியூரி இருவரும் போலோனியம், ரேடியம் என்ற மேலும் இரு கதிரியக்கத் தனிமங்களைக் கண்டுபிடித்தனர். ஆனால், அவர்கள் அடிப்படை முக்கியத்துவம் வாய்ந்த கண்டுபிடிப்புகள் எவற்றையும் செய்யவில்லை.)

யுரேனியத்திலிருந்து வெளியேறும் கதிரியக்க உமிழ் பொருள்களில் முற்றிலும் வேறுபட்ட இரு அமைப்பான்கள் அடங்கியுள்ளன என்பது ரதபோர்டின் முதல் கண்டுபிடிப்புகளில் ஒன்றாகும். இவற்றுக்கு 'ஆல்.்.பா கதிர்கள்' , 'பீட்டாக் கதிர்கள்' என்று அவர் பெயரிட்டார். கதிரியக்கப் பொருள்களிலிருந்து வெளிவரும் அணு நுண்ம வரிசையே ஆல்.்.பாக் கதிர்கள் ஆகும். கதிரியக்கப் பொருட்களால் உமிழப்படும் விரை செலவுடைய எதிர்மின்மங்களின் வரிசைதான் பீட்டாக் கதிர்கள். இந்த அமைப்பான்கள் ஒவ்வொன்றின் இயல்பையும் அவர் பின்னர் செயல் விளக்கமாகக் காட்டினார். இவற்றில் விரைந்து இயங்கும் துகள்கள் அடங்கியுள்ளன என்று மெய்ப்பித்தார். அத்துடன், மூன்றாவது அமைப்பான் ஒன்றும் இருப்பதாக மெய்ப்பித்தார். அதனை 'காமாக் கதிர்கள்' என்று அழைத்தார். இவை, மிகக் குறுகிய ஒளிக்கதிரலையுள்ள ஊடுருவு கதிர்கள் ஆகும்.

கதிரியக்கத்தின் மிக முக்கியமான அம்சம் அதில் அடங்கியுள்ள எரியாற்றலே ஆகும். இந்த எரியாற்றல், ஒரு புற ஆதாரத்தைக் கொண்டிருப்பதாக பெக்கரல், கியூரிகள், பெரும்பாலான மற்ற விஞ்ஞானிகள் அனைவரும் கருதினார்கள். ஆனால் இந்த எரியாற்றல், யுரேனியத்தின் தனித்தனி அணுக்களின் உள்ளிருந்து வருகிறது என்று ரதபோர்ட் மெய்ப்பித்துக் காட்டினார். இந்த எரியாற்றலின் அளவு, வேதியியல் வினைகளிலிருந்து வெளிப்படும் அளவைவிட மிகமிக அதிகம் என்பதையும் அவர் மெய்ப்பித்தார். அவ்வாறு செய்ததன் மூலம், அணு ஆற்றல் என்ற முக்கியமான கோட்பாட்டை உருவாக்கினார்.

தனித்தனி அணுக்கள் அழிக்க முடியாதவை - மாற்ற முடியாதவை - என்று விஞ்ஞானிகள் எப்போதுமே கருதி வந்தார்கள். ஆனால், ரதபோர்ட், ∴ பிரெடெரிக் சோடி என்ற மிகத் திறமை வாய்ந்த இளம் உதவியாளரின் உறுதுணையுடன், ஓர் அணு,ஆல்.்.பாக் கதிர்களையோ, பீட்டாக் கதிர்களையோ உமிழும் போதெல்லாம், அந்த அணு முற்றிலும் மாறுபட்ட தன்மையுள்ள ஓர் அணுவாக உருமாற்றமடைகிறது என்பதை மெய்ப்பித்தார். அவரது இந்தக் கூற்றை வேதியியல் வல்லுநர்கள் முதலில் நம்ப மறுத்தார்கள். ஆனால், யுரேனியத்தை ஈயமாக உருமாற்றக்கூடிய கதிரியக்கச் சிதைவுத் தொடர் சோதனைகளை ரதபோர்டும், சோடியும் செய்து காட்டினார்கள். சிதைவு விகிதங்களையும் அவர் அளந்து காட்டினார். 'அரை ஆயுள்' என்ற முக்கியமான கோட்பாட்டினையும் வகுத்துரைத்தார். இது விரைவிலேயே 'கதிரியக்கக் காலக் கணிப்பு' என்ற உத்திக்கு வழிவகுத்தது. இந்த உத்தி, மிகவும் பயனுள்ள அறிவியல் சாதனமாகப் பயன்படலாயிற்று. புவியியல், தொல்பொருளியல், வானியல் போன்ற ஏராளமான துறைகளில் இந்த உத்தி முக்கியமாகப் பயன்படுத்தப்படுகிறது.



இந்த அதிர்ச்சியூட்டும் கண்டுபிடிப்புக்கள், ரதபோர்டுக்கு 1908 இல் நோபல் பரிசு பெற்றுத் தந்தது. (பின்னர் சோடிக்கும் நோபல் பரிசு கிடைத்தது.) ஆனால், அவரது மிகச் சிறந்த சாதனை அதன்பின் தான் வரவிருந்தது. விரைந்தியங்கும் ஆல்.்.பா துகள்கள், ஒரு மெல்லிய தங்கத் தகட்டினை (துளை கண்ணுக்குப் புலனாகாமலே) ஊடுருவித் துளைக்கக் கூடியவை என்பதை அவர் கண்டறிந்தார். ஆனால், அத்துகள்கள் அவ்வாறு ஊடுருவும் போது சற்றே கோட்டமடையும் என்பதையும் கண்டார்.

**வியப்புக்கள் தொடரும்....**

# காதிலை பூ கந்தசாமி

## நோட்டீஸ் பலகை



> நான் சொல்வ தெல்லாம் பொய்.
> பொய்யைத் தவிர
> வேறொன்றுமில்லை
> *-காதில பூ கந்தசாமி-*

**வணக்கமுங்கோ!**

நான் முன்னமே சொன்ன மாதிரி அதில ஒரு தாக்குதல், இதில ஒரு தாக்குதல் எண்டு நடத்தி, சமாதானப் பேச்சுக்களையும் மெல்லமா பின்னுக்குத் தள்ளி, தங்கட ஆண்டறிக்கைக்கான திகதியை நெருக்கிப்போட்டினம். இனி இந்த வாரம் முடியுமட்டும் பிறந்த தின உரையும், அதுபற்றின வியாக்கியானமும் தான் கொஞ்சப் பேர் வாயில கிடந்து படாத பாடுபடும். அதிலையும், பிறந்ததின உரைக்கு வியாக்கியானம் குடுக்கிற நிலைமையில, வியாக்கியான வித்துவான் அன்ரன் பாலசிங்கம் இல்லை எண்டும் சொல்லினம். பாலசிங்கத்தாருக்கு முன்னரை விட உடம்புக்கு முடியாமல் கொஸ்பிட்டலில இருக்கிறாராம். சில பேர் சொல்லினம், அவையின்ர தலைவர் வாசிக்கப்போகிற இந்த ஆண்டுக்கான பிறந்த நாள் உரைதான் பாலசிங்கத்தார் எழுதிற கடைசி பிறந்ததின உரையெண்டினம். பாலசிங்கமும் உடம்புக்கு முடியாமல் அவதிப்பட்டது பாதியெண்டால், உடம்புக்கு முடியல்லை எண்டு ரெஸ்ட் எடுத்தது பாதி எண்டும் சொல்லினம். யார் என்னதான் சொன்னாலும், பாலசிங்கத்தார் பல பேச்சுவார்த்தைகள் கண்டு, பல பேரோடை கை குலுக்கி அனுபவம் பெற்றவர். அவரின்ர இடைவெளியை தம்பி சு.பா தமிழ்ச்செல்வன் ஈடுசெய்வார் எண்டு சில தளபதிகள் மட்டத்தில அபிப்பிராயம் இருந்தாலும், தலைவருக்கு அதில நம்பிக்கையில்லையாம். சர்வதேசத்தின்ர போக்கையும், தாங்கள் எந்தப் பொழுதுகளில பதுங்கிப் பாயவேண்டுமெண்டதையும் பாலசிங்கம்தான் தலைவருக்குச் சொல்லிறவர் எண்டதாலை, அவர் இல்லாமல் அவருடைய இடைவெளியை நிரப்ப முடியாது எண்டு தலைவர் சகபாடிகளிட்டைச் சொல்லுறாராம். உந்த பிறந்த தின உரையில என்ன முக்கியமான விஷயத்தைச் சொல்லப் போறார் எண்டு சில வெட்டிப்பேச்சு வீராச்சாமிமார் ஆருடம் கூறிக் கொண்டிருக்கினம்.

எனக்கென்னவோ உந்த உரையெண்டது, இந்த 2006ஆம் ஆண்டின்ர அறிக்கை எண்ட விதத்தில, பேச்சுவார்த்தை மேசையில அரசு இணங்கின ஆயுதக்குழு விவகாரத்தை நடைமுறைப்படுத்தவில்லை எண்டதையும், ஏ-ஒன்பது பாதை பூட்டப்பட்டதையும், சம்பூர் தாக்குப்பட்டதையும், கடைசியாக ரவிராஜ் கொல்லப்பட்டதையும் வச்சுக் கொண்டு சாம்பாரும், சட்டினியும் சமைச்சு ஒரு உரையை எழுதி நிச்சயம் வாசிக்கப் போகினம். அதிலையும், சமாதானத்துக்காக நாம் வழங்கிய சந்தர்ப்பங்களை சிங்கள தேசம் உதாசீனப்படுத்தி விட்டது எண்டதுதான் பிரதானமாக உரை முழுக்க நிண்டு உருளப் போகுது.

நான் உங்களோடை அலம்பிக் கொண்டிருக்கிறதில இருந்து அவரின்ர உரைக்கு இன்னும் மூண்டு நாள் இருக்குது. எண்டாலும் அவரின்ர கடந்த கால உரையைக் கேட்டுக் கேட்டு, ரொம்பப் பழகிட்டுது எண்டதாலை மேல நான் சொன்ன மாதிரி, அவர் விஷயங்களை உள்ளடக்கித்தான் உரையாற்றுவார்.

அவர் புதுசா ஏதாவது அதில சேர்க்க வேணுமெண்டால், ஒண்டில் சண்டையைத் துவங்கப்போறம் எண்டு சொல்ல வேணும். இல்லாட்டில் அது மாதிரியான ஒரு எச்சரிக்கையைக் காட்டி மிரட்டிற பாணியில பேச வேண்டும். உது ரெண்டுமில்லாமல், 'தங்கட தாகம் தமிழீழத் தாயகம்' எண்டு கடைசியில கொண்டு வந்து முடிக்கிறது உணர்ச்சி ஊட்டி உத்தமராசாக்களுக்குப் பெருத்த ஏமாற்றமாகத்தான் முடியுமுங்கோ. பட்ஜட்டில பாதுகாப்புக்கு நிதி ஒதுக்கீடு அதிகரிக்கப்பட்டிருக்கிறதாலை அது யுத்த பட்ஜட் எண்டும், ஆகையாலை தங்களாலை இதுக்கு மேலையும் பொறுக்க முடியாது எண்டும் தமிழ்ச்செல்வன் சொல்லியிருக்கிறார். எனக்கு உந்தச் செய்தியைக் கேட்டதில இருந்து சிரிப்பாக் கிடக்குங்கோ. அப்புடியெண்டால் இவைக்கு வேற பிரச்சினையே இருக்கயில்லை. உந்த பட்ஜட்டை யுத்த பட்ஜட்டாக அரசு திட்டமிட்டதுதான் பொறுக்க ஏலாத பிரச்சினையாகிட்டுது. என்ன மாதிரி, காலத்துக்குக் காலம் பிரச்சினைகளை அப்டேட் பண்ணினம் பார்த்தியளோ? முதலில தங்கட உறுப்பினர்களுக்குப் பாதுகாப்பு இல்லை எண்டிச்சினம். பிறகு பாதை மூடப்பட்டிருக்கு திறக்கப்பட வேண்டும் எண்டிச்சினம். பிறகு மக்கள் குண்டுவெடிக்கினம் எண்டிச்சினம். பிறகு பாடசாலைப் பிள்ளைகளைத் தாக்கிட்டினம் எண்டிச்சினம். பிறகு மக்களைத் தாக்கிப் போட்டினம் எண்டிச்சினம். பிறகு மனிதாபிமானப் பிரச்சினை எண்டிச்சினம். பிறகு ரவிராஜ் கொல்லப்பட்டார் எண்டிச்சினம். இப்பக் கடைசியாக யுத்த பட்ஜட் எண்டினம். உப்பிடி காலத்துக்குக் காலம் என்ன பிரச்சினை முதன்மை வகிக்குதோ, அதுதான் அவையின்ர முதல்தரப் பிரச்சினையாகுது. உதெல்லாம் ஏன் நடக்குது எண்டு யோசிச்சால், உந்த இனப் பிரச்சினையாலை தானே. அதுக்கு ஒரு தீர்வைக் கண்டால் சரிதானே எண்டு மட்டும் ஏன் யோசிக்கினமே இல்லை. இணக்கப்பாட்டுக்கும், இடைக்காலத் திட்டங்களுக்கும் இந்த அரசை நம்பலாம். நிரந்தரத் தீர்வைப் பற்றிப் பேச மட்டும் அரசை நம்ப ஏலாது எண்டால், அதுக்கு மட்டும் வானத்தில இருந்தே ஆக்கள் வருவினம்.

**யாவும் கலப்படமற்ற கற்பனை**

# இந்த வாரம் உங்கள் பலன்

(23.11.2006 தொடங்கி 29.11.2006 வரை)

## சோதிட மாமணி தில்லை

### இந்த வாரக் கிரக நிலை

விருச்சிகம் - சூரியன், வியாழன், வெள்ளி. கும்பம் - இராகு. சிங்கம் - சனி(வக்கரகம்), கேது. துலாம் - செவ்வாய், புதன். சந்திரன் தனு, மகரம், கும்பம் இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

**மேடம்** : (அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்.) தொழில் அலைச்சல், மனக்குறையதிகம், பெரியோர் நன்மை, காரியத்தடை, பணக்கஷ்டம், அந்நியர் நட்பு, உறவினர் உபத்திரவம், குடும்ப நன்மை, உத்தியோகப் பேறு, புதிய பதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- புதன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 03.**

**இடபம்** : (கார்த்திகைப் பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை.) தொழில் நன்மை, பணவரவு, உயர்ந்த நிலை, மனக்குறை நீங்கும், வெளியிடப் பயணம், செலவு மிகுதி, குடும்பப் பொறுப்பு, உத்தியோகப் பயம், மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்விக் குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வியாழன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 04.**

**மிதுனம்** : (மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்.) தொழில் பகை, காரியத்தடை, செலவு மிகுதி, மனக்கலக்கம், நண்பர்கள் உதவி, உறவினர் உபத்திரவம், குடும்பப் பொறுப்பு, உத்தியோகக் கஷ்டம், மாணவர் கல்விக் குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 07.**

**கர்க்கடகம்** : (புனர்பூசத்து நாலாங் கால், பூசம், ஆயிலியம்.) தொழில் அலைச்சல், பணச்செலவு, வீண்குறை கேட்டல், மனப்பயம், காணித் தகராறு, குடும்ப மேன்மை, புதிய செலவு, உத்தியோகத் தொல்லை, மேலதிகாரிகள் பகை, மாணவர் கல்வி மந்தம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 01.**

**சிங்கம்** : (மகம், பூரம், உத்தரத்து முதற் கால்.) தொழில் நன்மை, காரியானுகூலம், மனக்குறை நீங்கும், பெரியோர் உதவி, பிரயாண மிகுதி, பணச்செலவு, குடும்பச் சிறப்பு, உறவினர் தொல்லை, உத்தியோகப் பற்று, புதிய பதவி, மாணவர் கல்விக் குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வியாழன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 04.**

**கன்னி** : (உத்தரத்துப் பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை.) தொழில் குழப்பம், மனக்கலக்கம், பணவரவு தடை, வீண் பிரயாசம், முயற்சி பலிதம், உறவினர் உதவி, குடும்பப் பொறுப்பு, உத்தியோகச் சிக்கல், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி மந்தம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 03.**

**துலாம்** : (சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்.) தொழில் பேறு, பணவரவு, மனக்குறை நீங்கும், உயர்ந்தோர் நட்பு, மனமகிழ்ச்சி, உறவினர் உதவி, குடும்பச் சுகம், பிள்ளைகள் உதவி, உத்தியோக உயர்ச்சி, மாணவர் கல்வி மாற்றம், விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- புதன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 05.**

**விருச்சிகம்** : (விசாகத்து நாலாங் கால், அனுஷம், கேட்டை.) தொழில் பொறுப்பு, பணியாளர் தொல்லை, மனப்பயம், கடன்படல், வெளியிட வாழ்க்கை, தேகசுகக் கஷ்டம், மனக்குறையதிகம், குடும்ப நன்மை, சுபகாரிய மகிழ்ச்சி, உத்தியோக மேன்மை, மாணவர் கல்வி மந்தம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.**
**அதிர்ஷ்ட இலக்கம் :- 07.**

**தனு** : (மூலம், பூராடம், உத்தராடத்து முதற் கால்.) தொழில் கலக்கம், வீண் விரயம், எதிர்பாரா மனஸ்தாபம், வெளியார் தொல்லை, தூர இடப் பயணம், தேகசுகக் கஷ்டம், குடும்பப் பகை, மனக்கலக்கம், உத்தியோகப் பயம், மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.**
**அதிர்ஷ்ட இலக்கம் :- 06.**

**மகரம்** : (உத்தராடத்துப் பின் முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை.) தொழில் உயர்ச்சி, காரியானுகூலம், பொருள் வரவு, பெரியோர் சகாயம், பயனுள்ள செயல், குடும்ப நன்மை, சுபகாரிய மகிழ்ச்சி, உத்தியோகக் கஷ்டம், மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்விக் குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வியாழன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 04.**

**கும்பம்** : (அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்.) தொழில் கலக்கம், பணச் செலவு, மனக்குறையதிகம், இனசன நன்மை, பெரியோர் பகை, குடும்பச் செலவு, உறவினர் உதவி, உத்தியோகப் பொறுப்பு, மேலதிகாரிகள் சீற்றம், மாணவர் கல்வி மந்தம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 05.**

**மீனம்** : (பூரட்டாதி நாலாங் கால், உத்திரட்டாதி, ரேவதி.) தொழில் நன்மை, கௌரவம், காரியானுகூலம், செலவு மிகுதி, பிரயாணத் தொல்லை, தேகசுகக் கஷ்டம், மறைமுக நோய், குடும்பப் பாரம் உத்தியோக மேன்மை, பாராட்டு, மாணவர் கல்வி மாற்றம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 04.**

## 3ஆவது பிறந்தநாள் வாழ்த்து

முனைத்தீவைச் சேர்ந்த யோகராசா - பிறிஜிற் தம்பதிகளின் அருந்தவப் புதல்வி செல்வி யதுஷிகா (யது) தனது மூன்றாவது பிறந்த நாளை 25-11-2006 அன்று UK யிலுள்ள தனது இல்லத்தில் மிகவும் விமரிசையாகக் கொண்டாடுகிறார். இவரை அன்பு அம்மா, அப்பா, அன்புத் தம்பி மகிதன் மற்றும் இலங்கையில் வசிக்கும் அப்பப்பாமார், அப்பம்மாமார், அம்மப்பாமார், அம்மம்மாமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார், சித்திமார், மாமாமார், மாமிமார், அண்ணன்மார், அக்காமார், தம்பிமார், தங்கைமார், மச்சான்மார், மச்சாள்மார் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் முனைத்தீவு ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் அருள்பெற்றுப் பல்கலையும் கற்றுச் சீரும் சிறப்புடன் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

தகவல் : யோகராஜா (UK)



செல்வி யதுஷிகா (யது)
25.11.2006

## சகோதரிகள்

தென் இந்திய சினிமாவைப் பொறுத்தவரை நடிகைகளின் காலம் என்பது மிகவும் குறுகியதாகும். வாய்ப்பு இருக்கும் போது பணம் பார்ப்பது மட்டுமே நோக்கமாகக் கொண்ட நடிகைகளும் உண்டு. அப்படியான நடிகைகள் களத்தில் இருக்கும் போதே காணாமல் போய்விடுவார்கள். நடிப்புக்கு மட்டுமே முக்கியத்துவம் கொடுக்கும் நடிகைகள் மனதில் இருப்பார்கள்.

நடிகைகள் ஓரங்கட்டப்படுவதற்கு இன்னொரு காரணம், புதிய நடிகைகளின் வரவும், அவர்கள் காட்டும் தாராளமும் எனலாம். இதில் சகோதரிகள் இருவர் ஒரே நேரத்தில் பிரகாசிப்பது அரிது. தமிழ் சினிமாவில் இவ்வாறு இல்லை எனலாம்.

இங்கே படத்தில் இருக்கும் சகோதரிகள் ஹொலிவூட்டில் கலக்கிக் கொண்டிருக்கிறார்கள். "திரைக்குப் பின்னால் சொல்ல முடியாத பிரச்சினைகள் ஏராளமாமே?" என்று கேட்டால், "அப்படியெல்லாம் ஒன்றுமில்லை. சினிமா நிறையக் கற்றுத் தந்திருக்கிறது. என்கிறார்கள் இந்த இரட்டைச் சகோதரி நடிகைகள் கெல்லியும், சப்ரீனாவும். பாவம், மறைக்கத் தெரியாதவர்கள்!



## விபத்து

உலகின் பல்வேறு நாடுகளிலும் ஆங்காங்கேயும் அவ்வப்போதும் வானத்தில் விமானிகள் சாகச நிகழ்ச்சிகள் இடம்பெறுவதுண்டு. இந்தச் சாகச நிகழ்ச்சியொன்றின்போது, அதிக பார்வையாளர்களைப் பலியெடுத்து, அதிகமானவர்களைக் காயப்படுத்திய மிக மோசமான விபத்து உக்ரேய்ன் நாட்டில் இடம்பெற்றது. உக்ரேய்னின் ல்விவ் என்ற இடத்துக்கு அருகேயுள்ள ஸ்க்னிவிக் விமான தளத்தில் இந்த அனர்த்தம் 2002 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 27 ஆம் திகதி நடைபெற்றது. 78 பார்வையாளர்கள் கொல்லப்பட்டனர். நூற்றுக்கு மேற்பட்டோர் காயமடைந்தனர். பார்வையாளர்களைப் பரவசப்படுத்திக் கொண்டிருந்த சுகோய் சூ - 27 ரக யுத்த விமானம் திடீரெனச் சமநிலையை இழந்து, கீழே விழுந்து வெடித்தது. மரங்களை ஊடறுத்து வீழ்ந்த இந்த விமானம் தரையிலிருந்த கட்டடமொன்றின் மீது மோதியதால் வெடித்துச் சிதறியது. தீ மண்டலமும் அழுகுரல்களும் மட்டுமே மிஞ்சின.









பார்க்க மட்டும்..


தேசிய லொத்தர் சபை
நாட்டில் கோடீஸ்வரர்களை உருவாக்குகிறது.

**கொவிசெத லொத்தரின் அடுத்த கோடீஸ்வரரா நீங்களா ?**

**கோடீஸ்வரராகுங்கள், மென்மேலும் கொவிசெத டிக்கெட்டுகளை வாங்குங்கள்!**

**கொவிசெத**

இலங்கையரின் அபிமானத்திற்குரிய மகத்தான லொத்தர்



தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663, 2433631 இணையதளம www.nlb.lk